இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 37 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆவணி 29 – வெள்ளிக்கிழமை 15 செப்டம்பர் 2023 – திருச்சி ★★ 16 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 37: Thiruvalluvar Year - 2054 - Aavani 29 - Friday 15 September 2023 - Trichy ★★ 16 Pages ₹5.00



இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 15-09-2023

# ‘சனாதன’ ரவி

**சில** நாட்களாகச் சத்தமில்லாமல் இருந்தார் ஆளுநர் ஆர்.என். ரவி. திடீரென்று அவர் பெயரால் ஒரு அறிக்கை வந்திருக்கிறது. அதை வைத்துப் பார்க்கும் போதுதான், மிக முக்கியமான ஒரு காரியத்தில் அவர் இருந்திருப்பதை அறிய முடிகிறது. ‘சனாதனம்’ குறித்த ஆராய்ச்சியில் இருந்திருக்கிறார்.

**சனாதன தர்மம் குறித்து ஆளுநர் ஆர்.என்.ரவி அளித்துள்ள விளக்கத்தை ‘தினத்தந்தி’ நாளிதழ் (12.9.2023) வெளியிட்டுள்ளது. ‘சாதி சமூகப் பாகுபாடுகளுக்கு சனாதன தர்மத்தில் ஒருபோதும் இடமில்லை’ என்று ஆளுநர் சொல்வதாக அந்த நாளிதழ் தலைப்பு போட்டுள்ளது. ஏனென்றால் அந்த தலைப்பு மட்டும்தான் அவரது அறிக்கையில் புரியும். மற்றவை எல்லாம் அவருக்கு மட்டுமே புரியும் கருத்துகள் ஆகும்.**

சனாதனம் என்றால் ஆன்மிகம், வாழ்க்கை மற்றும் படைப்பு தொடர்பானதாம். இது ஒத்திசைவான கலாச்சாரத்தின் பரிணாம வளர்ச்சிக்கு வழிவகுக்கிறதாம். திடீரென்று ரிக் வேதத்தை ஆதாரமாகக் காட்டுகிறார். அதுதான் சனாதன தர்மத்தின் முதல் ஆவணப்படுத்தப்பட்ட வெளிப்பாடு என்கிறார். திடீரென உலக சமயங்கள் அனைத்துக்கும் தானே அத்தாரிட்டியைப் போல ஏதேதோ சொல்கிறார். உலகம் ஒரு குடும்பம் என்பதும் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பதும், வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் என்பதும் சனாதன தர்மம் என்று முடிக்கிறார்.

இதில் இருந்து ஒட்டுமொத்தமாக அவர் சொல்ல வருவது, சனாதன தர்மம் என்பது ஒற்றுமையைத்தான் போதிக்கிறது என்கிறார். சனாதன தர்மம் என்று இவர்கள் இதுவரை எதை எல்லாம் சொல்லி வந்தார்களோ, அதை எல்லாம் அவர்களே மறுத்துச் சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். இதுதான் மாண்புமிகு அமைச்சர் உதயநிதி போட்ட போடால் ஏற்பட்ட விளைவு ஆகும்.

**மனிதர்களுக்குள் பேதமில்லை என்று சொல்லிய போது, ‘இல்லை! பேதம் உண்டு, அது பிறப்பால் வருவது, இது ஆதியில் இருக்கிறது, கீதையில் இருக்கிறது, ரிக் வேதத்தில் இருக்கிறது, மனுவில் இருக்கிறது’ என்று சொல்லி நியாயப்படுத்தி வந்தவர்கள், ‘ஐயையோ! அப்படி எந்த வேறுபாடும் எதிலும் இல்லை’ என்று இப்போது சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள்.**

‘என் தோப்பு மாமரத்துல நீ ஏன் ஏறுகிறாய்?’ என்று கேட்டார் தோட்டக்காரர். மாட்டிக் கொண்டவன் சொன்னான்:’ தேங்காய் பறிக்கப் போனேன்’ என்றானாம். ‘மா மரத்துல தேங்காய் எப்படி இருக்கும்?’ என்று கேட்டார் தோட்டக்காரர். ‘இல்லைன்றதுனால தான் இறங்குகிறேன்’ என்றானாம். அப்படி இருக்கிறது இவர்களது வியாக்கியானங்கள் எல்லாம்!

**சனாதனத்தை தான் அமைச்சர் உதயநிதி விமர்சித்தார். மதத்தையே விமர்சித்துவிட்டதாகப் பரப்பினார்கள் பா.ஜ.க.வினர். இறை நம்பிக்கை வேறு - சனாதனம் வேறு என்பதே இவர்களுக்குத் தெரியவில்லை. மதத்தை கபளீகரம் செய்தது சனாதனம். அது தான் இந்தியாவில் எதிர்கொண்ட பிரச்சினையே!**

புகழ்பெற்ற வேதப்பண்டிதரான அ.ச.பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் என்பவர் உலகம் முழுக்க பயணம் செய்து கீதையைப் பரப்பியவர். அவர் எழுதிய முக்கியமான நூல், ‘பகவத் கீதை உள்ளது உள்ளபடி’ என்பது ஆகும். ‘ஆங்கில வார்த்தையான ரிலிஜன் என்பது ஸநாதன தர்மம் என்பதில் இருந்து வேறுபட்டதாகும். ரிலிஜன் என்பது ஒருவித நம்பிக்கையைக் குறிக்கும். நம்பிக்கை என்பது மாறக் கூடும். ஒரு குறிப்பிட்ட முறையில் ஒருவருக்கு நம்பிக்கை இருக்கலாம். அவர் தமது நம்பிக்கையை மாற்றி வேறொரு நம்பிக்கையைக் கடைப்பிடிக்கலாம். ஆனால் ஸநாதன தர்மம் என்பது மாற்ற முடியாத செயலைக் குறிக்கும்’ (பக்கம்21) என்று எழுதி இருக்கிறார்.

‘மனித சமுதாயத்தின் நால்வகை பிரிவுகள் என்னால் ஏற்படுத்தப்பட்டன. இம்முறையை படைத்தவன் நானேயாயினும் இதனை மாற்ற என்னாலே முடியாது’ என்கிறது கீதை. (அத்தியாயம் 4 ; ஸ்லோகம் 13).தங்களது சுபாவத்திலிருந்து பிறந்த குணங்களுக்கு ஏற்ற தன்மையில் தான் இந்த நால்வரும் வேறுபடுத்தப்படுகிறார்கள்.( அத்தியாயம் 18; ஸ்லோகம் 41). பிராமணர் - சத்திரியர் - வைசியர் - சூத்திரர் ஆகிய நான்கு பிரிவும் செய்ய வேண்டிய செயல், தொழிலைப் பற்றி ஸ்லோகம் 42,43,44 ஆகியவை சொல்கிறது. மற்ற மூன்று பிரிவினருக்கும் தொண்டு செய்வதே சூத்திரரின் வேலை என்கிறது ஸ்லோகம் 44. இந்தக் கடமையை மட்டும் செய் என்கிறது ஸ்லோகம் 47. இந்த தொழிலை விட்டு வேறு தொழிலைப் பார்க்காதே என்கிறது ஸ்லோகம் 48. இவை அனைத்தும் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தை தொடங்கிய ஆச்சாரியர் என அழைக்கப்படும் பக்தி வேதாந்த சுவாமி பிரபு பாதர் எழுதியதுதான்.

பெண்கள், வைசியர்கள், சூத்திரர்கள் என கீழ் குலத்தைச் சார்ந்தவர்கள் பாவ ……யில் பிறந்தவர்கள் என்கிறது கீதை. (அத்தியாயம் 9; ஸ்லோகம் 32) இப்படியா எழுதுவது என்று சின்மயானந்தாவே கண்டித்திருக்கிறார். ‘பாவப்பட்ட குடும்பத்தில் பிறந்தவர்கள்’ என்று டீசெண்டாக எழுதி இருக்கிறார் பிரபு பாதர். (பக்கம் 524)

**எதில் பிறந்தாயோ அதில் தான் நீ இருக்க வேண்டும், எந்த குலத்தில் பிறந்தாயோ அந்த குலக் கடமையைத்தான் செய்ய வேண்டும். இதனால் துன்பம் அனுபவித்தால் அது உன் முன்வினைப் பாவம், அது உன் கர்ம வினை, இந்த தலையெழுத்தை நீ மாற்றவே முடியாது என்பது தான் இவர்கள் காலம் காலமாக கற்பிக்கும் தர்மம். கர்மம் - தர்மம் என்பதெல்லாம் அவரவர் ஜாதி, குலத் தொழிலை நிரந்தரமாகச் செய்து கொண்டே இருக்க வேண்டும் என்பதுதான். சனாதனம் என்றால் மாற்ற முடியாதது, மாறாதது என்று இவர்கள் சொல்வது எல்லாம் இதை வைத்துத்தான். பிறப்பை மாற்ற முடியாதது என்பதே சனாதனக் கொள்கை.**

கவர்னர், ரிக் வேதத்தை சரியாகப் படிக்க வேண்டும். ரிக் வேதத்தின் பத்தாவது மண்டலம், 96ஆவது ஸ்லோகத்தை வாசிக்கவும். அதில் இது சொல்லப்பட்டுள்ளது. அல்லது திருச்சி கல்யாணராமன் பிரசங்கம் கேட்கவும். சனாதனத்தை முழுமையாக அறியலாம்.

••



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.9.2023) முகாம் அலுவலகத்தில், கழக பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், வேலூர் மாவட்டக் கழக செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார், வேலூர் மாநகர கழக செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ப.கார்த்திகேயன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் தி.அ.முகமது சகிஆகியோர் சந்தித்து, வேலூரில் 17.9.2023 அன்று நடைபெறவுள்ள தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா, தி.மு.க. பவள விழா மற்றும் தி.மு.க. முப்பெரும் விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார்கள்.

# தமிழ்நாடு முழுவதும் அனைத்து மக்களிடமும்

# கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தைக் கொண்டு சேர்த்திடுவீர்!

## கழக நிர்வாகிகளுக்கு - கழகப் பொதுச் செயலாளர் அமைச்சர் துரைமுருகன் வேண்டுகோள்!

**சென்னை, செப். 15 -**

**தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களால் செப்.- 15 அன்று தொடங்கி வைக்கப்படவுள்ள கழக அரசின் சாதனைத் திட்டமான “கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை” பட்டி தொட்டி முதல் பட்டணக்கரை வரை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மக்களிடமும் முழுமையாகக் கொண்டு சேர்க்க வேண்டிய ஏற்பாடுகளை கழக நிர்வாகிகள் செய்திட வேண்டும்” என்று கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.**



இது குறித்து கழகப் பொதுச் செயலாளர் அமைச்சர் துரைமுருகன் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அதில் கழக அரசின் மிக முக்கியமான மக்கள் நலத் திட்டமான “கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் பேறறிஞர் அண்ணா பிறந்தநாளான செப்டம்பர் 15 அன்று முதல்வர் அவர்களால், தமிழ்நாடு முழுமைக்கும் காஞ்சிபுரத்திலிருந்து தொடங்கி வைக்கப்படுகிறது.

பெறப்பட்ட 1 கோடியே 63 லட்சம் விண்ணப்பங்களில் 1 கோடியே 6 லட்சம் பேர்களுக்கு இந்த உரிமைத்தொகை வழங்கப்படுகிறது. நிராகரிக்கப்பட்டவர்களுக்கு என்ன காரணம், திரும்ப விண்ணப்பிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்படும் என முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்.

**ஒரு கோடி குடும்பங்கள்!**

ஒரு கோடி பெண்கள் என்பது கிட்டத்தட்ட ஒரு கோடி குடும்பங்கள் என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். கடுமையான நிதிச் சூழலிலும் ஒரு கோடி மகளிர் பயன்பெறும் வகையில் தொடங்கப்படும் இத்திட்டத்தை அனைத்து மக்களிடமும் முழுமையாகக் கொண்டு சேர்க்க வேண்டியது மிக அவசியம்.

இத்திட்டத்தை மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் பின்வரும் செயல்பாடுகளை மேற்கொள்ள அனைத்து ஒன்றிய நகர - பகுதி - பேரூர் கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் அனைத்து அணி நிர்வாகி களுக்கும் மாவட்டச் செயலாளர்கள் அறிவுறுத்த வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்ளப்பபடுகிறார்கள்.

**1.கோலம்:** 1000 ரூபாய் திட்டத்தை முன்னிறுத்தி வீடுகளில் ‘கலைஞர் உரிமைத் தொகைக்கு நன்றி’ ‘உரிமைத் தொகை 1000’ போன்ற வாசகங்களை எழுதி கோலமிட வேண்டும். அனைத்து நிர்வாகிகள் வீடுகளிலும் கோலமிடப்படுவதை மாவட்டச் செயலாளர்கள் உறுதி செய்ய வேண்டும்.

**2. சுவரொட்டிகள்:** மக்கள் கூடும் இடங்களில் அனுமதிக்கப்பட்ட இடங்களில் சுவரொட்டி ஒட்டி, விளம்பரம் படுத்த வேண்டும்.

**3. இனிப்பு வழங்குதல்:** பேருந்துநிலையங்கள், அங்காடிகள் உள்ளிட்ட மக்கள் அதிகம் கூடும் இடங்களில் இனிப்பு வழங்கி கொண்டாடிட வேண்டும். இனிப்பு வழங்கும் போது சிறு துண்டறிக்கையை சேர்த்து வழங்கிட வேண்டும்.

**4. சுவர் விளம்பரங்கள்:** கழகத்தின் சுவர் விளம்பரங்களில் மகளிருக்கு கட்டணமில்லாபேருந்து, புதுமைப்பெண் திட்டம், நான் முதல்வன், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், கலைஞர் உரிமைத் தொகை ஆகிய திட்டங்களை முன்னிலைப்படுத் தும் வகையில் சுவர் விளம்பரங் களை எழுத வேண்டும் என மாவட்டச் செயலாளர்கள் அனைத்து நிர்வாகிகளையும் வலியுறுத்த வேண்டும்.

**5. ஆட்டோ விளம்பரம்:** உள்ளூரில் ஆட்டோ ஏற்பாடு செய்து குறைந்தபட்சம் 2 நாட்களுக்கு அனைத்துப் பகுதிகளிலும் மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து, புதுமைப்பெண் திட்டம், நான் முதல்வன், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், கலைஞர் உரிமைத் தொகை உள்ளிட்ட அரசின் இரண்டாண்டு சாதனைகளை விளக்கி கழக அரசின் சாதனைகளை பிரச்சாரம் செய்திட வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு கழகப் பொதுச் செயலாளர் அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அழைப்பை ஏற்று சென்னை வந்து பயிற்சியில் ஈடுபட்டு சொந்த ஊர் திரும்ப உள்ள மணிப்பூர் மாநிலத்தைச் சேர்ந்த தேசிய, சர்வதேச வாள் வீச்சு வீரர், வீராங்கனைகள், பயிற்சியாளர்கள் நேற்று முன்தினம் (13.09.2023) தலைமைச் செயலகத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை சந்தித்து தமிழ்நாடு முதலமைச்சர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், தமிழ்நாடு அரசு, விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவித்தனர். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி ஆகியோர் உடனிருந்தனர்.

## தி.மு.க. சுற்றுச்சூழல் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்! (மூன்றாவது பட்டியல்)

### சுற்றுச்சூழல் அணிச் செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. சுற்றுச்சூழல் அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**விழுப்புரம் தெற்கு மாவட்டம்**

தலைவர் - வி. சந்திரசேகரன் 1/4 பள்ளிக்கூடத் தெரு, காட்டுப்பையூர் மற்றும் அஞ்சல், திருக்கோவிலூர் வட்டம்.

துணைத் தலைவர் - எம்.ஏ. ரஜினி இப்ராமிம் 2/1073 மேற்கு வஜிபி நகர், வழுதரெட்டி, விழுப்புரம்.

அமைப்பாளர் - **ஆர். அகிலன்** வெள்ளேரிப்பட்டு, சித்தேரி, விக்கிரவாண்டி வட்டம்.

துணை அமைப்பாளர்கள் - எஜிஎஸ். கணேசன் பனையபுரம். எ. பால்ராஜ் பானாம்பட்டு, விழுப்புரம். வி. சம்பத்குமார் 186 ஒத்தவாடை தெரு, நவ்மால் காப்பேர், பள்ளித்தென்னல் அஞ்சல், விழுப்புரம் வட்டம். ஏ. சந்தோஷ் எண் : 23/ஜி ரகிம் லே அவுட், கே. கே. ரோடு, விழுப்புரம். அ. சிவநேசன் எண் : 1/38, ஆற்காடு மெயின் ரோடு, ஆயந்தூர் மற்றும் அஞ்சல், கண்டாச்சிபுரம் (தாலுகா) ஜி. விஜய் சங்கர் மாரியம்மன் கோவில் தெரு, வி.மாத்தூர் மற்றும் அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம். பி. ஞானசேகரன் 102 பல்லரிப்பாளையம் மெயின் ரோடு, திருக்கோவிலூர் வட்டம்.

**சிவகங்கை மாவட்டம்**

தலைவர் - ம. கார்கண்ணன் 10/37எ, பெரியார் நகர், 2 வது வீதி, திருப்பத்தூர் சாலை, சிவகங்கை மாவட்டம்.

துணைத் தலைவர் - ரெ. ஆனந்த கிருஷ்ணன் (காந்திமதி நகைமாளிகை), திண்டுக்கல் மெயின்ரோடு, சிங்கம்புணரி, சிவகங்கை மாவட்டம்.

அமைப்பாளர் - **அ. வல்லபாய்** 438/1 வடக்கு ரத வீதி, திருக்கோஷ்டியூர், திருப்பத்தூர் ஒன்றியம்(தெற்கு), சிவகங்கை மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - திருமலை. மு. குமணன் 4/384, காஞ்சிரங்கால், சிவகங்கை, சிவகங்கை மாவட்டம். எ.ஆர்.கே. தேவதாஸ் மேல தெரு, மேலவெள்ளூர், திருப்புவனம் வட்டம், சிவகங்கை மாவட்டம். ஆர். ராமநாதன் (எ) சாய் சுரேஷ் 32/B1விஆர் காம்ப்ளக்ஸ், அருணாச்சல செட்டியார் தெரு, காரைக்குடி, சிவகங்கை மாவட்டம். எஸ். ராமநாதன் 10-6-198/2, பாரதி நகர், சிங்கம்புணரி, சிவகங்கை மாவட்டம். எஸ். காஞ்சனா சரவணன் மனை எண்.39, பெசன்ட் நகர், கழனிவாசல், காரைக்குடி, சிவகங்கை மாவட்டம்.

**நாகை மாவட்டம்**

தலைவர் - எ. எஸ்.என். ராஜா அஹ்ரகாரம், ஆணைமங்கலம், கீழ்வேளூர் அஞ்சல், நாகை.

துணைத் தலைவர் - ரெ. அசோக்குமார் 8/27, கீழக்காடு பெரியக்குத்தகை, வேதாரண்யம்.

அமைப்பாளர் - **க. சத்தியமூர்த்தி** 5/217, கவுண்டர் காடு, கரியாப்பட்டினம் அஞ்சல், வேதாரண்யம்.

துணை அமைப்பாளர்கள் - வீ. திருக்குமரன் 19, வடக்கு மடவிளாகம், வேதாரண்யம். ப. கார்த்திகேயன் வடக்கு தெரு, வவ்வாலடி ஏனங்குடி அஞ்சல் 609701. ச. பாலா நீலாதாட்சியம்மன், கோவில் தெரு, நாகப்பட்டினம். மு.சி.கி. அன்புமணி 7/1072, சூரிய விநாயகர் தெரு, வேட்டைக்காரனிருப்பு கீழ்வேளூர் 611112. இரா. ஆண்டிச்சாமி பப்ளிக் ஆபிஸ் ரோடு, வெளிப்பாளையம், நாகப்பட்டினம். ர. முகுந்தன் 29, வேதாநாயகம் செட்டித்தெரு, 4 வது சந்து, நாகப்பட்டினம். ஏ. பாரதி நடுத்தெரு, உம்பளச்சேரி அஞ்சல், வேதாரண்யம் தாலுகா. இரா. பார்த்திபன் 3/46, மீனவைப்பூர், விற்குடி அஞ்சல், காரையூர், நாகை.

**தஞ்சை வடக்கு மாவட்டம்**

தலைவர் - என். சரவணன் 33டி, கொத்தன் ஒத்தை தெரு, கும்பகோணம்.

துணைத் தலைவர் - ஜி. மணிவர்மன் அக்ரஹாரத்தெரு, இன்னம்பூர், கும்பகோணம்.

அமைப்பாளர் - **க.செல்வமுத்துகுமரன்** 9, கீழகஞ்சிமேடு, பாபநாசம்.

துணை அமைப்பாளர்கள் - எஸ். ராஜகுமார் 303, கீழத்தெரு, நாதன்கோயில், பம்பப்படையூர். எஸ். கார்த்திக் 92/எ, சாலை தெரு, அன்னப்பன்பேட்டை, பாபநாசம் தாலுகா. இரா.செல்வகுமார் 643 ,சதுரமாணிக்கம் தெரு , குமாரமங்கலம், நாச்சியார் கோயில் வழி கும்பகோணம் ச. அயூப்கான் 35, வடக்கு முஸ்லீம் தெரு, திருபுவனம்.

பா கார்த்திக் தஞ்சை மெயின் ரோடு, பாபநாசம் டி. சுதாகர் 80 வடக்கு தெரு,கோவனூர் திருவிடை மருதூர் என். அப்புனு (எ ) சதீஷ்குமார் 34 பாரத் நகர், கும்பகோணம்

**மதுரை தெற்கு மாவட்டம்**

தலைவர் - மு. கருப்பசாமி 55,பராசக்தி நகர், மெயின் ரோடு, அவனியாபுரம், மதுரை 12.

துணைத் தலைவர் - மா. மணிகண்டன் 1-1-101-7,திருமால்நகர், பேரையூர் வட்டம், மதுரை மாவட்டம்.

அமைப்பாளர் - **இரா. செல்வேந்திரன்** 030, வீரராகவ பெருமாள் தெரு, திருநகர், மதுரை-6.

துணை அமைப்பாளர்கள் - சு. சுபாகரன் கே.பி.எம். குப்பாஞ்செட்டியார் தெரு, கருக்காட்டான்பட்டி ரோடு, உசிலம்பட்டி, மதுரை. ரா. ஆனந்தன் 132-3எம்2, சுந்தரதேவிபவன், ஆ. கொக்குளம், திருமங்கலம் வட்டம், மதுரை மாவட்டம். செ. சதீஷ்குமார் 1இ/2-48, அம்பட்டையம்பட்டி, திடியன் அஞ்சல், உசிலம்பட்டி வட்டம், மதுரை மாவட்டம். மு. கணேசன் 4/57,612 பழனிஆறுமுகா நகர், சின்ன அனுப்பானடி, மதுரை. ஜீ. கார்த்திக்குமார் 6/3, ரயில்வே பீடர் ரோடு, கள்ளிக்குடி வட்டம், மதுரை மாவட்டம்.

**தஞ்சை தெற்கு மாவட்டம்**

தலைவர் - டி. ராஜேந்திரன் அத்திவெட்டி, தாமரங்கோட்டை வழி, பட்டுக்கோட்டை வட்டம் - 614 613.

துணைத் தலைவர் - வி. உதயகுமார் 1-235, பாங்கிரான் கொல்லை, நெல்லியடிக்காடு, மணக்காடு அஞ்சல், பேராவூரணி வட்டம்-614 612.

அமைப்பாளர் - **அழகிரி ஆர். சுப்பையா ராஜா** 22, கேஎன். பாளையம், பட்டுக்கோட்டை-614 601.

துணை அமைப்பாளர்கள் - டி. மயில் வாகனன் 213, நாடிமுத்து நகர், பட்டுக்கோட்டை-614 601. எஸ். கனகராஜ் தெற்கு தெரு தாமரங்கோட்டை, பட்டுக்கோட்டை வட்டம்-614 613. ஜி. ராமலிங்கம் பாப்பாநாடு ரோடு, மதுக்கூர் வடக்கு, பட்டுக்கோட்டை வட்டம்-614 903. ஜெ. நந்தகுமார் 47-எச், விவேகானந்த நகர், அறந்தாங்கி ரோடு, பட்டுக்கோட்டை-614 601. எம். அகமது 84, சேது ரோடு, அதிராம்பட்டினம், பட்டுக்கோட்டை வட்டம்-614 701. சொ. கருணா சொரியன் தெரு, வீரியங்கோட்டை, பேராவூரணி - 614802.

**நீலகிரி மாவட்டம்**

தலைவர் - அ. ஜாகீர் உசேன் 233, லட்சுமி இல்லம், பஜார் தெரு, குன்னூர், நீலகிரி - 643102.

துணைத் தலைவர் - ஜி.ஆர். குமார் 21/217, கரியமலை, குந்தாபாலம், நீலகிரி 643219.

அமைப்பாளர் - **பெ. ராமசந்திரன்** 4/154, கோட்டட்டி, சோலூர், நீலகிரி - 643005.

துணை அமைப்பாளர்கள் - சு. சண்முகநாதன் 2/412 முதிரிம்பிக்கை, துனேரி, கெங்கரை, நீலகிரி 643216. எல். லட்சுமணன் கக்குச்சி,உதகை, நீலகிரி. பெ. விஜய் குமார் எண்:342, விவேகானந்தா நகர், தமிழகம் சாலை, உதகை, நீலகிரி 643001. கே. கஜேந்திரன் அண்ணா நகர், வேலிவியு, உதகை, நீலகிரி. சி. ஞானசேகர் தேவாலா டேன்டி எண் 4/254, தேவாலா அஞ்சல், கூடலூர், நீலகிரி. எஸ். ஜெயக்குமார் 11/68, கோரஞ்சால், பந்தலூர், நீலகிரி.

**கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்**

தலைவர் - முஹமது அப்துல் காதர் 18/4, வடக்கு கார் தெரு, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

துணைத் தலைவர் - தே. மிக்கேல் ராஜ், 10/96,3 பிள்வக்கல் விளை அழகிய பாண்டியபுரம் அஞ்சல், கன்னியாகுமரி - 629851.

அமைப்பாளர் - **டாக்டர் எஸ்.வி. ஆனந்த்** 38/4-67எ, “சிவி” பூங்கா வீதி, வடிவீஸ்வரம், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் - 629002.

துணை அமைப்பாளர்கள் - முத்தம் பெருமாள் நடுத்தெரு, தாழக்குடி, கன்னியாகுமரி மாவட்டம் - 629901. எம். அலெக்ஸ் 3/282சி, குருகுலம் சாலை, அனந்தன் நகர், ஆசாரிப்பள்ளம், கன்னியாகுமரி மாவட்டம். அ. மகேஷ் வாசன் 24பி/35, கருப்பன் தெரு, கோட்டார், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் - 629002. ஆர். மாணிக்கம் 15/39பி, சுப்பிரமணியபுரம், தோவாளை, கன்னியாகுமரி மாவட்டம். சு. முத்து செல்வம் 6/8, வாகையடி கீழ ரத வீதி, கோட்டார், நாகர்கோவில். கி. குமாரவேல் 7/270எ, காமராஜர் சாலை, கீழவண்ணான்விளை, கோட்டர், நாகர்கோவில், கன்னியாகுமாரி மாவட்டம் - 629002.

**ஈரோடு வடக்கு மாவட்டம்**

தலைவர் - கே.பி. கைலாஷ் குமார் 19/5, அருமாயாள் டெக்ஸ்டைல்ஸ் (பி) லிமிடெட், காந்திநகர் ரோடு, கலிங்கியம் 638453.

துணைத் தலைவர் - நா. வெங்கடாசலமூர்த்தி செம்பூத்தாம்பாளையம் பெரியபுலியூர் அஞ்சல், பவானி தாலுக்கா, ஈரோடு 638455.

அமைப்பாளர் - **கே.கே. செல்வன்** 167/1, ஈரோடு மெயின் ரோடு, ஆசிரியர் நகர், குள்ளம்பாளையம், கோபி 638476.

துணை அமைப்பாளர்கள் - பெ. சண்முகசுந்தரம் 165, மெயின் ரோடு, பவானி, ஈரோடு மாவட்டம் 638301. அ. நவ்சாத் (எ) ராஜா செரிப் 54, மாரியம்மன் கோவில் வீதி, குன்றி கடம்பூர் அஞ்சல், சத்தியமங்கலம் தாலுக்கா, ஈரோடு. கு. கிருஷ்ணமூர்த்தி 763, மணியகாரர் தோட்டம், முகாசிப்புதூர், அந்தியூர், ஈரோடு 638314. முருகசாமி 188/2 புளியம்பட்டி சாலை, நம்பியூர். டி.ஆர். சசிகுமார் 2/21 பிள்ளையார் கோவில் வீதி, தாசநாயக்கனூர், அரசூர் அஞ்சல் சத்தி. சி. கார்த்திகேயன் 265, நேதாஜி வீதி, எஸ். கணபதிபாளையம், கோபி. செ. சக்திவேல் 185,பட்டிமணியக்காரன்பாளையம், வேமாண்டம்பாளையம், நம்பியூர். டி எஸ். சுசிந்திரன் பழனிசாமி டி. என். பாளையம்.

**கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம்**

தலைவர் - அகிலன் நடேசன் எகாலார் தெரு, யால் ஊராட்சி, மையனூர் அஞ்சல், சங்கராபுரம் வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம்.

துணைத் தலைவர் - சுகுமார் தொழுவந்தாங்கல் ஊராட்சி, சங்கராபுரம் வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம்.

அமைப்பாளர் - **சரத்குமார்** மாரியம்மன் கோவில் தெரு, மூங்கில்துறைப்பட்டு ஊராட்சி, சங்கராபுரம் வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - சி.எம். இராஜேந்திரன் ஏமப்பேர், கள்ளக்குறிச்சி நகரம், கள்ளக்குறிச்சி வட்டம் (ம) மாவட்டம். கிருபாகரன் கோளாப்பாறை ஊராட்சி, திருக்கோவிலூர் வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம். பி. சக்திவேல் விளம்பார் கிராமம், கள்ளக்குறிச்சி வட்டம் (ம) மாவட்டம். இராமச்சந்திரா பிரபு பிள்ளையார் கோவில் தெரு, மங்கலம் கிராமம், பிரிவிடையாம்பட்டு ஊராட்சி, சங்கராபுரம் வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம். கிருஷ்ண திவாகர் சூளாங்குறிச்சி ஊராட்சி, சங்கராபுரம் வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம்.

**திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்**

தலைவர் - கி. சுரேஷ் 22/62, வடக்குரத வீதி, பழனி.

துணைத் தலைவர் - ஆ. தேவேந்திரன் 1/251, கிழக்கு மீனாட்சிநாயக்கன்பட்டி, திண்டுக்கல் - 624002.

அமைப்பாளர் - **ஆர்.எம். இராஜசேகர்** 3/45, 5வது தெரு, முத்துநகர், திருச்சி சாலை, திண்டுக்கல்.

துணை அமைப்பாளர்கள் - வா. கார்த்தி கேயன் 78ஏ, காளியம்மன் கோவில் தெரு, பிரமநாயகபுரம், ஸ்ரீராமபுரம் அஞ்சல் - 624622. ரா.விக்னேஷ்குமார் ஏ.வி.எஸ நகர், ஆலமரத்துபட்டி அஞ்சல், என். பஞ்சம்பட்டி வழி, ஆத்தூர் வட்டம். ஜே.கே.பீரதிப்குமார் 10-3-14, கே.பி.ஜே தெரு, 1வது வார்டு, ஆலடிப்பட்டி, பண்ணைக்காடு, பழனி. ஏ. அமல அறிவழகன் 4/2, கலைஞர் நகர், வடக்கியூர், உலகம்பட்டி, திண்டுக்கல் - 624709. ஆ. ரமேஷ் எஸ்.பி. காலனி, காமராஜபுரம், வத்தலக்குண்டு. மா.காமாட்சிசுந்தரம் தாமரைக்குளம், பழனி வட்டம். ஏ.பி. மகேந்தர் 2/122, கேத்தம்பட்டி, சுள்ளெறும்பு அஞ்சல். ச. மலைச்சாமி காமாட்சிபுரம் அஞ்சல், ரெட்டியார்சத்திரம் வழி.

**தேனி தெற்கு மாவட்டம்**

தலைவர் - செ.கூத்தப்பெருமாள் வா-23, டி-84,கஸ்பா ரோடு, சின்னமனூர், தேனி மாவட்டம்.

துணைத் தலைவர் - ஆர். ரவி எண்:172, நாட்டாண்மை தெரு, ஆணைமலையன்பட்டி, உத்தமபாளையம். தேனி மாவட்டம்.

அமைப்பாளர் - **கே. சசி கோபால்** வா-14/98, பாப்பச்ச கவுடர் தெரு, கம்பம், தேனி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - ஒ.பி.பி. தங்கப்பாண்டியன் 68யுஇ பசும்பொன் முத்துராமலிங்கம் தெரு, கம்பம், தேனி மாவட்டம். எம். தினேஷ்குமார் தெற்கு தெரு, கே.கே.குளம், சின்னமனூர், தேனி மாவட்டம். பி. தென்னரசு 46சி/27, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் தெரு, கம்பம், தேனி மாவட்டம். அ. பாஸ்கரன் 5/2-வா, உலகத்தேவர் தெரு, உத்தமபுரம், கம்பம், தேனி மாவட்டம். க. சண்முகம் 58/9இ எல்.எப்.ரோடு, கூடலூர், தேனி மாவட்டம். கே. முத்துக்குமார் 64, சேர்மன் தெரு, கோகிலாபுரம், உத்தமபாளையம், தேனி மாவட்டம்.

**புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்**

தலைவர் - கே.பி.எஸ். மகேந்திரன் 10, ராஜகோபாலபுரம், 3 ஆம் வீதி, புதுக்கோட்டை.

துணைத் தலைவர் - எ. சுந்தர்ராஜன் கொல்லம்பட்டி, புல்வயல், அன்னவாசல்.

அமைப்பாளர் - **டி.எம்.ஆர். ராமமூர்த்தி** மேட்டுப்பட்டி, திருமலைராய சமுத்திரம்.

துணை அமைப்பாளர்கள் - எ. கலியமுத்து 1817, காயாம்பட்டி, வடவாளம் அஞ்சல். கவிமாறன் (எ) எஸ். சதீஸ் 26, பூங்கா நகர், புதுக்கோட்டை. பா .ஹரி ஹரன் 3947, தெற்கு 3ஆம் வீதி, புதுக்கோட்டை. மழையூர் ப. கணேசன் 1/76, ஜி2, அரியாண்டி, மழையூர், கறம்பக்குடி. ரா. கோபால் மேலவிடுதி, சம்பட்டி விடுதி அஞ்சல். சி. சதீஸ்குமார் 55, வலச்சேரிப்பட்டி வாராப்பூர். கே.ஆர்.பி. ஜெயச்சந்திரன் பசுமலைப்பட்டி, அன்னவாசல். ஆர். முருகேசன் 357, கீழ 4 ஆம் வீதி, புதுக்கோட்டை. த. அறிவானந்தம் நடுத்தெரு, கிள்ளுக்கோட்டை. எம். கருப்பையா 38, தட்டாம்பட்டி, புதுக்கோட்டை தாலுகா. கே. இனியதிலீபன் 1849, அம்பாள்புரம் 1வீதி, புதுக்கோட்டை. த. துரை 114/1, திருமயம் ரோடு, மாலையீடு, புதுக்கோட்டை. ஆர். சரவணன் (எ) சண்முக சுந்தரம் பொன்னன்விடுதி ஊராட்சி, கறம்பக்குடி தெற்கு, புதுக்கோட்டை.

**விருதுநகர் தெற்கு மாவட்டம்**

தலைவர் - கி. சோலை என்.ஜி.ஓ. காலனி, ஆத்திபட்டி - 626 105.

துணைத் தலைவர் - ஆர்.கே.எஸ். சிவசங்கரன் 2/151, கிழக்குத்தெரு, ஏ.இராமலிங்காபுரம் - 626203.

அமைப்பாளர் - **தாமோ. வெங்கடேஷ்** 10/128, ஓம்சக்திநகர், கொப்புசித்தம்பட்டி - 626 113.

துணை அமைப்பாளர்கள் - ப. ரெங்கராஜ் 2/157, வடக்குத்தெரு, எஸ்.அம்மாபட்டி - 626 138. எம்.கே. கோகுலன் 5எ. நாகு ஆச்சாரி தெரு, அருப்புக்கோட்டை - 626101. வெ. செந்தில்குமார் 580, திருவனந்தபுரம் தெரு, இராஜபாளையம் - 626 117. கா. முத்துகுமரேசன் 3/277-3, இந்திராநகர், சங்கரமூர்த்திபட்டி - 626 125. மா. சுரேஷ்குமார் 5/33/1, காமராஜர் நகர், பாலையம்பட்டி - 626 101.

**தேனி வடக்கு மாவட்டம்**

தலைவர் - எம். வீனஸ் கண்ணன் 39/67, டாக்டர் அம்பேத்கர் நடுத்தெரு, அல்லிநகரம், தேனி.

துணைத் தலைவர் - ஜி. சண்முகசுந்தரம் 90/33/9, வடக்கு பாரஸ்ட் ரோடு, வடகரை, பெரியகுளம்.

அமைப்பாளர் - **எஸ். மகாராஜன்** 208,போஸ்ட் ஆஃபிஸ் தெரு, கொடுவிலார் பட்டி, தேனி.

துணை அமைப்பாளர்கள் - டாக்டர். என்.வி.எஸ். தினேஷ் 99,வி. எம் சாவடி தெரு, அல்லிநகரம், தேனி. எம். ஜக்கப்பன் 170-175/3 B அமராவதி நகர், பி.ரெங்கநாதபுரம், போடிநாயக்கனூர். டி. தேவக்குமார் அம்பேத்கர் தெரு, பி.ரெங்கநாதபுரம், போடிநாயக்கனூர். பி. தங்கபாண்டியன் 306,மெயின் ரோடு, பாலார் பட்டி, கூழையனூர். என். சந்திரசேகரன் கலைஞர் நகர், எ. புதுக்கோட்டை, பெரியகுளம்.

**தஞ்சை மத்திய மாவட்டம்**

தலைவர் - தியாக. இளங்கோ வாண்டையார் தெரு, திருமங்கலக்கோட்டை, ஒரத்தநாடு.

துணைத் தலைவர் - மு. செந்தில்குமார் ஆர்சுத்திவிடுதி, தோப்புவிடுதி, திருவோணம்.

அமைப்பாளர் - **எஸ். தண்டபாணி** ஸ்ரீராம்நகர், திருவையாறு.

துணை அமைப்பாளர்கள் - ஜி.கே.அசோக்குமார் கீழத்தெரு, அரசப்பட்டு, தஞ்சாவூர். மா. கோவிந்தராஜ் சென்னம்பட்டி, தஞ்சாவூர். கு. சரவணன் காவாளிப்பட்டி, திருவோணம், தஞ்சாவூர். ஆ. அழகிரி 9 தெரு, அண்ணாநகர், தஞ்சாவூர். க. ஜோதிவேல் குருவாடிப்பட்டி, தஞ்சாவூர். கே. சரவணன் 1/4,குடியான தெரு, கடுவெளி, தில்லைஸ்தானம் போஸ்ட், திருவையாறு தாலுக்கா, தஞ்சாவூர்.

**கடலூர் மேற்கு மாவட்டம்**

தலைவர் - ம. சுரேஷ் சின்னப்பரூர் கிராமம் மற்றும் அஞ்சல், விருத்தாசலம் வட்டம், கடலூர் மாவட்டம்.

துணைத் தலைவர் - டி. இளையராஜா 120, சேலம் ரோடு, இராமச்சந்திரன் பேட்டை, விருத்தாசலம் வட்டம், கடலூர் மாவட்டம்.

அமைப்பாளர் - **பெ. செந்தில் குமார்** கிழக்குத் தெரு, நெடுங்குளம் கிராமம், திட்டக்குடி தாலுகா, கடலூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - அ. வடிவேல் முருகன் 1/ஏ, பெரியார் தெரு, நாச்சியார்பேட்டை, விருத்தாசலம் தாலுகா, கடலூர் மாவட்டம். ப. சக்திவேல் 365/12, மெயின் ரோடு, வேகாக்கொல்லை, பண்ருட்டி தாலுகா, கடலூர் மாவட்டம். நா. தென்னரசு 480, பிள்ளையார் கோயில் தெரு, கட்டியாம்பாளையம், பண்ருட்டி தாலுகா, கடலூர் மாவட்டம். செ. முத்துக்குமார் 2வது தெரு, இந்திரா நகர், பூதாம்பூர், விருத்தாசலம் தாலுகா, கடலூர் மாவட்டம். கே.எ. பிச்சையா எண்.18, நாவல்மரத் தெரு, அண்ணாகிராமம் விரிவு, காந்திநகர் அஞ்சல், குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றியம், குறிஞ்சிப்பாடி தாலுகா, கடலூர் மாவட்டம். வீ. லோகநாதன் 12, வெங்கட் நகர், கொக்குப்பாளையம் ரோடு, பண்ருட்டி நகரம், கடலூர் மாவட்டம். வை. எழில்செல்வன் எண்.13, நவநீதன் நகர், பகண்டை அஞ்சல், பண்ருட்டி வட்டம், கடலூர் மாவட்டம். க. சுரேஷ் எண்.332, புதிய காலனி, 1வது வீதி, ஆலிச்சிக்குடி, சாத்தூக்குடல் அஞ்சல், விருத்தாசலம் வட்டம், கடலூர் மாவட்டம்.

**தூத்துக்குடி தெற்கு மாவட்டம்**

தலைவர் - எஸ்.சிவசுப்பிரமணியன் 2/82, வடக்கு தெரு, நடுநாலுமூலைக்கிணறு மேலத் திருச்செந்தூர், தூத்துக்குடி - 628213.

துணைத் தலைவர் - என். மனோகரன் 6/25, தேமாங்குளம், திருக்களூர், தூத்துக்குடி.

அமைப்பாளர் - **பி. பொன்பாண்டி** 12/409, மாதாநகர், 6வது தெரு, மாப்பிள்ளையூரணி, தூத்துக்குடி.

துணை அமைப்பாளர்கள் - எஸ்.எ. செந்தில்குமார் 58, சுப்பிரமணியபும் தெரு, திருச்செந்தூர், தூத்துக்குடி - 628 215. ஜெகதிஷ் வி. ராயன் 4/305-1, ஜான் தெரு, வீரபாண்டியன்பட்டனம் தூத்துக்குடி - 628216. எஸ். பிரபாகரன் 439, கீழரதவீதி, வடக்கு ஆத்தூர், தூத்துக்குடி - 628151. ச. ஜீவா பாலமுருகன் 12எ/401, மாதாநகர், மாப்பிள்ளையூரணி, தூத்துக்குடி. க. சுடலை 2/152, பள்ளிக்கூடத் தெரு, கால்வாய், தூத்துக்குடி - 628622.

**தூத்துக்குடி வடக்கு மாவட்டம்**

தலைவர் - சங்கரபாண்டியன் 475எ, லட்சுமி மில், எதிர்புரம், மெயின்ரோடு, கோவில்பட்டி.

துணைத் தலைவர் - முருகராஜ் 1/30-5,3 வது தெரு, கோயில் பிள்ளை நகர், தூத்துக்குடி.

அமைப்பாளர் - **எ. ஜெபசிங்** 1ஜீ/339, ராஜ கோபால் நகர், 5 வது தெரு, தூத்துக்குடி - 628008.

துணை அமைப்பாளர்கள் - கே. சுரேஷ் 10, கீழ சண்முகபுரம் (வடக்கு), தூத்துக்குடி - 628008. பா. அய்யப்பன் 3/703சி, பைபாஸ் ரோடு கீழ்புறம், இனாம் மணியாச்சி, கோவில்பட்டி. எஸ். கணேசன் 520சி/5, பூரணம்மாள் காலனி, இலுப்பையூரணி, கோவில்பட்டி. சு.சோலையப்பன(எ) கண்ணன் 6எ-74, பாரதி நகர், 2 வது தெரு, கோவில்பட்டி - 628501. கோ. கணேசன் 75/25, லாயல் மில் பள்ளி வாசல் தெரு, புதுக்கிராமம், கோவில்பட்டி. ஆ. ராஜதுரை, டி.எ.ஜி.எச். ரோடு, கயத்தாறு, தூத்துக்குடி. முத்துராமன் 5/138/3, விஸ்வபுரம் 3வது தெரு, தூத்துக்குடி - 2.

**காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்**

தலைவர் - ஆர். ராஜேஷ் 21/31, பஜனை கோயில் தெரு, கடப்பெரி, மதுராந்தகம்.

துணைத் தலைவர் - கே. வேணு 85, பார்க் மெயின் ரோடு, வேடந்தாங்கல், மதுராந்தகம் தாலுக்கா.

அமைப்பாளர் - **டி. வெங்கட்ராமன்** 16, மாண்டுகன்னீஸ்வரர் கோயில் தெரு, பெரிய காஞ்சிபுரம்.

துணை அமைப்பாளர்கள் - பி. சுந்தர் 69எ, கிழக்கு ராஜாவீதி, பெரிய காஞ்சீபுரம். எம். மணிபாரதி 5, டாக்டர். அ.பி.ஜெ.அப்துல்கலாம் தெரு, தொழுபேடு கிராமம் (ம) அஞ்சல், மதுராந்தகம் தாலுக்கா. எ. கருணாகரன் 104, மெயின்ரோடு, திம்மராஜன்பேட்டை, வாலாஜாபாத் தாலுக்கா. மு. சுரேஷ்குமார் சோழகட்டு கிராமம், செய்யூர் வட்டம். பி. ராஜவேல் பெரியகுப்பம், பனையூர் அஞ்சல், செய்யூர் வட்டம். வி. செல்வகுமார் 324, மேட்டுதெரு, கொடூர், கொடூர் அஞ்சல், செய்யூர் வட்டம்.

**திருப்பூர் வடக்கு மாவட்டம்**

தலைவர் - நா. குமார் எண்:- 32/6, தெற்கு தோட்டம், அம்மாபாளையம், திருப்பூர்.

துணைத் தலைவர் - வி. வி. ஜி. காந்தி எண்:- 5/10/89 கங்கா நகர் போயம்பாளையம் மேற்கு, திருப்பூர் 641602.

அமைப்பாளர் - **பி. ஏ. சேகர்** எண்:- 1 - தாராபுரம் ரோடு பனப்பாளையம், பல்லடம், திருப்பூர்.

துணை அமைப்பாளர்கள் - கொங்கு முருகேசன் எண்:-18/1 கண்டியம்மன் நகர் மூன்றாவது வீதி, திருப்பூர் 641604. டாக்டர் கே. வீரபத்மன் எண்:-222/2, ஜெய் மாருதி நகர், கணியாம்பூண்டி, வஞ்சிபாளையம், திருப்பூர். ச. நாகேந்திரன் எண்:- 3/725, 6-வீதி, சத்யா காலனி, மன்னாரை, திருப்பூர். சு. சந்திரசேகரன் எண்:- 215-1 பட்டம்பாளையம், நம்பியூர், அவிநாசி. ராஜேந்திரன் 5/444, வீட்டு வசதி வாரிய குடியிருப்பு, கோபி மெயின் ரோடு, சேவூர். கோபால் (எ) காளியப்பன் 5/177-எம், ஜீவாநகர், மங்களம் ரோடு, சுல்தான்பேட்டை, திருப்பூர். எம். செல்லத்துரை 2/990-எ, தெற்கு 4-வீதி, மகாலட்சுமி நகர், நாரணாபுரம், பல்லடம்-641664.

**கோவை தெற்கு மாவட்டம்**

தலைவர் - இரா. உதயகுமார் எண்: 12, அன்பகம், அன்புநகர்,நியூ டவுன், போத்தனூர், கோவை 641023.

துணைத் தலைவர் - எம். ராஜு 1/205, - ஜி, ஜீவா நகர், சங்கோதிபாளையம், கணியூர் அஞ்சல், சூலூர் - 641659.

அமைப்பாளர் - **சூ.ஆ. விஜய் குமார்** 4/14 சரஸ்வதி நகர், கலங்கல் பாதை, சூலூர், கோவை 641402.

துணை அமைப்பாளர்கள் - ச. கார்த்திகேயன் 3/148, மதுரை வீரன் கோவில் வீதி, ஆத்துப்பொள்ளாச்சி, ஆனைமலை, கோவை 642103. க. ஜெகதீஸ் 13/385 மேட்டாங்காடு, மதுக்கரை,கோவை. சி. ஸ்ரீவந்த் விஸ்வேஸ்வரன் 2/91, சின்னியம்பாளையம், சூலூர், கோவை 641062. கா. கோகிலாம்பாள் 2/63, தென்சித்தூர், பொள்ளாச்சி, கோவை 642137. கே. வளர்மதி 3/148, மதுரை வீரன் கோவில்வீதி, ஆத்துப்பொள்ளாச்சி, ஆனைமலை, கோவை 642103. த. அவினாஷ் கார்த்திக் 19/51 ஏ.சி.எம்.ஏ.மில் வீதி, பொள்ளாச்சி, கோவை 642001. செ. மணி 65, ஸ்ரீராம் ஸ்ரஸ்தரி, அட்லாண்டிக் நகர், மதுக்கரை - 641 105. ஆர். சரவணன் 5/118, சென்னப்பசெட்டி, புதூர்கருமத்தம்பட்டி (வழி), கோயம்புத்தூர் - 641 659. சி. சதாசிவம் 1/188 - 2 பி - 1 எ-ஒன் மகாலட்சமி நகர், அப்பநாயக்கன்பட்டி, சூலூர்- 641 402. எம். கிருஷ்ணகுமார் 4/160, மயிலாடும்பாறை (அஞ்சல்), திவான்சா புதூர், ஆனைமலை, பொள்ளாச்சி - 642 103.

**கோவை மாநகர் மாவட்டம்**

தலைவர் - ராஜா மணி 23/1, தேவாங்க மேல்நிலைப்பள்ளி மெயின் ரோடு, ஆர். எஸ். புரம், கோவை 641002.

துணைத் தலைவர் - எஸ்.பி. அருள்குமார் 1, கார்த்திக், அப்பார்ட்மெண்ட், ராமநாதபுரம், கோவை-45.

அமைப்பாளர் - **கே. ஸ்ரீ சத்யா** 1, கணபதி லே அவுட், கே.கே. புதூர், சாய்பாபாகாலனி, கோவை-38.

துணை அமைப்பாளர்கள் - கி. தேவதாஸ் 7/4பி, அருணாச்சலம் நகர் வடவள்ளி, பி.என். அஞ்சல் கோவை 641046. ஜவஹர் வெள்ளிங்கிரி 38,பி.ன்.ர்.லேஅவுட், திருச்சி சாலை, கோவை 641018. பெ.மா.ராமமூர்த்தி 49/3, ரவீந்திரநாத் தாகூர் ரோடு, மணியகாரன்பாளையம், கணபதி, கோவை-06. ஜவஹர் சுப்ரமணியம் 7/பி-26, புட்டு விக்கி ரோடு, பிரபு நகர், கோவை 641001. ராம்குமார் அங்கமுத்து 20/7, வெள்ளிங்கிரி நகர் (தெற்கு), பாரதியார் பல்கலைக்கழகம் அஞ்சல், கோவை 641046. தி. மதன் 28 திருமுருகன் நகர், இரண்டாவது வீதி, வடவள்ளி, கோவை. ச. கருப்புசாமி 82-எ, அசோக் வீதி உடையாம்பாளையம், சௌரிபாளையம் அஞ்சல், கோவை. என். ஜே. ஷாஜகான் 43,எல். என். வீதி கோட்டை கோவை. கே. மதன்குமார் 41, எக்ஸ்டென்சன் வீதி-1, சிங்காநல்லூர், கோவை-5. எஸ். முருகன் 55, நந்தகோபால் வீதி-1, சித்தாப்புதூர், கோவை-44.

**சேலம் மத்திய மாவட்டம்**

சேலம் மத்திய மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணைத் தலைவராக ஏற்கனவே அறிவிக்கப்பட்ட ஆர். முருகானந்தம் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து அவருக்கு பதிலாக **எம். அறிவழகன்** (4/254, கவுண்டன் தெரு, பச்சனம்பட்டி, ஓமலூர் சேலம்) அவர்கள் **மாவட்ட துணைத் தலைவராகவும்,**

மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்ட அருண்பிரசன்னா அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து அவருக்கு பதிலாக **டி. ரமேஷ்** (9/236, ஜான் பிரிட்டோ பள்ளி அருகில், கமலாபுரம், ஓமலூர் வட்டம், சேலம்) அவர்கள் **மாவட்ட சுற்றுச்சூழல் அணியின் அமைப்பாளராகவும்** நியமிக்கப்படுவதோடு,

1. எஸ். சங்கர், கீழ்தெரு, பண்ணப்பட்டி, காடையாம்பட்டி, சேலம்.
2. என். மருதுபிள்ளை, 92/2, பழனியப்பா காலனி, அன்னதானப்பட்டி, சேலம்.
3. ஜி. சுந்தராஜன், உ.மாரமங்கலம், ஓமலூர், சேலம்.
4. ஆர். தினேஷ்பாபு, சின்னகாடம்பட்டி, பெரியகாடம்பட்டி, ஓமலூர், சேலம்.
5. வி. இளங்கேஸ்வரன், 123, ஸ்ரீராகவன் தெரு, ஜாரிகொண்டலாம்பட்டி, சேலம் - 10.
6. கே. காமராஜ், 42/7, அருந்ததியர் தெரு, காட்டு வட்டம், குண்டூர், கருப்பூர், சேலம்.
7. எஸ்.பார்த்திபராஜா, 4/111, அமராவதி ரோடு, ஐந்து ரோடு, சேலம் - 4.

ஆகியோர் மாவட்ட துணை அமைப்பாளர்களாக கீழ்கண்டவர்கள் கூடுதலாக நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட சுற்றுச்சூழல் அணி நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”** சென்னை - 18.
நாள் : 13-09-2023

**கார்த்திகேய சிவசேனாபதி,**
செயலாளர்,
தி.மு.க. சுற்றுச்சூழல்அணி

---

### கழக முப்பெரும் விழாவில்

# புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் வேண்டுகோள்!



புதுக்கோட்டை,செப்.15-

புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தலைமைக் கழகத்தின் சார்பில் வேலூர் பள்ளி கொண்டாவில் வரும் 17.9.2023 ஞாயிறு மாலை 5 மணியளவில் அண்ணா பிறந்த நாள், தந்தை பெரியார் பிறந்த நாள், கழகம் தோற்றுவிக்கப்பட்ட நாள் என முப்பெரும் விழா நடைபெறுகிறது.

முப்பெரும் விழாவில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் கலந்து கொண்டு விருதுகள் வழங்கிசிறப்புரையாற்ற உள்ளார்கள். இந்த முப்பெரும் விழாவில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு. பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறி உள்ளார்.

---

# நாமக்கல் சட்டமன்றத் தொகுதி வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி பங்கேற்பு!



நாமக்கல், செப். 15-

தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் காங்கேயம் படியூரில், செப்டம்பர் 24 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10.00 மணி அளவில் மேற்கு மண்டலத்திற்குட்பட்ட மாவட்டங்களின்” வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA 2) ”பயிற்சி பாசறைக் கூட்டம் நடைபெற உள்ளது.

நாமக்கல் கிழக்கு மாவட்டம் நாமக்கல் சட்டமன்றத் தொகுதி (BLA 2) வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நாமக்கல் நளா ஹோட்டலில் நடைபெற்றது.

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர். என். இராஜேஸ்குமார் தலைமை தாங்கினார். நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம் முன்னிலை வகித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் மணிமாறன், மாவட்ட துணைச் செயலாளர் நலங்கிள்ளி, நகர கழகச் செயலாளர்கள் ராணா ஆனந்த், சிவகுமார், பூபதி, ஒன்றிய தி.மு.க. செயலாளர் நவலடி, பழனிவேல், கவுதம், ஜெயபிரகாஷ், மாநில நிர்வாகி கள் கைலாசம், நக்கீரன், ஆனந்தகுமார், நகர் மன்ற தலைவர் கலாநிதி, பேரூர் செயலாளர் செல்லவேல், சார்பு அணி அமைப்பாளர்கள் விஸ்வநாத், சித்தார்த், தலைமைக் கழக நிர்வாகி கள் டாக்டர் மாயவன், பொதுக்குழு உறுப்பினர்கள் பூவராகவன் சரவணன் சுசீதரன், கண்ணன், மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் வாக்குச்சாவடி (BLA 2) பொறுப் பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கலைஞர் நூற்றாண்டு விழா - அண்ணா பிறந்த நாளில் தமிழ்நாடு முழுவதும்

# ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கழக மருத்துவர் அணி சார்பில் உபகரணங்கள்!

## செயலாளர் மரு.எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, செப். 15-

தி.மு.க மருத்துவ அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, பேரறிஞர் அண்ணா பிறந்த நாளில், தமிழ்நாடு முழுவதும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கூடுதல் மருத்துவ உபகரணங்கள் வழங்கும் விழா இன்று நடைபெறுகிறது என மருத்துவ அணிச் செயலாளர் மரு.எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு:-

கழகத் தலைவர் உத்தரவுப்படி, தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்டவாறு சட்டமன்றத் தொகுதி தோறும் தேர்வு செய்யப்பட்ட சுகாதார நிலையங்களுக்கு, கூடுதல் மருத்துவ உபகரணங்கள் வழங்கும் நிகழ்வுகளை சீரோடு நடத்த மருத்துவ அணி நிர்வாகிகளை கேட்டுக்கொள்கிறோம்.

எடை இயந்திரம், உயரம் அளவை, இரத்த அழுத்தம் - நீரிழிவு பரிசோதனை கருவிகள், அடிப்படை அறுவை சிகிச்சை உபகரணங்கள், நாற்காலிகள், குடிநீர் உபகரணங்கள், நோட்டுகள் உள்ளிட்ட அடிப்படை உபகரணங்களையும், சுகாதார நிலையங்களின் தேவைக்கேற்ப கூடுதல் உபகரணங்களையும் வழங்க கேட்டுக்கொள்கிறோம்.

மருத்துவ அணி சார்பில் வழங்கப்பட்டுள்ள நிலையான வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி இன்று (செப்டம்பர் 15, 2023) கீழ்க்காணும் சுகாதார நிலையங்களுக்கு கூடுதல் உபகரணங்களை வழங்கி, அது குறித்த செய்திகளை புகைப்படங்களுடன் மருத்துவ அணிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கூடுதல் மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படவுள்ள அரசு சுகாதார நிலையங்களின் பட்டியல்.

**கன்னியாகுமரி மேற்கு**

பத்மநாபபுரம் - கோதநல்லூர் , விளவன்கோடு-இடைக்கோடு, கிள்ளியூர் - ஆறுதேசம்

**கன்னியாகுமரி கிழக்கு**

கன்னியாகுமரி -இறச்சக்குளம், கன்னியாகுமரி - நாகர்கோவில் - வடசேரி, நாகர்கோவில், குளச்சல்- பள்ளியாடி

**தூத்துக்குடி வடக்கு**

விளாத்திகுளம் - புதூர், தூத்துக்குடி - தூத்துக்குடிநகரம், கோவில்பட்டி -கோவில்பட்டிநகரம்

**தென்காசி தெற்கு**

கடையநல்லூர் - வல்லம், தென்காசி-இலஞ்சி, ஆலங்குளம் - கோவிலூற்று

**தென்காசி வடக்கு**

வாசுதேவநல்லூர் - வாசுதேவநல்லூர்நகரம், வாசுதேவநல்லூர் - தேவிபட்டிணம், சங்கரன்கோவில் - கரிவலம்

**திருநெல்வேலி மத்திய மாவட்டம்**

திருநெல்வேலி - கல்லூர், திருநெல்வேலி - உக்கிரன்கோட்டை, திருநெல்வேலி - கங்கைகொண்டான், திருநெல்வேலி-மானூர், திருநெல்வேலி - இராஜவல்லிபுரம், திருநெல்வேலி-தச்சநல்லூர், பாளையங்கோட்டை - பெருமாள்புரம், பாளையங்கோட்டை - நெல்லை சந்திப்பு, பாளையங்கோட்டை - மேலப்பாளையம்

**திருநெல்வேலி கிழக்கு**

அம்பாசமுத்திரம் - கள்ளிடைகுறிச்சி, நாங்குநேரி - திருக்குறுங்குடி, நாங்குநேரி -ஏர்வாடி, இராதாபுரம் - இராதாபுரம்நகரம்,

**விருதுநகர் தெற்கு**

இராஜபாளையம் - இராஜபாளையம்நகரம், திருவில்லிபுத்தூர் - சக்கரகுளம், சாத்தூர் - உப்பத்தூர், அருப்புக்கோட்டை - ஆவுடையாபுரம்

**விருதுநகர் வடக்கு**

சிவகாசி -சித்தராஜபுரம், விருதுநகர் - அம்மாபட்டி, திருச்சுழி- கள்குறிச்சி

**சிவகங்கை**

காரைக்குடி - செஞ்சை, திருப்பத்தூர் - எஸ்.புதூர், சிவகங்கை - சிவகங்கைநகரம் மானாமதுரை - மானாமதுரை நகரம்,

**இராமநாதபுரம்**

பரமக்குடி - நயினார்கோவில், திருவாடானை - திருப்பாலைக்குடி, இராமநாதபுரம் - தேவிப்பட்டிணம், முதுகுளத்தூர் - கீழ்த்தூவல்

**தேனி தெற்கு**

ஆண்டிபட்டி - இராயப்பன்பட்டி, ஆண்டிபட்டி - காமயகவுண்டன்பட்டி, கம்பம் - கம்பம்நகரம், கம்பம் - எரசக்கநாயக்கனூர்

**தேனி வடக்கு**

பெரியகுளம் - தேவதானபட்டி, பெரியகுளம் - எ.புதுப்பட்டி, போடிநாயக்கனூர் - டொம்புச்சேரி, போடிநாயக்கனூர் - ஐங்கால்பட்டி

**திண்டுக்கல் மேற்கு**

ஒட்டன்சத்திரம் - நரிகல்பட்டி, நத்தம் - தொட்டநூத்து, வேடசந்தூர் - எரியோடு

**திண்டுக்கல் கிழக்கு**

பழனி - பாலசமுத்திரம், ஆத்தூர் - சித்தையன்கோட்டை, நிலக்கோட்டை-அம்மையநாயக்கனூர், திண்டுக்கல் - ம.மூ.கோவிலூர்

**மதுரை மாநகர்**

மதுரை வடக்கு - செல்லூர், மதுரை மேற்கு - பழங்காநத்தம்,

**மதுரை தெற்கு**

திருப்பரங்குன்றம் - வலையங்குளம், திருமங்கலம் - டி.கல்லுப்பட்டி, உசிலம்பட்டி- செல்லம்பட்டி,

**மதுரை வடக்கு**

மேலூர் கள்ளன்திரி, மதுரை கிழக்கு - வெள்ளளூர் - சோழவந்தான் - சோழவந்தான்

**நீலகிரி**

உதகமண்டலம் - இத்தலார், குன்னூர் - எடப்பள்ளி,

**ஈரோடு தெற்கு**

ஈரோடு கிழக்கு - அகத்தியர், ஈரோடு மேற்கு - பழையபாளையம், மொடக்குறிச்சி -மொடக்குறிச்சிநகரம், பெருந்துறை - கள்ளிபாளையம்,

**ஈரோடு வடக்கு**

பவானி - பொம்மன்பட்டி, அந்தியூர் -வெள்ளி திருப்பூர், கோபிச்செட்டிபாளையம் - அயலூர், பவானிசாகர் - குத்தியாலத்தூர்

**திருப்பூர் தெற்கு**

தாராபுரம் - பொன்னாபுரம், தாராபுரம் - அலங்கியம், தாராபுரம் - மூலனூர், காங்கேயம் -சாவடிபாளையம், காங்கேயம் - வெள்ளகோயில், உடுமலைப்பேட்டை குடிமங்கலம், மடத்து குளம் - கணியூர்

**திருப்பூர் வடக்கு**

திருப்பூர் வடக்கு - வேலம்பாளையம், திருப்பூர் தெற்கு - சுண்டமேடு, திருப்பூர் தெற்கு - சூசையபுரம், பல்லடம் - பொங்கலூர், அவிநாசி- சேவூர்

**கோவை மாநகர்**

கோவை வடக்கு - பாப்பநாயக்கன்புதூர், கோவை தெற்கு - புலியகுளம், சிங்காநல்லூர் - சிங்காநல்லூர் நகரம்,

**கோவை தெற்கு**

சூலூர் - இருகூர், கிணத்துக்கடவு - வெள்ளைலூர், பொள்ளாச்சி - புரவிபாளையம், வால்பாறை - பெத்தநாயக்கனூர்

**கோவை வடக்கு**

தொண்டாமுத்தூர் - கரடிமடை, மேட்டுப்பாளையம் - சீளியூர், கவுண்டம்பாளையம் - இடிகரை

**கிருஷ்ணகிரி மேற்கு**

வேப்பனஹள்ளி - வேப்பனஹள்ளிநகரம், தளி - தளிநகரம், ஓசூர் -மூக்காண்டப்பள்ளி,

**கிருஷ்ணகிரி கிழக்கு**

ஊத்தங்கரை - சாம்பல்பட்டி, பர்கூர் - ஜெகதேவி, கிருஷ்ணகிரி- இராசுவீதி

**தருமபுரி மேற்கு**

பாலக்கோடு - காரிமங்கலம், பாப்பிரெட்டிபட்டி - கடத்தூர், அரூர் - சிட்லிங்,

**தருமபுரி கிழக்கு**

தருமபுரி - பண்ட அள்ளி, பெண்ணாகரம் - நாகதாசம்பட்டி

**நாமக்கல் மேற்கு**

பரமத்தி - வேலூர் - மாணிக்கம்பாளையம், திருச்செங்கோடு - சித்தாளந்தூர், குமாரபாளையம் கல்லாங்காடு வலசு,

**நாமக்கல் கிழக்கு**

இராசிபுரம் - பிள்ளா நல்லூர், சேத்தமங்கலம் -அலங்காநத்தம், நாமக்கல் - நாமக்கல் நகரம்,

**சேலம் மத்திய மாவட்டம்**

ஓமலூர் - காடையாம்பட்டி, சேலம் மேற்கு - பழைய சூரமங்கலம், சேலம் வடக்கு - கன்னங்குறிச்சி, சேலம் தெற்கு - கிச்சிப்பாளையம்

**சேலம் மேற்கு**

சங்ககிரி - மகுடஞ்சாவடி, எடப்பாடி - நங்கவல்லி

**சேலம் கிழக்கு**

கெங்கவல்லி - கெங்கவல்லி, ஆத்தூர் - பெத்தநாயக்கன்பாளையம், ஆத்தூர் - கொத்தாம்பாடி, ஏற்காடு - காரிப்பட்டி, ஏற்காடு - பேளூர், வீரபாண்டி -மல்லூர், வீரபாண்டி -பூலாவரி

**புதுக்கோட்டை தெற்கு**

திருமயம் - அரிமளம், ஆலங்குடி - திருவரங்குளம், அறந்தாங்கி - நாகுடி

**புதுக்கோட்டை வடக்கு**

கந்தர்வகோட்டை - திருமலைராயபுரம், விராலிமலை -மதியநல்லூர், புதுக்கோட்டை - வாராப்பூர்

**கரூர்**

அரவக்குறிச்சி - மலைக்கோவிலூர், கரூர் - வெள்ளியானை, கிருஷ்ணராயபுரம் -கள்ளபள்ளி, குளித்தலை -இனுங்கூர்

**அரியலூர்**

அரியலூர் -செந்துறை, அரியலூர் -அரியலூர், ஜெயங்கொண்டம் - தா.பழூர், ஜெயங்கொண்டம் - மீன்சுருட்டி

**பெரம்பலூர்**

பெரம்பலூர் - வேலூர் ,குன்னம் - இலப்பைகுடிகாடு

**திருச்சி தெற்கு**

மணப்பாறை - அனியாபூர், திருச்சி கிழக்கு - தெப்பக்குளம் நகர்ப்புறம், திருவெறும்பூர் - காட்டூர்,

**திருச்சி மத்திய மாவட்டம்**

திருவரங்கம் - சோமரசம்பேட்டை, திருச்சி மேற்கு - எடமலைப்பட்டி புதூர், இலால்குடி - காணக்கிலியநல்லூர்

**திருச்சி வடக்கு**

மண்ணச்சநல்லூர் - சமயபுரம், முசிறி - மேற்கநாயக்கன்பட்டி, துறையூர் - செங்காட்டுப்பட்டி

**திருவாரூர்**

நன்னிலம் - திருவீழிமழல், திருவாரூர் -புள்ளமங்கலம், திருத்துறைப்பூண்டி-விளக்குடி, மன்னார்குடி - இராயபுரம்

**நாகை**

நாகை - மருந்துகொத்தளத்தெரு, கீழ்வேளூர் - வடுகச்சேரி, வேதாரண்யம் - அகஸ்தியன் பள்ளி

**மயிலாடுதுறை**

மயிலாடுதுறை - காளி, சீர்காழி - குன்னம், பூம்புகார் -சங்கரன்பந்தல்

**தஞ்சை தெற்கு**

பட்டுக்கோட்டை -மதுக்கூர், பேராவூரணி - குறிச்சி

**தஞ்சை மத்திய மாவட்டம்**

ஒரத்தநாடு - வடக்கூர், திருவையாறு - செந்தலை, தஞ்சாவூர் - சீனிவாசபுரம்

**தஞ்சை வடக்கு**

பாபநாசம் - சக்கராப்பள்ளி, கும்பகோணம் - கொத்தங்குடி, திருவிடைமருதூர் - வேப்பத்தூர்,

**கடலூர் மேற்கு**

பண்ருட்டி - ஒறையூர், விருதாச்சலம் - இருப்பு, திட்டக்குடி -இ.கீரனூர், நெய்வேலி -வெங்கடாம்பேட்டை

**கடலூர் கிழக்கு**

காட்டுமன்னார்கோயில் -முட்டம், குறிஞ்சிப்பாடி - வடலூர், கடலூர் - புதுப்பாளையம், சிதம்பரம் -புதுச்சத்திரம், புவனகிரி - கிருஷ்ணாபுரம்

**கள்ளக்குறிச்சி தெற்கு**

ரிஷிவந்தியம் - வடபொன்பரப்பி, கள்ளக்குறிச்சி - மேல்நாரியப்பனூர், **கள்ளக்குறிச்சி வடக்கு** – சங்கராபுரம் -ஆலந்தூர், உளுந்தூர்பேட்டை -எலவனாசூர்கோட்டை

**விழுப்புரம் தெற்கு**

விழுப்புரம் - கோலியனூர், விக்கிரவாண்டி - பனையபுரம், வானூர் - கிளியனூர், திருக்கோவிலூர் - தி.எடையார், திருக்கோவிலூர் - திருவெண்ணெய்நல்லூர், திருக்கோவிலூர் - தி.குன்னத்தூர், திருக்கோவிலூர் - திருக்கோவிலூர்,

**விழுப்புரம் வடக்கு**

செஞ்சி -வளத்தி, திண்டிவனம் - திண்டிவனம் நகர்ப்புறம், மயிலம் - மேல்சித்தாமூர்

**திருவண்ணாமலை தெற்கு**

திருவண்ணாமலை - திருவண்ணாமலை நகர்ப்புறம், கீழ்ப்பெண்ணாத்தூர் -கோணலூர், களசப்பாக்கம் - சொரகுளத்தூர், செங்கம் - அரட்டவாடி

**திருவண்ணாமலை வடக்கு**

போளூர் - சேத்துப்பட்டு, ஆரணி - நாவல்பாக்கம், செய்யார் - நெடும்பிறை, வந்தவாசி - வழுவூர்,

**திருப்பத்தூர்**

ஆம்பூர் - வெங்கடசமுத்திரம், வாணியம்பாடி - ஆண்டியப்பனூர் -ஜோலார்பேட்டை - தாமலேரிமுத்தூர், திருப்பத்தூர் -காக்கணாம்பாளையம்

**வேலூர்**

காட்பாடி- சேர்காடு, வேலூர் - கஸ்பா, அனணக்கட்டு - ஒடுகத்தூர், கீ.வ.குப்பம் - இலத்தேரி, குடியாத்தம் - குடியாத்தம் நகர்ப்புறம்

**இராணிப்பேட்டை**

அரக்கோணம் - மூதூர், சோளிங்கர் - புன்னை, இராணிப்பேட்டை - வாலாஜா, ஆற்காடு -ஆற்காடு நகரம்

**காஞ்சிபுரம் தெற்கு**

செய்யூர் - நெரும்பூர், மதுராந்தகம் -இரும்பேடு, உத்திரமேரூர் - களியாம்பூண்டி காஞ்சிபுரம் - பஞ்சுபேட்டை,

**காஞ்சிபுரம் வடக்கு**

ஆலந்தூர் - கோவூர், திருப்பெரும்புதூர் - குன்றத்தூர், திருப்பெரும்புதூர் - பண்ருட்டி, திருப்பெரும்புதூர்-மதுரமங்கலம், பல்லாவரம் - ஜமீன் பல்லாவரம், பல்லாவரம்- பொழிச்சலூர், தாம்பரம் -இரங்கநாதபுரம், தாம்பரம் - காமராஜபுரம், தாம்பரம் -செம்பாக்கம், தாம்பரம் - வசந்தம் நகர், தாம்பரம் - பட்டேல் நகர், தாம்பரம் -பீர்க்கங்கரணை, செங்கல்பட்டு-ரெட்டிப்பாளையம், திருப்போரூர் -சதுரங்கப்பட்டிணம்

**திருவள்ளூர் மத்திய மாவட்டம்**

பூவிருந்தவல்லி - பூவிருந்தவல்லி நகரம், பூவிருந்தவல்லி - திருநின்றவூர், ஆவடி - விளிஞ்சியம்பாக்கம், ஆவடி - பெரியார்நகர்

**திருவள்ளூர் மேற்கு**

திருவள்ளூர் -திருவலங்காடு,

**திருவள்ளூர் கிழக்கு**

கும்மிடிப்பூண்டி- கும்மிடிப்பூண்டி நகரம், கும்மிடிப்பூண்டி - பூண்டி, கும்மிடிப்பூண்டி-எல்லாபுரம், பொன்னேரி - மீஞ்சூர், பொன்னேரி - காட்டூர், பொன்னேரி - பஞ்செட்டி

**சென்னை தெற்கு**

மதுரவாயில் - நெற்குன்றம், மதுரவாயில் - முகப்பேர், விருகம்பாக்கம் - ஜாபர்கான்பேட்டை, சைதாப்பேட்டை - சைதாப்பேட்டை மேற்கு, வேளச்சேரி -திருவான்மியூர், சோழிங்கநல்லூர் - பள்ளிக்கரணை, சோழிங்கநல்லூர்- நீலாங்கரை, சோழிங்கநல்லூர் -சோழிங்கநல்லூர் நகரம்

**சென்னை தென்மேற்கு**

தியாகராய நகர் - சி.ஐ.டி நகர், மயிலாப்பூர் - மந்தைவெளி,

**சென்னை மேற்கு**

சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி - ஐஸ்ஹவுஸ்,ஆயிரம்விளக்கு- இராமகாமத்துபுரம், அண்ணா நகர் - பாரதிபுரம்

**சென்னை வடகிழக்கு**

மாதவரம் -சோழவரம், மாதவரம் -விளாங்காடுப்பாக்கம், திருவெற்றியூர் - மல்லிகாபுரம்,

**சென்னை வடக்கு**

டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் - வார்டு 39, ஆர்.கே.நகர், டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் - அன்னை சத்யா நகர், பெரம்பூர் - கொடுங்கையூர், இராயபுரம் - பழைய வண்ணாரப்பேட்டை, இராயபுரம் - சஞ்சீவிநாயகர்கோவில்

**சென்னை கிழக்கு**

கொளத்தூர் - அஞ்சுகம் நகர், துறைமுகம் - பி.என்.ஆர்.தோட்டம், பிராட்வே,

**தூத்துக்குடி தெற்கு**

திருவைகுண்டம் - பண்டாரவிளை, ஒட்டப்பிடாரம் -புதியம்புத்தூர்

மேற்கண்டவாறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன என மருத்துவ அணிச் செயலாளர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.





மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆகியோர் நேற்று முன்தினம் (13.09.2023) நீலகிரி மாவட்டம், கூடலூர் அரசு மருத்துவமனையை ரூ.31 கோடி மதிப்பீட்டில், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்துவதற்கான கட்டிடப் பணியினை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்வில் நீலகிரி மாவட்ட ஆட்சியர் திருமதி.மு.அருணா, இணை இயக்குநர் நலப்பணிகள் மரு.பழனிச்சாமி மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

## வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு பகுதி!

சென்னை, செப். 15 –

தமிழகத்தில் மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது.

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்திருப்பதாவது, வடமேற்கு வங்கக் கடல் மற்றும் அதனை ஒட்டிய மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகியுள்ளது. இது அடுத்த மூன்று தினங்களில் ஒடிசா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளை நோக்கி நகரக்கூடும். மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளின் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், தெட்சிணாபுரம் ஊராட்சியில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், வேங்கிடகுளம் வல்லத்திராக்கோட்டை சாலை முதல் கடையான்தோப்பு வரை சாலை அமைக்கும் பணியினை அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். உடன் திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.வள்ளியம்மை தங்கமணி, மாவட்ட ஊரக வளர்ச்சித்துறை செயற்பொறியாளர் எஸ்.பாலகிருஷ்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர் கோகுலகிருஷ்ணன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

நாமக்கல் மேற்கு மாவட்டத்தில்

# “என்னை ஈர்த்த கலைஞர்” லோகோ!

## மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் வெளியிட்டார்!

நாமக்கல், செப். 15 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நாமக்கல் மேற்கு மாவட்ட கழக தகவல் தொழில் நுட்ப அணி சார்பில் கலைஞர் அவர்களின் சிறப்பை கொண்டாடும் வகையில் “என்னை ஈர்த்த கலைஞர் “ என்ற தலைப்பில் வருடம் முழுவதும் வீடியோக்கள் வெளியிடப்பட உள்ளது.

ஒவ்வொரு துறையிலும் உள்ளவர்கள் கலைஞர் அவர்களால் எவ்வாறு கவரப்பட்டார்கள் என்பதை குறும்படமாக எடுத்து வீடியோக்கள் மூலம் சமூக வலைதளங்களில் வெளியிடப்பட உள்ளது. இது ஒரு புதுமை திட்டம் ஆகும்.

இதற்கான இலச்சினையை நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம். மதுரா செந்தில் வெளியிட்டு, தகவல் தொழில் நுட்ப அணியினரை பாராட்டினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் கௌதம், துணை அமைப்பாளர்கள் தினேஷ் குமார், வடிவேல், பரசுராமன், தமிழ்தாரணி, சேக் மீரான் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பேரறிஞர் அண்ணா 115வது பிறந்த நாள்

# திருச்சி மாநகர தி.மு.க. சார்பில் அண்ணா சிலைக்கு மாலை!

## மாநகரச் செயலாளர் மு.மதிவாணன் அறிக்கை!

திருச்சி, செப். 15 -

திருச்சி மாநகரச் செயலாளர் மு.மதிவாணன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்தை அரசியல் உலகிற்கு எடுத்துக்காட்டிய அரசியல் ஆசான், தந்தை பெரியாரின் வாரிசாகவும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அண்ணனாகவும் வாழ்ந்து மறைந்த அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இன்று (15.9.2023 வெள்ளிக்கிழமை) காலை 8.00 மணி அளவில் திருச்சி சிந்தாமணியில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவ சிலைக்கு அதேபோல் காலை 8.15 மணிக்கு திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவ சிலைக்கு கழக முதன்மை செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு அவர்களின் தலைமையில் மாவட்ட செயலாளர் அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்த உள்ளோம். இந்த நிகழ்வில் மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, தொகுதி, பகுதி, வட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதி நிதிகள், கழகத் தொண்டர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாறு திருச்சி மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் கேட்டுக் கொண்டுள்ளார்.

கவுண்டம்பாளையம் - 35வது வட்டக் கழகம் சார்பில்

# பேருந்தை இயக்கக்கோரி பொதுமக்கள் சார்பில் கோரிக்கை மனு!

## சோ.துரைபாண்டியன் ஏற்பாட்டில் கண்ணகி முன்னிலையில் அளித்தனர்!

கோவை, செப். 15-

திராவிட முன்னேற்றக் கழகம் 35 வது வட்டக் கழகத்தின் சார்பாக கழக நிர்வாகிகளான அவை தலைவர் சோ. துரைப்பாண்டி யன் ஏற்பாட்டில் கவுண்டம்பாளையம் பகுதி கழக துணைச் செயலாளர் திருமதி கண்ணகி முன்னிலை வகிக்க முன்னாள் தலைமை வனக் காப்பாளர் வரதராஜ் IFS மற்றும் கே.எம்.அசோசியேட்ஸ் முருகானந்தம் இ சர்வீஸ் மோகன்ராஜ் ரியல் எஸ்டேட் ராதாகிருஷ்ணன் சலூன் பாலன் ஆகியோர் நேற்றைய தினம் மேட்டுப்பாளையம் ரோட்டில் உள்ள அரசு போக்குவரத்து கழக தலைமை அலுவலகத்தில் போக்குவரத்து கழக பொது மேலாளர் ஸ்ரீதரன் அவர்களை நேரில் சந்தித்து இரண்டு வருடங்களுக்கு மேல் நீண்ட காலமாக இயக்காமல் இருந்த 4 N பேருந்தை அந்தப் பகுதி மக்களின் பொது நலன் கருதி அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க நமது கட்சியின் சார்பில் வலியுறுத்தி கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் அவரும் ஆவண செய்வதாக உறுதி அளித்துள்ளார்.

நல்லாட்சி புரியும் தமிழ் நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆளுமைக்கு உட்பட்ட போக்குவரத்து அமைச்சர் சிவசங்கர் ஒத்து ழைப்புடன் பொது மக்களின் குறைகளை போக்கும் வகையில் கடந்த இரண்டு வருடங்களாக நிறுத்தப்பட்ட பேருந்து திரும்பவும் இந்த பகுதி வழித்தடத்தில் வந்து செல்ல 35வது வட்டக் கழகத்தின் சார்பாக கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## மாஸ்டர் தமிழ்ப்பித்தன்

## செப்டம்பர் 15 (2001)



கழகத்தில் சாதாரண தொண்டராக இருந்து படிப்படியாக உயர்ந்து தி.மு.க. மாநில தொண்டர் அணிச் செயலாளராகப் பொறுப்பேற்று சிறப்புற பணியாற்றியவர்.

2001ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா பிறந்த நாளன்று சிறந்த தொண்டர் அணியின் விருதினை தலைவர் கலைஞர் அவர்கள் கையால் பதக்கம் பெற்றவர்.

தன் உயிரினும் மேலான தலைவர் கலைஞர் திருக்கரத்தால் விருதினைப் பெற்று அளவற்ற மகிழ்ச்சியில் நின்ற மாஸ்டர் தமிழ்ப்பித்தன் அதே இடத்தில் தன்னுயிரை இழந்தார்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

## கவுதம புத்தர் !



அறியாமை இருளில் ஆழ்ந்து, மூட நம்பிக்கைகளில் மூழ்கிக் கிடந்த மக்களிடையே அறிவொளியைப் பாயவிட்டார் ஓர் அறவாணர் !

பசி, பிணி, மூப்பு ஆகிய தாங்கொணாத துன்பங்களில் சிக்கி, எண்ணற்ற மக்கள் தவிக்கும் பொழுது - தாம் மட்டும் தன்னலத்தோடு இன்பங்களில் மிதப்பதா என்று எண்ணி அரண்மனை வாழ்வுக்கே விடை கொடுத்தார் அந்த இளவரசர் !

நீதியற்ற முறையில் வேத சமயத்தினராகிய ஆரியர் புகுத்திய சாதி முறையைச் சாடி, எந்தத் தொழில் புரிவோரும் இணைந்து வாழும் ஒருமைப்பாடு கொண்ட ஒரு சமநிலைக் குமுகாயத்தை உருவாக்கும் அறப் புரட்சியை நடத்தினார் அந்தப் பகுத்தறிவுப் பரிதி ! அவர்தாம் கவுதம புத்தர் !

**- பேரறிஞர் அண்ணா**


சி.சுப்பரமணியன் தலைமை! மகா.குமார் முன்னிலை!

## தலைஞாயிறு ஒன்றிய, பேரூர் அலுவலக சுற்றுச் சுவர் திறப்பு!

### மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் வழங்கினார்!

நாகை, செப். 15 - நாகை மாவட்டம் தலைஞாயிறு பேரூர், ஒன்றிய அலுவலக சுற்று சுவர் திறப்பு விழா மற்றும் 17 கழகத்தினருக்கு பொற்கிழி வழங்கும் விழா தலைஞாயிறு ஒன்றிய, பேரூர்கழக அலுவலகத்தில் நடைபெற்றது. விழாவிற்கு தலைஞாயிறு பேரூர் கழகச் செயலாளர் சி.சுப்பரமணியன் தலைமை தாங்கினார். தலைஞாயிறு ஒன்றியக் கழகச் செயலாளர்மகா.குமார் முன்னிலை வகித்தார். விழாவில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன் கலந்து கொண்டு தலைஞாயிறு பேரூர், ஒன்றிய அலுவலக புதிய சுற்றுச் சுவரை திறந்து வைத்து 17 கழகத்தினருக்கு ரூ. 5000வீதம் பொற்கிழி வழங்கி கழக கொடி ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார். விழாவில் மாவட்டக் கழக துணைச் செயலாளர் கற்பகம்நீல மேகம், பேரூர் அவைத் தலைவர் தமிழ் மணி, பேரூ ராட்சி மன்ற முன்னாள் தலைவர்கள் ராஜேந்திரன், அய்யப்பன், கூட்டுறவு சங்க முன்னாள் தலைவர் பிரபாகர், பால் கூட்டுறவு சங்க தலைவர் மகா லெட்சுமி, மாவட்ட பிரதிநிதிகள் ஹைதர்அலி, வீரக்குமார், பேரூர் துணைச் செயலாளர் முருகானந்தம், பொருளா ளர் அன்பழகன், விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் வெங்கடாசலம், ஒன்றிய அவை தலைவர் ஆர்.ஜி.ராஜமணி, தகவல் தொழில் நுட்ப அணிபேரூர்ஒருங்கிணைப்பாளர் சரவணன், கீர்த்தி காதேவி, அஜய் ராஜா, மாதவன், அப்துல் அஜிஸ், மற்றும் ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், வார்டு கழக செயலா ளர்கள், நிர்வாகிகள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.

## இயேசு பெருமான் !



உலக மக்களிடையே உண்மையான அன்பு, அறம்,இரக்கம், பொறுமை முதலான பண்பு நலன்களைப் பரப்ப வந்தார் ஒரு வழிகாட்டிப் பெருவிளக்கு !

தனக்குக் கடுகளவு தீமை செய்தவனுக்கும் மலையளவு தீமை செய்து பழிவாங்கும் கொடிய இயல்பை விட்டொழித்து, துன்பம் இழைத்தவனுக்கும் நன்மை புரியுமாறு அறிவுறுத்திய மாபெரும் அறவாணர் அவரே !

பல்வேறு தெய்வங்களை வழிபட்டு மூட நம்பிக்கைகளில் முடங்கிக் கிடந்த மக்களிடையே ஒரே கடவுள் தத்துவத்தை முதன் முதல் முழங்கியவர் அவரே !

நீதிநெறியை - அறவழியைப் போற்றி நடப்பவரே உண்மையான கடவுளின் மைந்தர் ஆக முடியும் என்று மக்களை நல்வழிப் படுத்திய மனித மாமருந்தும் அவரே !

அவரே பொறுமைப் பண்பின் இலக்கணமாக வாழ்ந்த இயேசு கிறித்து ஆவார் !

**- பேரறிஞர் அண்ணா**

புகைப்படக் கண்காட்சியை

# மாவட்டங்கள் தோறும் நடத்த அரசு துணை நிற்கும்!

### தமிழ்நாடு பத்திரிகைப் புகைப்பட கலைஞர்கள் சங்க புதிய அலுவலகத் திறப்பு விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உறுதி!

**சென்னை, செப். 15 -**

**“உங்களது புகைப்படக் கண்காட்சியை மாவட்டங்கள் தோறும் நடத்த அரசு துணை நிற்கும்” என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு பத்திரிகைப் புகைப்படக் கலைஞர்களின் புதிய அலுவலகத் திறப்பு விழாவில் உரையாற்றும்போது கூறினார்.**

தமிழ்நாடு பத்திரிகை புகைப்படக் கலைஞர்கள் சங்க புதிய அலுவலகக் கட்டிடம் திறப்பு விழா சூளையில் நடைபெற்றது. அமைச்சர் பி.கே. சேகர்பாபு , சி.பி.எம். ஜி. ராமகிருஷ்ணன், நக்கீரன் கோபால், பரந்தாமன் எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர் சுதாகர், கவுன்சிலர்கள் பரிதி இளம்சுருதி, ராஜேஸ்வரி மற்றும் கழக முன்னணியினர் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது :-

தமிழ்நாடு பத்திரிகைப் புகைப்படக் கலைஞர்களின் புதிய அலுவலகம் திறப்பு விழா மற்றும் 18ஆம் ஆண்டு தொடக்க விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு அவர்களே, இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு உங்களை எல்லாம் வாழ்த்திய சி.பி.எம். கட்சியின் தலைமைக்குழு உறுப்பினர் ஜி.ராமகிருஷ்ணன் அவர்களே, சென்னை மாநகராட்சியின் ஆணையர் ராதாகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ் அவர்களே, எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் பரந்தாமன் அவர்களே, நக்கீரன் கோபால் அவர்களே, சங்கத்தின் தலைவர் ஜோதி ராமலிங்கம் அவர்களே, துணைத் தலைவர்கள் அஸ்வின் அவர்களே, மணிவாசகம் அவர்களே, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் ரவிச்சந்திரன் அவர்களே, மற்றும் கழக நிர்வாகிகளே!

இங்கே பேசிய போது பலரும் நம்முடைய அமைச்சர் சேகர்பாபு அவர்களது துறையின் செயல்பாடுகளை எல்லாம் பாராட்டி பேசினார்கள். நீங்கள் மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ்நாடும் நம்முடைய முதலமைச்சர் அவர்களும் அவருக்கும் அந்தத் துறைக்கும் தனது பாராட்டுகளைத் தெரிவித்துள்ளார். சேகர்பாபு அவர்களின் பணிகளுக்குப் பாராட்டு விழாவும் நடத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால், ஒருபக்கம் அவர் பதவியை ராஜினாமா செய்யவேண்டும் என்றும், ஒரு கூட்டம் இங்கு சுற்றிக் கொண்டிருக்கிறது. இதையெல்லாம் நீங்கள் அறிவீர்கள் என்று நம்புகிறேன்.

**மகிழ்ச்சியுடன் கலந்துகொண்டிருக்கிறேன்!**

இந்த நிகழ்ச்சி என் மனதுக்கு மகிழ்ச்சியும் நெகிழ்ச்சியும் தரக்கூடிய நிகழ்ச்சியாக இருக்கிறது. ஏனென்றால், உங்களையெல்லாம் நான் அடிக்கடி சந்திக்கிறேன். இன்னும் சொல்லப்போனால் தினமும் நேரில் பார்க்கின்றேன். அதுவும் குறிப்பாக, உங்கள் சங்கத்தின் தலைவர் ஜோதி ராமலிங்கம் அவர்கள், என்னை எந்த நிகழ்ச்சியில் பார்த்தாலும், இந்த நிகழ்ச்சிக்கு நீங்கள் வரவேண்டும் என்று என்னை அழைப்பார். இப்போது என்னைக் கட்டாயப்படுத்தி, இந்த நிகழ்ச்சிக்கு அழைத்து வந்திருக்கிறார். இருந்தாலும், மகிழ்ச்சியுடன் நான் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கிறேன்.

**புகைப்படம் முந்திக்கொண்டு மக்களைச் சென்றடையும்!**

இந்தச் சங்கம் எந்த அளவு பெருமை வாய்ந்த சங்கம் என்றால் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 2006 ஆம் ஆண்டு இதே செப்டம்பர் 13ஆம் நாள் தொடங்கி வைக்கப்பட்ட சங்கம், இதே போல் 17 ஆண்டுகள் சிறப்பாக வெற்றிகரமாக நடந்து முடிந்து, இப்போது 18 வது ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றது. உங்களுடைய புதிய அலுவலகத் திறப்புக்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஏற்கனவே, நான் சொன்னது போல், பக்கம் பக்கமாக நாம் எழுதினாலும், அவை அத்தனையும் புரிகிற மாதிரி ஒரே ஒரு புகைப்படத்தில் எடுத்துக்காட்டுவதுதான் நீங்கள். வரும் செய்திகளைவிட உங்களுடைய புகைப்படம்தான் முந்திக்கொண்டு மக்களைச் சென்றடையும் அந்த வகையில், என்னுடைய `எய்ம்ஸ் செங்கல்' புகைப்படத்தை பற்றிக்கூட நீங்கள் இங்கே குறிப்பிட்டுப் பேசினீர்கள். அதற்கு என் நன்றி.

சமீபத்தில் எட்டு நாட்கள் நடைபெற்ற உங்களுடைய புகைப்படக் கண்காட்சியை நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான் அந்தக் கண்காட்சி தொடங்கி வைத்துப் பாராட்டினார்கள்.

நான் அந்தக் கண்காட்சியின் கடைசி நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கண்காட்சியை முடித்து வைத்தேன். அப்போது, நான் ஒரு கோரிக்கையை உங்களிடம் வைத்தேன். இந்தக் கண்காட்சியை நீங்கள் மாவட்டம்தோறும் நடத்த வேண்டும் என்று ஒரு கோரிக்கை வைத்திருந்தேன்.

அதை நீங்கள் பரிசீலனை செய்ய வேண்டும். அதற்கு, நானும் நம்முடைய அரசும் நம்முடைய முதலமைச்சர் அவர்களும் உங்களுக்குத் துணை நிற்போம் என்று கூறிக்கொள்கிறேன்.

இங்கு அழைக்கும்போதே, ஏதாவது ஒரு கோரிக்கை வைப்பீர்கள் என்று நான் நினைத்தேன்.அந்தக் கோரிக்கையை முதல்வர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று என்னால் முடிந்தவரை அதை முடித்துத் தருகிறேன் என்று கூறிக்கொள்கின்றேன். உங்கள் பத்திரிக்கை புகைப்படப் பணிகளுடன் சமூகநலனையும் இணைத்துத் தான் உங்கள் பணிகளைச் செய்து கொண்டிருக்கிறீர்கள்.

அதை நீங்கள் தொடர்ந்து செய்ய வேண்டும். இந்தச் சங்கம் இன்னும் பெரிதாக வளர்ந்து, இதைவிடப் பெரிய அலுவலகம் அமைக்கவேண்டும் என்றும் கோரிக்கை வைத்துள்ளீர்கள். அதையும் நான் அரசு சார்பாக முடிந்தவரை நிறைவேற்றி செயல்படுத்தித் தருகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா!

## சேலம் கிழக்கு மாவட்டத்தில் சிறப்பாகக் கொண்டாடுவீர்!

### மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிக்கை!



சேலம், செப். 15 - சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு :

அறிவுலக மேதை தமிழ்மொழியினை உலகெங்கும் அறியச் செய்தவரும் திராவிட இயக்க ஆசான் தி.மு.கழக நிறுவனர் பேரறிஞர் அண்ணா அவர்களின் 115 வது பிறந்த நாள் செப்டம்பர் 15 ஆம் தேதி கொண்டாடப்பட உள்ளது .

பேரறிஞர் அண்ணா அவர்கள் வழி நின்று அண்ணாவின் கொள்கை கோட்பாடுகளை துளியும் பிசகின்ற காத்து அவர் உருவாக்கிய திராவிட முன்னேற்றக் கழகப் பேரியக்கதை கோடிக்கணக்கான தொண்டர்களையும் அனுதாபிகளையும் கொண்டு தலைவர் பேரறிஞர் அண்ணா, கலைஞர் அவர்கள் வழியில் நல்லாட்சி நடத்தி வரும் கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் அறிவுரைப்படி பேரறிஞர் அண்ணா அவர்களின் 115 வது பிறந்த நாள் ஒவ்வொரு தொண்டனும் கொண்டாட வேண்டும். அதன்படி இன்று (15.9.2023 - வெள்ளிக்கிழமை) கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் (எனது) தலைமையில் வாழப்பாடியில் உள்ள மாவட்ட அலுவலகத்தில் காலை 9 மணியளவில் பேரறிஞர் அண்ணா வின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து கழக இரு வண்ண கொடியை உயர்த்தி இனிப்புகள் வழங்கியும் நலத்திட்ட உதவிகள் வழங்கியும் பேரறிஞர் அண்ணாவின் கொள்கை போற்றும் வகையில் சிறப்புடன் கொண்டாடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அதுசமயம் அந்தந்த பகுதிகளில் மாநில ,மாவட்ட கழக நிர்வாகிகள் செயற்குழு,பொதுக்குழு, உறுப்பினர்கள், ஒன்றிய, நகர , பேரூர் , கழக செயலாளர்கள், ஊராட்சி கிளைக் கழக செயலாளர்கள்,முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் , இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், இளைஞரணி , மாணவரணி, மகளிரணி, வழக்கறிஞர் அணி ,தகவல் தொழில்நுட்ப அணி,விவசாய அணி ,மகளிர் தொண்டரணி , பொறியாளர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, சுற்றுச் சூழல் அணி, உள்பட ஆகிய அணிகளின் நிர்வாகிகள் பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

பேரறிஞர் அண்ணா 115வது பிறந்தநாள் விழா! பெரம்பலூர் மாவட்டம்

## வேப்பந்தட்டையில் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை! திரளாக பங்கேற்பீர்!!

### மாவட்டச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன் வேண்டுகோள்!



பெரம்பலூர், செப். 15 - பெரம்பலூர் மாவட்டச் செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்ப தாவது,

காஞ்சி தந்த காவியத்தலைவர், உலகத்தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டு வீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர், தமிழ்மொழி உயர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட்டிற்காகவும், தமிழ்நாட்டின் சிறப்பிற்காகவும் வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த அறிவியலாளர். “இப்படி தோற்கின் எப்படி வெல்லும்” என்று தம்பிமார் பெரும்படையை கண்டு நெஞ்சம் நிமிர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன். “மெட்ராஸ் ஸ்டேட் “என்ற பெயரை தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்து, தாய்க்கு பேர் தந்த தனி பெரும் தனயன். சுயமரியாதை சுடரொளி, சொக்க வைக்கும் சொற்பொழிவாளர், எழுத்து வேந்தர், தென்னகத்தின் மிகப்பெரும் அரசியல் தலைவர் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 115 வது பிறந்த இன்று (15.09.2023, (வெள்ளிக்கிழமை ),

காலை 9.00. மணி அளவில் பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டையில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு, மாவட்ட கழகச் செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரன் (எனது) தலைமையில்,சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் முன்னிலையில், மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது .

இந்த நிகழ்ச்சிகளில் பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள்,

ஒன்றிய பெருந்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள்,

கிளைக் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், கழக செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு குன்னம் சி. இராஜேந்திரன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.





தமிழ்நாடு புகைப்படக் கலைஞர்கள் சங்க புதிய அலுவலக கட்டிடத் திறப்பு விழாவின்போது, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்ற 140 புகைப்பட தாரர்களுக்கு இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில் தலா ரூ.4,300 மதிப்புள்ள கேமரா பைகளை வழங்கினார். அப்பொழுது அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஜி.இராமகிருஷ்ணன், நக்கீரன் கோபால், பராந்தமன் எம்.எல்.ஏ., கே.எஸ். ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் உடன் உள்ளனர். இந்நிகழ்ச்சியில் சங்கத்தைச் சேர்ந்த அண்மையில் மறைந்த புகைப்படதாரர்களின் படங்களுக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மலரஞ்சலி செலுத்தினார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று முன்தினம் (13.09.2023) தலைமைச் செயலகத்தில் தமிழ்நாட்டில் உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு நகரம் (GLOBAL SPORTS CITY) மற்றும் ஒலிம்பிக் அகாடமிகள் (OLYMPIC ACADEMIES) அமைப்பது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து பெருநகர சென்னை வளர்ச்சி குழுமம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுத்துறை மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

ஒரு கோடிப் பெண்களின் வாழ்க்கைக்கு உதவி செய்யும் உயிர்த்தொகை! இன்று - பேரறிஞர் அண்ணா பிறந்தநாளில்

# கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்! காஞ்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்!

## தமிழ்நாடெங்கும் அமைச்சர் பெருமக்கள் தொடங்கி வைக்கிறார்கள்!

**காஞ்சிபுரம், செப். 15 -**

**ஒரு கோடி பெண்களின் வாழ்க்கைக்கு உதவி செய்யும் உயிர்த் தொகை - கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான இன்று காஞ்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைக்கிறார். தமிழ்நாடெங்கும் இத்திட்டத்தை அமைச்சர் பெருமக்கள் தொடங்கி வைக்கின்றனர்.**

அது பற்றிய விவரம் வருமாறு :-

தமிழ்நாடு அரசினுடைய நிர்வாக வரலாற்றில் மட்டுமல்ல, தமிழ்நாடு வரலாற்றிலும் இவ்வளவு பெரிய திட்டம் இதுவரை உருவாக்கப்பட்டது இல்லை என்று சொல்லும் வகையிலான மாபெரும் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்!

தலைமுறை தலைமுறைக்குப் பயனளிக்கப் போகிற மகத்தான திட்டமிது!

‘எல்லார்க்கும் எல்லாம்’ என்ற நோக்கத்துடன் செயல்படும் நமது ‘திராவிட மாடல்’ அரசின் அனைத்துத் திட்டங்களுக்கும் ஒரு பொதுநோக்கு உண்டு. அதுதான் சமூகநீதி!

நீதிக்கட்சி காலம் தொடங்கி இன்றுவரை தமிழ்நாட்டை வழி நடத்தும் கோட்பாடுதான், சமூகநீதி!

இந்திய அளவில் மட்டுமல்ல, உலக அளவிலும் சமூகநீதியை அடிப்படையாகக் கொண்ட அரசையும், அதன்மூலம் பல புதுமையான, புரட்சிகரமான திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி, சமத்துவ சமூகத்தை உருவாக்குவதில் நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்ட மாநிலம் நம் தமிழ்நாடு.

சமூக அநீதிக்கு எதிராக கிளர்ந்து எழுந்ததுதான் சமூகநீதி!

சாதிய ஏற்றத்தாழ்வு கொண்ட ரத்த பேதமும், ஆண் பெண் வேறுபாட்டை விதைக்கும் பால் பேதமும், இந்தியாவின் சமூக வளர்ச்சியைத் தடுக்கும் சக்திகளாக காலம் காலமாக இருக்கிறது. வரலாற்றின் முந்தையப் பக்கங்களில் பதிவான பிற்போக்குச் சிந்தனைகளால் - செயல்களால் தமிழ்ச் சமுதாயம் பெரிதளவு பாதிப்புக்குள்ளாகி இருந்ததை நாம் அனைவரும் அறிவோம்.



இந்த பாதிப்பு சாதிரீதியான, மதரீதியான வேறுபாட்டை மட்டுமல்ல, சமூகத்தின் சரிபங்காகத் திகழும் மகளிரின் வாழ்க்கைத் தரத்தையும், அடையாளத்தையும், சுயமரியாதையையும் எந்த அளவிற்கு பாதித்தது என்பதை நான் இங்கு அதிகமாக விளக்கத் தேவையில்லை.

தொடக்க காலத்திலிருந்தே தாய்வழிச் சமூக முறைதான், மனிதகுலத்தை வழிநடத்தி வந்திருக்கிறது. உழவுக் கருவிகளைக் கண்டுபிடித்து, வேளாண் சமூகமாக மாறிய போதுகூட, பெண்களின் உழைப்பு ஆண்களுக்கு நிகராகவே அமைந்திருந்தது. ஆனால், காலப்போக்கில், மதத்தின் பெயராலும், பழமைவாதக் கருத்துக்களாலும், பெண்கள் வீட்டுக்குள் முடக்கப்பட்டார்கள். அவர்களுக்குக் கல்வியறிவு மறுக்கப்பட்டது. பெண்குலத்தின் உழைப்பு நிராகரிக்கப்பட்டது. பூட்டிய இரும்புக் கூட்டின் கதவினைத் திறந்து, பெண் அடிமைத்தனத்தைத் தகர்த்து, அவர்களுக்கான சமூக, பொருளாதார விடுதலையை மீட்க எத்தனையோ சமூகச் சீர்திருத்தவாதிகள் பணியாற்றினார்கள்.

“மேட்டுக்குடியைச் சேர்ந்த ஒருவன், ஏழையை அடித்தால் நான் ஏழையின் பக்கம் நிற்பேன். ஏழை ஒருவன் தனது வீட்டில் தனது மனைவியை அடித்தால், அவன் மனைவி பக்கமாக நிற்பேன். யார் பக்கம் நிற்கிறேன் என்பதே எனது நிலைப்பாடு” என்று சொன்ன தந்தை பெரியார், இந்த நூற்றாண்டின் மாபெரும் சிந்தனையை விதைத்தார்.

அதனை பேரறிஞர் அண்ணாவும், தமிழினத் தலைவர் கலைஞரும் அரசின் திட்டங்களாகச் செயல்படுத்திக் கொடுத்தார்கள். இதன் விளைவுதான், இன்று பள்ளி, கல்லூரிப் படிப்புகளில் மாணவிகள் அதிகம் பயின்று கல்வியில் சிறந்து விளங்குகின்றனர்.

அரசுப் பணியாளர் தேர்வுகளில் பெண்கள் அதிகம் தேர்ச்சி பெறுவது தமிழ்ச் சமூகத்தின் முதிர்ச்சியைக் காட்டுகிறது. குறிப்பாக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக்காலத்தில், பெண்களுக்கான எண்ணற்ற பல

திட்டங்களை எல்லாம், மகளிர் நலனையும், அவர்களது மேம்பாட்டினையும் கருத்தில் கொண்டு செயல்படுத்திக்காட்டிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது அளப்பரிய பணிகளை நினைவுகூரும் வகையிலும், அவரது நூற்றாண்டு விழாவிற்கு மேலும், மேலும் பெருமை சேர்க்கும் விதத்திலும், இந்த மகத்தான மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்திற்கு “கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்” எனப் பெயர் சூட்டுவது பொருத்தமாக இருக்கும் என கருதி, கழக அரசு இந்தத் திட்டத்திற்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது பெயரைச் சூட்டி மகிழ்ந்திருக்கிறது.

இந்த வரிசையில் மகளிருக்கு மகுடம் சூட்டும் வகையில் மகளிர் உரிமைத்தொகையை மாதம் தோறும் வழங்க அரசு முடிவெடுத்துள்ளது. இல்லறப் பொறுப்புகளுடன் பணிகளுக்குச் சென்று, அதன்மூலம் தங்கள் குடும்பங்களின் உயர்வுக்கு உழைத்து வரும் மகளிரின் உழைப்பை முறையாக அங்கீகரிக்க வேண்டும்.

இந்தத் திட்டத்தை பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான இன்று (செப்டம்பர் 15ஆம் நாள்) காலை 10 மணிக்கு காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைக்கிறார். தமிழ்நாடெங்கும் இத்திட்டத்தை அமைச்சர் பெருமக்கள் தொடங்கி வைக்கின்றனர்.

21 ஆம் தேதி விசாரணைக்கு வருகிறது: காவிரி விவகாரத்தில் உச்சநீதிமன்றம் மூலமாக

# தமிழ்நாட்டின் உரிமையைப் பெறுவோம்!

## நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உறுதி!

சென்னை, செப். 15 –

காவிரி விவகாரத்தில் கடைசி வாய்ப்பு உச்சநீதி மன்றத்தை அணுகுவது மட்டும்தான் தீர்வு என்றும் உச்சநீதிமன்ற விசாரணைக்குப் பிறகு தேவைப் பட்டால் அனைத்துக் கட்சி கூட்டத்தை கூட்டுவோம் என்றும் கர்நாடக அரசின் எதிர்ப்பை சந்தித்து, மக்களுக்கு காவிரி நீரை பெற்றுத் தருவோம் என்றும் சென்னை கோட்டூர்புரத்தில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுரு கன் செய்தியாளர்களுக்கு பேட்டியளிக்கையில் குறிப்பிட்டார்.

இதுகுறித்து நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:–

காவிரி ஒழுங்காற்று குழுக் கூட்டத்தில் கர்நாடக அரசு 5 ஆயிரம் கன அடி தண்ணீர் திறப்பதை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுள்ளனர். நாங்கள் மறுபரிசீலனை இல்லாமல் தண்ணீர் தர வேண்டும் என்று கேட்டுள்ளோம்.

**கேள்வி** : உச்சநீதிமன்றம் வரை செல்வோம் என்று கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா கூறியுள்ளாரே?

**அமைச்சர் துரைமுருகன்**: உச்சநீதிமன்றம் என்பது கர்நாடகத்துக்கு மட்டுமல்ல, எங்களுக்கும் அதுதான் உச்சநீதிமன்றம். என்றைக்கு இந்த பிரச்சினை ஆரம்பித்ததோ, இன்றைக்கும் இதே பிரச்சினை தான். அவர்கள் முதலில் நடுவர் மன்றத்தையே ஒத்துக் கொள்ளவில்லை. அதற்கு பிறகு நடுவர் மன்றத்துக்கு வாதாடி அதை பெற்றோம். நடுவர் மன்றத்தில் ஒரு இடைக்கால தீர்ப்பு கேட்டோம். அதை கொடுக்கக் கூடாது என்று கர்நாடகா முட்டுக்கட்டை போட்டது.

அதற்கு பிறகு உச்ச நீதிமன்றம் சென்று அதற்கும் தீர்வு கண்டோம். அதன் பிறகு கெஜட்டில் வெளியிடக் கூடாது என்றனர். அப்போதும் உச்ச நீதிமன்றம் சென்றனர். காவிரி நீர் பிரச்சினையில் ஒவ்வொரு அங்குலத்திலும் கர்நாடகா எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

அதை நாங்கள் சந்தித்து தமிழ்நாட்டு மக்களுக்கு வேண்டிய உரிமையை பெற்றுக் கொண்டு தான் வந்துள்ளோம். இனியும் பெறுவோம்.


வரும் 21ம் தேதி உச்ச நீதிமன்றத்தில் காவிரி தொடர்பான வழக்கு வரவுள்ளதாகவும், அப்போது, கர்நாடக அரசின் முடிவு தெரிந்துவிடும்.

கர்நாடகாவில் உள்ள 4 அணை களின் நீர் இருப்பு குறித்து உச்சநீதிமன்றத்தின் மேற்பார்வையில் ஒன்றிய அரசு அதிகாரிகள் ஆய்வு செய்ய வேண்டும்.

காவிரி நீர் விவகாரம் தொடர்பாக உச்சநீதி மன்றமே ஒரு குழுவை அமைக்கலாம், தமிழ்நாட்டுக்கு நிச்சயம் காவிரி நீர் பெற்றுத் தரப்படும்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

# தீ பரவட்டும்! ஆரிய மாயை அகலட்டும்!



**கா**ஞ்சிபுரம்!

பேரறிஞர் பலரை உலகிற்கு தந்து, பெரும்புகழ் கொண்ட மாநகரம்!

தறி ஓசையும், தமிழோசையும் எங்கும் ஒலிக்கும் உன்னதத் தலம்! கல்லிலே கலை வண்ணம் கண்ட பல்லவ மன்னர்களின் தலைநகரம்!

இத்தகு சிறப்புகள் கொண்ட காஞ்சியில், என்றுமே மறையாப் புகழ் கொண்ட நமது மன்னவர், தென்னவர் போற்றும் தென்னாட்டு காந்தி, அறிவுலகமேதை பேரறிஞர் அண்ணா அவர்கள் தோன்றினார்.

உலகில் தோன்றிய அத்தனை தலைவர்களும் தம்மகத்தே கொண்டிருந்த தனிப்பட்ட சிறப்புகள் அனைத்தும் தன்னகத்தே ஒருங்கே அமைந்த மாபெரும் மனிதநேயப் புனிதர் மாமேதை அண்ணா அவர்கள்.

பாட்டும், பரதமும், கோட்டும், குடியும் பரிமளித்த அரசியலில், அழுக்கு வேட்டியும், அனல் கக்கும் பேச்சும், அடுக்குமொழி வீச்சும் அரங்கேற அடித்தளமிட்டவர் அண்ணா.

எண்ணிய எண்ணம் ஈடேற, எதையும் செய்ய எத்தனித்த எத்தர்கள் மத்தியில், இதய சுத்தியோடு எவர் மனமும் நோகாமல், இலட்சிய மலர் பறித்த இயக்கத்தலைவர் அண்ணா.

மேடையில் வீசிடும் மெல்லியப் பூங்காற்றாய், இலக்கிய அரங்குகளிலும், அரசியல் மேடைகளிலும், கல்லூரி கலா மண்டபங்களிலும், இனிய, எளிய சொல்லாட்சி மூலம் சுவைபட பேசி, கேட்போரை சொக்க வைத்து, எதிரிகளை விக்க வைத்து, தன்பால் ஈர்த்த சொல்லின் வல்லவர் நமது அண்ணா அவர்கள்.

சௌமியன், சமதர்மன், சம்மட்டி, ஒற்றன், ஆணி, பரதன், நக்கீரன், குறிப்போன், வீரன், வீனஸ் எனும் புனைப்பெயர்கள் கொண்டு, இருட்டு மனிதர்களின் புரட்டு செயல்களை திரை விளக்கி, ஆதாரத்துடன் அம்பலப்படுத்திய எழுத்து வேந்தர் அண்ணா அவர்கள்.

சரித்திர பின்புலம், சாம்ராஜ்ய பெருமை ஏதுமின்றி, சாமானிய குடும்பத்தில் தோன்றி, தும்பை மலர் உள்ளத்தால், தூய லட்சியங்களை ஏற்று, அறிவுநடை தமிழால், ஆரியத்தின் வேரறுத்து அண்ணா! அண்ணா! என எந்நாளும் இளைஞர்படை முரசொலிக்க, வெற்றியுலா வந்தவர் நமது தென்னகத்து கோமகன் அறிஞர் அண்ணா அவர்கள். தனது தீர்க்கமான பேச்சால், எழுத்தால், வாதத்திறமையால், ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் எனும் எளியோர் காவலனாய், நலிவுற்றோர் துயர் துடைத்த நல்லாட்சி நாயகராய், நாடோரும், நல்லோரும் போற்ற ஆட்சி தந்தார். எளிமையின் மாட்சி தந்தார்.

இவ்வாறு நாம் பெருமை கொள்ளும் பேரறிஞர் அண்ணா அவர்கள் குடும்பப் பாச உறவை, இயக்கத்தில் ஏற்படுத்தி, தன்னை தாழ்த்தி, தம்பியரை உயர்த்திய அண்ணாவை, தோழர்கள் எவரேனும் பாராட்டி பெருமை பேசுகையில், அந்தப் பெருமைகளுக்கெல்லாம் காரணம் நீங்கள் தான் என்பார்.

குறைகாணுவது போல் எவரேனும் பேசிவிட்டால், அதற்கும் தானே பொறுப்பேற்று, “என்ன செய்ய? நான் ஐந்தடி உயரம் தான். என்னால், இவ்வளவு தான் எட்டமுடிகிறது. இதற்கு மேல் எட்ட முடியவில்லை” என்பார்.

முனிசிப்பாலிடி உறுப்பினர் வெற்றிக்குக் கூட முழுப்பொறுப்பு நானே! என்று தற்பெருமைக் குரல் ஒலித்திடும் இந்நாளில், லட்சோப லட்சம் மக்கள் கடல் தனது ஆணைக்கு கட்டுப்பட காத்திருந்தும், எனக்காக நீங்கள் அல்ல! உங்களுக்காக நான்! அதுகூட தவறு. உங்களால் தான் நான்! என்ற அடக்கம் மிகுந்த அண்ணாவின் பணிவை எண்ணிப் பார்த்திடில், மெய் சிலிர்க்கிறதன்றோ!

லட்சக்கணக்கான தம்பியர் தனது விழி அசைவிற்கு காத்திருப்பினும், அதில் பெருமை கொள்ளாத பணிவு அண்ணா அவர்களுக்கே உரிய அரிய அணிகலனாகும்.


வழக்கறிஞர்.

**வெ.அன்புவாணன்**

கொள்கைப் பரப்பு

துணைச் செயலாளர்.




தென்னகத்து அரசியல் வானில் திருப்பங்கள் ஏற்படுத்தி, சரிகை குல்லாய்களும், சமஸ்தானத்து ராஜாக்களும், சந்தன மாலைகளும் கோலோச்சிய அரசியலில், “தம்பிக்கு கடிதங்கள்! என விளித்து, அதை படிக்கும் ஒவ்வொரு இளைஞனும் தனக்காகவே அண்ணா மடல் தீட்டியதாக எண்ணி மகிழ்ந்திடும் வண்ணம் தனது எழுத்தில் ஈரவரிகளை, தவழவிட்டு, தமிழர்களின் வரலாற்றை, இலக்கியத்தை, காதலை, வீரத்தை, வெற்றியை, அவர்கள் ஏந்தி சுழற்றிய வாளின் ஒளி, எடுத்து வீசிய ஈட்டியின் ஓசை, ஏற்படுத்திய தமிழ் மறவர் தமது கம்பீரத்தை சொல்லி, தமிழ் மொழி காக்க தடந்தோள் உயர்த்திட தம்பிகளை தயார் படுத்திய தளபதி நமது அண்ணா அவர்கள்.

ஈரோடு குருகுலத்தில் தனது அறிவைக் கூர்படுத்தி, எவரையும் எளிதில் பாராட்ட நினையாத தனது ஆசான், தலைவர் பெரியார் அவர்களே, அண்ணா அவர்கள் விடுதலை ஏட்டில் எழுதிய “ரிப்பன் கட்டிடத்து சீமான்கள்!” எனும் தலையங்கத்தால் ஈர்க்கப்பட்டு, தள்ளாத வயதிலும் மூன்று மாடி ஏறி வந்து பாராட்டும் அளவிற்கு அனல் கக்கும் எழுத்தாற்றல் நமது அண்ணா அவர்களுக்கு இயற்கையாகவே வசமானது.

இத்தகைய எழுத்தாற்றல் மூலம் சமுதாயத்தில் முடைநாற்றம் வீசிய தீண்டாமை, பெண்ணடிமை இவற்றை, அவற்றின் ஆணிவேரே கருகும் வண்ணம் சாடினார் அண்ணா.

தீண்டாமை எனும் கொடுமையால், இந்தியாவே கோடிக்கணக்கான மக்களை கோயில்களில் நுழைய விடாமல் தடுத்த கொடுமையை, அண்ணா வன்மையாகக் கண்டித்தார்.

“வீணையை மீட்டத்தொடங்கியதும், இசை கேட்க வருபவரின் காதுகளை அடைப்பதுபோல, எழில்மிகு சித்திரவதை தயாரித்து, காணவாரீர்” என அனைவரையும் அழைத்து, சிலரின் கண்களைக் கட்டிவிடுவது போல, பழச்சாற்றின் இனிமையைக் கூறி, பருகக் கொஞ்சம் தருக! என்று கேட்பவரை விரட்டுவதுபோல், ஆலயங்களின் மேன்மையையும், மகிமையையும், பலனளிக்கும் சக்தியையும் சொல்லி விட்டு, அங்கு வரக்கூடாது என்று சிலரை அல்ல, ஏறத்தாழ 90 சதவிகித மக்களும் தடுக்கப்பட்டு வரும் இழிநிலையை தனது எழுத்தின் மூலம் சாடினார்.

தீண்டாமையை போன்றே, சமூகத்தில் புரையோடிப் போன பெண்ணடிமை எனும் கொடுஞ்செயலை, பெண்ணுரிமைக்கு எதிராக வரும் எதிர்ப்புகளை ஒடுக்கி வைக்க, அடக்கி வைக்க, திருத்தி வைக்க, கலை, இலக்கியங்களை போர் கருவிகளாகப் பயன்படுத்தினார். தனது நாடகப் பெண் பாத்திரங்களை முதன்மைப் படுத்தி, முழங்க வைத்தார்.

பாவையின் பயணம் நாடகத்தில் - வனஜா!

காதல் ஜோடி நாடகத்தில் - பொற்கொடி!

ஓர் இரவு நாடகத்தில் - சொர்ணம்!

வேலைக்காரி நாடகத்தில் - அமிர்தம்!

சந்திரோதயம் நாடகத்தில் - சந்திரா!

போன்ற பெண் பாத்திரப் படைப்புகள் மூலம் பெண்ணினத்தை அடிமைப் படுத்திய முதலாளித்துவ, ஆணாதிக்க செல்வந்தர்களுக்கு எதிராக தனது எழுத்தின் மூலம்போர் முழக்கம் செய்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

அக்ராசனாதிபதியும், அபேட்சகரும் ஆளுமை கொண்டிருந்த அரசியலில், அண்ணன் தம்பி பாசத்தோடு அவைத்தலைவர் என விளித்த அருந்தமிழ் காவலர் அண்ணா அவர்கள்.

வற்றாத வளங்கள் கொண்ட தென்னகம் வடவரின் சூழ்ச்சியால் எத்துறையிலும் புறக்கணிப்பட்டதை,

இங்கே,

வெட்டினால், வெள்ளி!

தட்டினால், தங்கம்!

இடித்தால், இரும்புவளம்!

என ஆதாரத்தோடு அடுக்கு மொழியில் வாதிட்ட மண்ணின் மைந்தன் நமது அண்ணா.

இத்தகைய பெருமைகளுக்கெல்லாம் பாத்திரமான பாசமிகு தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான இந்நன்நாளில் அவரே சொன்னது போல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பணி இன்னும் ஓர் ஐம்பதாண்டிற்கு தேவை தான் படுகிறது. ஆட்சியதிகாரம் பெற்றும், அன்றிருந்த சனாதன சந்தடிகள், தமது கோர முகத்தை பல ரூபங்களில் காட்டியே வருகின்றன. பெரியார், அண்ணா, தலைவர் கலைஞர், தமிழினத் தளபதியவர்களைத் தொடர்ந்து, திராவிட இயக்கங்களின் நாளைய நம்பிக்கை! நமது இளைஞரணிச் செயலாளர் மிஸ்டர் 10 கோடி என்று ஏக இந்தியாவிற்கே எடுத்துச் செல்லப்பட்டு, பிரம்மிப்பூட்டிய அமைச்சர் உதயநிதி அவர்கள் வரை பகுத்தறிவு தீபம் ஏந்தி, படை நடந்தி, பகை முடிக்கும் பணி தொடரோட்டமாய் தொடர்கிறது.

அரசியல் களமென்பது, படமெடுத்தாடும் பாம்புகள் நிறைந்த பாதைகள் நிறைந்ததென்பது தலைவர் கலைஞர் குல குழந்தைகளுக்கும் பாலபாடம் என்பதை அறியாத சில சங்கி, மங்கி, சன்னியாசி, சாமியார் கூட்டங்கள் சவடால் விடுகின்றன.

தென்றலைத் தீண்டாமல் தீயினைத் தாண்டிய தமிழினப் போராளி தலைவர் கலைஞரின் தடம் பற்றி, ஆட்சி, கட்சி நடத்தும் தளபதியவர்கள் கொண்ட கொள்கையில் கண்ட உறுதியை தானும் ஏற்று, அன்று தலைவர் கலைஞர் அவர்கள் முழங்கிய

நடை தள்ளாடலாம்!

தடைபடலாம்!

முடிவுற்றுப் போய்விடலாம்! ஆனால்,

கொண்ட அந்த உணர்வுகட்கு,

தடையில்லை!

தள்ளாட்டமில்லை!

முடிவு இல்லை!

இல்லவே, இல்லை!

என்ற கொள்கை உறுதியோடு வளம் வந்து, இன்று சனாதன மூடப் பழக்க, வழக்கங்களுக்கு சம்மட்டியடி கொடுக்கிறார். அவரது பேச்சில், அனல் கக்கும் வீச்சில் பொசிங்கிப்போனது போலி காவி கூட்டம்.

அடுத்து என்ன வரும்? ஆனது ஆகட்டும்! என்கிறார் முதல்வர்.

அதை அப்படியே தனது பயணங்களில், பதிவிடும் கருத்துகளில் பரிமளிக்கிறார் நமது அமைச்சர் உதயநிதி அவர்கள்.

அண்ணாதான் சொன்னார்;

பதவி எங்களுக்கு தோளில் போடும் துண்டு!

நாங்கள் ஏற்றுக் கொண்ட கொள்கையோ, இடுப்பில் அணியும் வேட்டி!

நான் பதவியெனும் துண்டை இழப்பேனேயன்றி, ஒரு நாளும் கொள்கை எனும் வேட்டியை இழக்க மாட்டேன் என்று.

இடையே எத்தனை ஆண்டுகள் காலத்தின் கரங்களில் கடந்தேபோனாலும், நீர்த்துப் போகாத, நிலையான பகுத்தறிவுப் பாதையில் பயணிக்கும், தலைவர் தளபதி, இளைஞர்களின் எதிர்கால நம்பிக்கை உதயநிதி ஆகியோரின் கரங்களை பலப்படுத்த நமது பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் இந்தப் பிறந்தநாளில் உறுதியேற்போம்!

பகுத்தறிவு தீ பரவட்டும்!


சனாதன ஆரிய மாயை அகலட்டும்!

ஓங்கட்டும் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் பெரும்புகழ்!



திருப்பூர் மாநகராட்சி கே.எஸ்.சி. அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் 11 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 3,390 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.1.63 கோடி மதிப்பீட்டில் விலையில்லா மிதிவண்டிகளை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் அ.லட்சுமணன் தலைமையில், மாநகராட்சி மேயர், திருப்பூர் வடக்கு மாநகர கழக செயலாளர் ந.தினேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர் பவன்குமார் ஜி.கிரியப்பனவர் முன்னிலையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார். இதில் மாநகராட்சி துணை மேயர் பாலசுப்பரமணியம், திருப்பூர் மாநகராட்சி 2ம் மண்டலத்தலைவர் ஆர்.கோவிந்தராஜ், கல்விக்குழு தலைவர் பெ.திவாகரன், மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) எம்.பி. தேவராஜன், கே.எஸ்.சி அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் சிவக்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# திராவிடர் கலாச்சாரம்!



ஆரியக் கலாச்சாரம் வேறு; திராவிடர் கலாச்சாரம் வேறு என்பது பற்றி, ஆராய்ச்சியாளர்கள் தெளிவாகவே கூறியுள்ளனர்.

இந்தியாவிலேயே முதன் முதல் நாகரிகத்தைப் புகுத்தியவர்கள் ஆரியர்கள்தான் என்ற பொய்யுரை ஒழியக் காலம் பிடித்தது.

ஆரியத்தின் துணையின்றி, மிகப் பழங்காலம் தொட்டு, இங்கே வளமான ஒரு நாகரிகம் ஓங்கியிருந்த உண்மையை, உலகு உணர நாட்களாயின.

பண்டைத் தமிழரின் வாழ்வு பாழ்பட்டதும், வீரம் சரிந்ததும், கலை கறையானதும், நிலை குலைந்ததும், ஆரியத்தின் கூட்டுறவால் நேரிட்ட அவதிதான் எனும் உண்மையை உலகு முதலிலே தெரிந்துகொள்ளவில்லை. இந்தியாவை ஆரிய வர்த்தமென்று கூறியும், இந்திய நாகரிகத்தையே ஆரிய நாகரிகம் என்று மொழிந்தும் உலகு கிடந்தது.

பேராசிரியர் சர்.ஜான் மார்ஷல், திராவிடப் பண்புகளை ஆராய்ந்தறிந்து கூறிய போதுதான், மேனாட்டாரின் கண்களிலிருந்த கறையும் கருத்திலிருந்த மாசும் நீங்கிற்று. பிறகு ஆரியம், திராவிட நாகரிகத்தை எவ்வளவு பாழ்படுத்திற்று என்ற ஆராய்ச்சி வரலாயிற்று.

- பேரறிஞர் அண்ணா

## வல்லம் ஒன்றியம் - கல்லேரி கிராமத்தில்

# நகரும் நியாய விலை கடை!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்!

செஞ்சி செப் 15-

விழுப்புரம் மாவட்டம் கூட்டுறவு துறை சார்பில் வல்லம் ஒன்றியம் மேல் சித்தாமூர் ஊராட்சி கல்லேரி கிராமத்தில் நகரும் நியாய விலை கடை திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்குவல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார் தலைமை தாங்கினார்.

ஒன்றிய கவுன்சிலர் லட்சுமி லட்சுமணன், ஊராட்சி மன்ற தலைவர் மகிமைதாஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.


கூட்டுறவு சார் பதிவாளர் கண்ணன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில்சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று நகரும் நியாய விலை கடையை திறந்து வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு ரேஷன் பொருட்களை வழங்கினார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்: திமுக ஆட்சியின் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்ததின் பலனாக இரண்டு கிலோமீட்டர் தூரம் நடந்து சென்று ரேஷன் பொருட்கள் வாங்கிய நிலையை மாற்றி மக்களுடைய தேவைகளை பூர்த்தி செய்கின்ற அரசாக திமுக அரசு திகழுவதாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் பெருமிதம்தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் இளம்வழுதி, அண்ணாதுரை,துரை, கூட்டுறவு சார்பதிவாளர் குமரவேல்,வட்ட வழங்க அலுவலர் மலர்விழி,மாவட்ட கவுன்சிலர்கள் அன்பு செழியன், சசிகலா மோகனசுந்தரம், ஒன்றிய கவுண்சிலர்லட்சுமி லட்சுமணன், மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் தமிழரசன்,முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் கணபதி, முருகேசன், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் முருகன்,ஒன்றிய நிர்வாகிகள் பாண்டியராஜன், ராமதாஸ், பழனி, கண்ணன், கொங்கரப்பட்டு கண்ணன், முருகன், ஜானகிராமன்,மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் கார்வண்ணன், ஊராட்சி நிர்வாகிகள் காசிநாதன். பார்த்திபன், காட்சன், கமலக்கண்ணன், வேலியப்பன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மேல்சித்தாமூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலாளர் தமிழ்மணி நன்றி கூறினார்.

# உலகப் பொதுமறைத் தந்தை திருவள்ளுவர்!



உலகில் வேறு எந்த மொழியில் தோன்றிய எத்தகைய சிறந்த நூலும் இவருடைய அற நூலுக்கு இடையே இல்லை என்னும் பெருமையை எய்தியுள்ளார் ஓர் அறிவுப் பெருங்கடல்!

மற்ற மற்ற அறவாணர் அனைவரும் தங்கள் அறநெறிகளை எடுத்துரைக்க நிறைய சொற்களையும் நீண்ட நீண்ட வரிகளையும் பயன்படுத்தியுள்ள நிலையில் ஏழே சொற்களில், ஒன்றே முக்கால் வரியிலேயே தம் அறநெறிகளைப் பாடல் வடிவிலேயே படைத்துள்ளார் அந்த அறிவுப் பெருமழை!

மக்களின் வழிகாட்டிகளாக வந்த மற்ற மாமனிதர்கள், கண்ணுக்குத் தென்படாத கடவுளுக்கே சிறப்பிடம் தந்து, மதத்தை உருவாக்கி, அதன் மூலமே அறநெறிகளைப் பரப்பியுள்ள நிலையில் - கண்ணாரக் காணக்கூடிய இயற்கைக் காட்சிகளின் வாயிலாகவே மனிதரின் நடைமுறை வாழ்க்கைக்கு ஏற்ற நன்னெறிகளை, விழிப்பூட்டும் அழியா விளக்குகளாக ஏற்றிச் சென்றுள்ளார் அந்தப் பகுத்தறிவுச் செங்கதிரோன்!

அவர்தாம்விண்ணைப்போல்விரியும்நுண்ணறிவுக்குத் தாயகமான திருவள்ளுவர்!

- பேரறிஞர் அண்ணா

## ஈரோடு தெற்கு மாவட்டத்தில்

# பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகள்!

## அமைச்சர் சு.முத்துசாமி அறிவிப்பு!



ஈரோடு, செப். 15-

ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயலாளர் சு.முத்துசாமி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

அறிவுலக மேதை பேரறிஞர் அண்ணா அவர்களின் 115வது பிறந்தநாள் விழா 15.9.2023 வெள்ளிக்கிழமை அன்றும் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 145வது பிறந்த நாள் 17.9.2023 ஞாயிற்றுக் கிழமை அன்றும் ஈரோடு தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஈரோடு மாநகரம் மற்றும் ஒன்றியங்களில் பேரறிஞர் அண்ணா அவர்கள், தந்தை பெரியார் அவர்கள் திருவுருவச் சிலை அல்லது படங்களுக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி கீழ்கண்டவாறு நடைபெறும்

காலை 8 மணிக்கு ஈரோடு மாநகரம் பன்னீர் செல்வம் பூங்கா அண்ணா சிலை & தந்தை பெரியார் சிலைகளுக்கு மாவட்ட அவை தலைவர் கே.குமார் முருகேஸ், மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம், பகுதி கழக செயலாளர் பொ.ராமசந்திரன் தலைமையிலும்,

காலை 8 மணிக்கு சூரியம்பாளையம் பகுதி சூரியம்பாளையத்தில் பகுதி கழக செயலாளர் எஸ்.குமாரவடிவேல் தலைமையிலும்

காலை 8 மணிக்கு வீரப்பன் சத்திரம் பகுதி வீரப்பன் சத்திரத்தில் பகுதி கழக செயலாளர் வி.சி.நடராஜன் தலைமையிலும்

காலை 8 மணிக்கு பெரியசேமூர் பகுதி பெரியசேமூரில் பகுதி கழக செயலாளர் வி.செல்வராஜ் தலைமையிலும்

காலை 8 மணிக்கு சூரம்பட்டி பகுதி சூரம்பட்டியில் வில்லரசம்பட்டி முருகேசன் தலைமையிலும்

காலை 8 மணிக்கு பெரியார் நகர் பகுதி பெரியார் நகரில் பகுதி கழக செயலாளர் அக்னி டி.சந்திரசேகர் தலைமையிலும்

காலை 8 மணிக்கு கொல்லம்பாளையம் பகுதி கொல்லம்பாளையத்தில் கா.லட்சுமணகுமார் தலைமையிலும்

காலை 8 மணிக்கு கருங்கல்பாளையம் பகுதி கருங்கல்பாளையத்தில் பகுதி கழக செயலாளர் குறிஞ்சி என்.தண்டபாணி தலைமையிலும்

காலை 8 மணிக்கு கொடுமுடி வடக்கு ஒன்றியம் புதிய பேருந்து நிலையம் கொடுமுடியில் ஒன்றிய கழக செயலாளர் மு.சின்னசாமி தலைமையிலும்

காலை 8 மணிக்கு கொடுமுடி மேற்கு ஒன்றியம் சிவகிரியில் ஒன்றிய கழக செயலாளர் பா.நடராஜன் தலைமையிலும்

காலை 8 மணிக்கு மொடக்குறிச்சி கிழக்கு ஒன்றியம் மொடக்குறிச்சியில் ஒன்றிய கழக செயலாளர் வி.கதிர்வேல் தலைமையிலும்

காலை 8 மணிக்கு மொடக்குறிச்சி மேற்கு ஒன்றியம் அவல்பூந்துறையில் ஒன்றிய கழக செயலாளர் சு.குணசேகரன் தலைமையிலும்

காலை 8 மணிக்கு மொடக்குறிச்சி தெற்கு ஒன்றியம் அரச்சலூரில் ஒன்றிய கழக செயலாளர் ஆர்.விஜயகுமார் தலைமையிலும்

காலை 8 மணிக்கு சென்னிமலை ஒன்றியம் வெள்ளோட்டில் ஒன்றிய கழக செயலாளர் பி.செங்கோட்டையன் தலைமையிலும்

காலை 8 மணிக்கு ஈரோடு ஒன்றியம் நசியனூரில் ஒன்றிய கழக செயலாளர் தோப்பு சதாசிவம் தலைமையிலும்

காலை 8 மணிக்கு பெருந்துறை தெற்கு ஒன்றியம் பெருந்துறையில் ஒன்றிய கழக செயலாளர் கே.பி.சாமி தலைமையிலும்

காலை 8 மணிக்கு பெருந்துறை கிழக்கு ஒன்றியம் காட்சிகளில் ஒன்றிய கழக செயலாளர் சி.பெரியசாமி தலைமையிலும்

காலை 8 மணிக்கு பெருந்துறை வடக்கு ஒன்றியம் திங்களூரில் ஒன்றிய கழக செயலாளர் பி.சின்னசாமி தலைமையிலும்

காலை 8 மணிக்கு ஊத்துக்குளி தெற்கு ஒன்றியம் ஊத்துக்குளியில் ஒன்றிய கழக செயலாளர் பி.பி.ஈஸ்வரமூர்த்தி தலைமையிலும்

காலை 8 மணிக்கு ஊத்துக்குளி வடக்கு ஒன்றியம் குன்னூரில் ஒன்றிய கழக செயலாளர் எஸ்.சுப்பிரமணியம் தலைமையிலும்

காலை 8 மணிக்கு ஊத்துக்குளி மத்திய ஒன்றியம் நடுப்பட்டியில் ஒன்றிய கழக செயலாளர் வி.ராஜா தலைமையிலும் நடைபெற உள்ளது.

எனவே இந்நிகழ்ச்சிகளில் அந்தந்த இடங்களில் உள்ள மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு,ஊர்க்கிளை கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், துணை அமைப்புகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி, கூட்டுறவு சங்க பிரதிநிதிகள், கழக உடன்பிறப்புகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளர் சு.முத்துசாமி தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## ரூ.6 கோடி மதிப்பீட்டில் நங்கநல்லூர், ஆதிவ்யாதிஹர பக்த

# ஆஞ்சநேயர் திருக்கோயிலுக்கு புதிய தங்கத்தேர் செய்யும் பணி!

## அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன் - பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தனர்!

சென்னை, செப்.15-

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆகியோர் நேற்று முன்தினம் (13.09.2023) சென்னை, நங்கநல்லூர், ஆதிவ்யாதிஹர பக்த ஆஞ்சநேயர் திருக்கோயிலில் ரூ.6 கோடி மதிப்பீட்டில் புதிய தங்கத் தேர் செய்திட ரூ.34 லட்சம் மதிப் பீட்டில் மரத் தேர் உருவாக்கும் திருப்பணியை தொடங்கி வைத்தனர்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றபின் இந்து சமய அறநிலையத்துறையானது திருக்குளங்களை சீரமைத்தல், திருத்தேர்களை புனரமைத்தல், நந்தவனங்களை உருவாக்குதல், ஆகம விதிப்படி 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை குடமுழுக்கு நடைபெறாமல் இருந்த திருக்கோயில்களில் குடமுழுக்கு மேற் கொள்ளுதல், 1,000 ஆண்டுகள் பழமையான திருக்கோ யில்களில் திருப்பணி மேற்கொள்ளப்பட்டு நன்னீராட்டு பெருவிழா நடத்துதல், திருக்கோயிலுக்கு வரு கின்ற பக்தர்களுக்கு அடிப்படை வசதிகளான முடிகாணிக்கை மண்டபம், விருந்து மண்டபம், திருமண மண்டபம், குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, போக்குவரத்து வசதி ஆகியவற்றை மேம்படுத்தி வழங்குதல் போன்ற பணிகளை செய்து வருகிறது.

அதன் ஒரு பகுதியாக திருக்கோயில்களுக்கு புதிய திருத்தேர்கள் செய்தல், பழுதடைந்த திருத்தேர்களை மராமத்து பணி செய்தல், பல ஆண்டு காலமாக ஓடாமல் இருந்த திருத்தேர்களை உலா வர செய்தல் குறிப்பாக சமயபுரம் மாரியம்மன் திருக்கோயில், ராமேஸ்வரம் இராம நாத சுவாமி திருக்கோயில் களில் பல ஆண்டு காலமாக ஓடாமல் இருந்த தங்கத்தேர்களை ஓட வைத்த ஆட்சி இந்த ஆட்சியாகும்.

மேலும், திருத்தணி, சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு பக்தர்கள் பங்களிப்புடன் புதிய வெள்ளித்தேர் ரூ.4 கோடி செலவில் செய்யப்பட்டு கடந்த வாரம் உலா வர செய்யப்பட்டது. இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு ரூ.31.24 கோடி மதிப்பீட்டில் 51 புதிய மரத்தேர்கள் செய்வதற்கும், ரூ.4.12 கோடி மதிப்பீட்டில் 13 மரத்தேர்களை மராமத்து செய்வதற்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பெரியபாளையம், பவானியம்மன் திருக்கோயில், புரசைவாக்கம், கங்காதீஸ்வரர் திருக்கோயில், நங்கநல்லூர், ஆஞ்சநேயர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு ரூ.20 கோடி மதிப்பீட்டில் புதிய தங்கத்தேர் செய்வதற்கும், இருக்கண்குடி, மாரியம்மன் திருக்கோயில், சென்னை, காளிகாம்பாள் திருக்கோயில், திருக்கருக்கா வூர், கர்ப்பகராட்சாம்பிகை திருக்கோயில், திருநெல் வேலி, நெல்லையப்பர் திருக் கோயில், திருத்தணி, சுப்ர மணிய சுவாமி திருக்கோயில் ஆகிய 5 திருக்கோயில்களுக்கு ரூ.15 கோடி மதிப்பீட்டில் புதிய வெள்ளித்தேர்கள் செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இதில் கடந்த வாரம் திருத்தணியில் புதிய வெள்ளித் தேர் உலா தொடங்கி வைக்கப்பட்டது.

இன்றைய தினம் நங்கநல்லூர், ஆஞ்சநேயர் திருக்கோயிலுக்கு புதிய தங்கத் தேர் செய்திட ரூ.34 லட்சம் மதிப்பீட்டில் மரத்தேர் உருவாக்கும் பணி உபயதாரர் பங்களிப்புடன் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. ஆறு மாத காலத்திற்குள் பணிகளை நிறைவு செய்து பக்தர்கள் நேர்த்தி கடனை செலுத்துவதற்கு ஏதுவாக புதிய தங்கத் தேர் உலா வர துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு கூறினார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் ஆர்.எஸ்.பாரதி, கூடுதல் ஆணையர் திருமதி ந.திருமகள், சென்னை மண்டல இணை ஆணையர் திருமதி கி.ரேணுகாதேவி, அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## நாமக்கல் மேற்கு மாவட்டத்தில்

# பேரறிஞர் அண்ணா பிறந்தநாள்விழா - முப்பெரும்விழா!

## மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுராசெந்தில் அறிக்கை!



நாமக்கல்,செப். 15-

நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகசெயலாளர் -எஸ்.எம்.மதுராசெந்தில் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முப்பெரும் விழா, பேரறிஞர் அண்ணாஅவர்களின் பிறந்த நாள் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் பிறந்தநாள், தமிழர்க்கான இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிய நாள் செப்டம்பர் 17.

சமுதாயநலன் காக்க, சமதர்மம் நிலைக்க, உயர்ந்தோர், தாழ்ந்தோர் எனும் நிலைமாற, அறிஞர் அண்ணா, தந்தை பெரியார் வழியில் கழகம் காத்த பெருந்தகை முத்தமிழ் அறிஞர் கலைஞர் கழகம் எனும் ஆலமரம் போல் பகுதறிவுச் சோலையாக பூத்து குலுங்கும் சூழலை உருவாக்கிட கடந்து வந்த பாதைகளில் சந்தித்த சோதனைகள், வேதனைகள் கழக வரலாற்றை தொகுத்து, இன்றைய தலைமுறை அறிய திராவிட பாசறை கூட்டங்கள் தமிழகமெங்கும் இன்றைய இளைஞர்கள் மத்தியில் விழிப்புணர்வை உண்டாக்க திராவிட கருத்துகள் பதிய கழக தலைவர் தளபதி அவர்களும் இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் ஆற்றும் அரும்பணி என்றும் திராவிடம் மறையாது, மறைக்கப்படாது, விதைத்தது வீறு கொண்டு எழும். எனவே திராவிட மாடல் ஆட்சி காணும் கழக தலைவர் எண்ணமும் செயலும் எதிர்கால தி.மு.க.விற்கான கலங்கரை விளக்கமாக முதல்வர் தளபதி அவர்கள் போற்றும் தலைவர் தி.மு.கழகத்தின் முதுபெருந்தலைவர் பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாள் செப்டம்பர் 15 கழக அரசின் மிக முக்கியமான மக்கள் நலத்திட்டமான கலைஞர் உரிமைத் தொகை திட்டமானது பேரறிஞர் அண்ணா பிறந்தநாளான அன்று முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு முழுவதும் தொடங்கி வைக்கப்படுகிறது.

1000 ரூபாய் திட்டத்தை முன்னிறுத்தி வீடுகளில் கலைஞர் உரிமைத் தொகைக்கு நன்றி,

உரிமைத் தொகை 1000 போன்ற வாசகங்களை எழுதி கோலமிடலாம்.

அனைத்து ஒன்றியநகரம் பேரூர் கிளைக்கழகங்களில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து, இனிப்பு வழங்கி, பட்டாசு வெடிக்க வேண்டும். அனைத்து பேருந்து நிலையங்களிலும் இனிப்பு வழங்கிட வேண்டும்.

கழகத்தின் சுவர் விளம்பரங்களில் மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து, புதுமைப்பெண் திட்டம், நான் முதல்வன், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், கலைஞர் உரிமைத் தொகை ஆகிய திட்டங்களை முன்னிலைப்படுத்தும் வகையில் சுவர் விளம்பரங்கள் எழுதபட வேண்டும்.

தந்தை பெரியார் பிறந்த நாள் 17 அன்றும் கொண்டாடி பட்டி தொட்டியெங்கும் திராவிடமாடல் ஆட்சியின் மகத்துவத்தை மக்கள் அறிய உறுதி ஏற்று கொண்டாடுவோம். நலதிட்ட உதவிகள் பல செய்து மக்கள் நல முதல்வர் என திகழ்ந்து புதுமை பெண் திட்டம், மகளீர் உரிமை திட்டம் மூலம் பெண்கள் சமுதாயத்தின் எதிர்காலத்தை பொற்காலமாய் மாற்றும் உயரிய தலைவர் வழி நின்று முப்பெரும் விழா பவளவிழா இருவண்ண கழக கொடி உயர்த்தி பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் திருவுருவ சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செய்து இனிப்புகள் வழங்கி சிறப்பாக கொண்டாடிட வேண்டுகிறேன்.

செப்டம்பர் 17 மாலை 4 மணிக்கு வேலூர் பள்ளிகொண்டா (கந்தனேரி) கழக முப்பெரும் விழா பவள விழா நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகிய மூவரின் ஒட்டு மொத்த உருவமாக திகழ கூடிய திராவிட மாடல் நாயகன் இந்தியாவின் முதல் முதலமைச்சர் முதல்வர் அவர்கள் கலந்து கொண்டு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அறக்கட்டளை சார்பில் பரிசு வழங்கி கழகத்திற்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்ட கழக மூத்த முன்னோடி களுக்கு கி.சத்திய சீலன் அவர்களுக்கு பெரியார் விருது, திரு.க.சுந்தரம் அவர்களுக்கு அண்ணா விருது, ஐ.பெரியசாமி, கலைஞர் விருது, திருமதி மலிகா கதிரவன் அவர்களுக்கு பாவேந்தர் விருது, ந.இராமசாமி அவர்களுக்கு பேராசிரியர் விருது வழங்கி சிறப்புரை நிகழ்த்த இருக்கிறார்.


கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொள்கிறார்.

எனவே நாமக்கல் மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, செயலாளர்கள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, இலக்கியஅணி, தொண்டரணி, வழக்கறிஞரணி, வர்த்தகரணி, நெசவாளரணி, ஆதிதிராவிட நலக்குழு, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, மருத்துவரணி, பொறியாளரணி, விவசாயத் தொழிலாளரணி, மகளிர் தொண்டரணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மற்றும் தகவல் தொழில் நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணியினர், தொ.மு.ச விளையாட்டு மேம்பாட்டு அணி, ஒட்டுநர் அணி, அயலக அணி உள்ளாட்சி பிரதிநிதி கள் அனைவரும் அவரவர் பகுதிகளில் நிகழ்ச்சிகள் சிறப்பாக ஏற்பாடு செய்தும் மற்றும் செப்டம்பர் 17 மாலை 5மணிக்கு பள்ளிகொண்டா (கந்தனேரி) யில் நடை பெறும் முப்பெரும் விழா பவள விழாவில் ஆயிரக்கணக்கானோர் கழக தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர்அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# திருப்பூர் தெற்கு மாவட்டத்தில் பேரறிஞர் அண்ணா 115 வது பிறந்தநாள் விழா!

## மாவட்டக் கழக செயலாளர் இல.பத்மநாபன் அறிக்கை!



திருப்பூர். செப். 15-

திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலதலைவர் இல.பத்மநாபன் அறிக்கை வருமாறு :- தென்னாட்டு காந்தி, தமிழகத்தின் இங்கர்சால், பேரறிஞர் பெருந்தகை, அண்ணா என்று தமிழக மக்களால் அன்போடு அழைக்கப்பட்ட அண்ணா அவர்கள் தமிழகத்தில் நிலவி வந்த அதிகார வர்கத்தின் அநீதிகளையும், சாதிமதம் என்ற பெயரால் நிலவி வந்த ஏற்றத்தாழ்வுகளையும், தமிழ் மொழிக்கும் தமிழர்களின் கலாச்சாரத்திற்கும், தமிழ்நாடு வளர்சிக்கும் தனது தன்னலமல்லாத உழைப்பின் மூலமாகவும் முற்போக்கு சிந்தனையாலும் மேடைதோறும் முழக்கமிட்டு தூங்கிக் கொண்டிருந்த தமிழினத்தை தட்டி எழுப்பி மக்கள் மனங்களில் மாற்றத்தையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்தி புதிய தமிழகத்தை கட்டியமைத்திட திராவிட முன்னேற்ற கழகத்தை நிர்மாணித்து மாபெரும் சமூக புரட்சியை ஏற்படுத்தி அதன்மூலம் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றி எண்ணற்ற மக்கள் நல பணிகளை நிறைவேற்றி வெற்றி கண்டு இன்றுவரை அதன் தாக்கத்தை நிலைப்பெற செய்த மாபெரும் தலைவராக திகழ்ந்து, தலைவர் கலைஞர் அவர்களை, தம்பி வா, தலைமை ஏற்க வா என்று அழைத்து அரியாசனம் அமரவைத்ததோடல்லாமல் அவர்தம் புதல்வரான கழக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று தமிழ்நாடு முதல்வராக பதவியில் அமர்ந்து திராவிட மாடல் ஆட்சியை நாடெங்கிலும் கொண்டு செல்ல அன்றே அடித்தளம் அமைத்துக் கொடுத்து எதிரிகளின் சிம்ம சொப்பனமாக விளங்கியவர் அறிஞர் அண்ணா அவர்கள் ஆவார். பேரறிஞர் அண்ணா அவர்களின் 115 வது பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடி அவர்தம் புகழை போற்றிடும் வகையில் திருப்பூர் தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட 4 தொகுதிகளில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைகளுக்கு இன்று 15.9.2023 வெள்ளிக்கிழமை காலை 09.00 மணியளவில் மாவட்டக் கழக செயலாளர் ஆகிய எனது தலைமையில் கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறைஅமைச்சர் மு.பெ.சாமிநாதன், கழக மகளிர் அணி துணைச் செயலாளர், ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் தாராபுரத்தில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட உள்ளனர். எனவே நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் உரிய ஏற்பாடுகளை செய்திடுமாறு கேட்டுக்கொள்ளபடுகிறார்கள்.

அது சமயம் மாவட்டக் கழக நிர்வாகிகள், இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக, வார்டு செயலாளர்கள், நிர்வாகிகள், ஊராட்சி கழக நிர்வாகிகள், நகர் மன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் அனைவரும்பங்கேற்றுசிறப்பித்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலதலைவர் இல.பத்மநாபன் தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.




**இ.பெரியசாமி** B.A.,BGL.,
ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர், கழக துணைப் பொதுச் செயலாளர்

**அர.சக்கரபாணி** B.A.,
உணவு (ம) உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்
திண்டுக்கல் மேற்கு மாவட்டக் கழக செயலாளர்

**I.P.செந்தில்குமார்** M.A.,B.L.,
திண்டுக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளர்
பழனி தொகுதி சட்டமன்ற உறுப்பினர்

**திண்டுக்கல் மாவட்ட தி.மு.க.**


மகளிர் முகத்தில் மலர்ந்தது புன்னகை!
அறிஞர் அண்ணா பிறந்தநாளில் காஞ்சி மண்ணில்
கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்
ரூ.1000
வழங்க வருகை தரும்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
அவர்களை வருக! வருக!!
என வரவேற்கும்
தா.மோ.அன்பரசன்
குறு, சிறு (ம) நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்
க.சுந்தர் B.Sc.,MLA
காஞ்சி தெற்கு மாவட்ட செயலாளர்
க.செல்வம் M.Com., M.Phil., M.P.
காஞ்சி தெற்கு மாவட்ட துணைச் செயலாளர்
ARASU ARTS
அன்புடன்
சி.வி.எம்.பி. எழிலரசன் B.E.,B.L.,
செயலாளர் – தி.மு.க. மாணவர் அணி
காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர்



கடலூர் மாவட்ட வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பாக மனுநீதி நாள் முகாம், அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி, குறிஞ்சிப்பாடி வட்டார வளர்ச்சி அலுவலகத்தில், மாவட்ட ஆட்சியர் அ.அருண்தம்புராஜ் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கலந்து கொண்டு, 50 பயனாளிகளுக்கு 50 சதவீத மானியத்தில் ரூ.3000 விலையில் முந்திரி கொட்டை உடைக்கும் இயந்திரம் வழங்கினார்.



பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தலைமையில் நேற்று முன்தினம் 13.09.2023 நந்தனம் ஆவின் இல்லத்தில் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்கள், சங்கப் பணியாளர்கள் ஆகியோர்களின் நலம் சார்ந்த மற்றும் கால்நடைகளுக்கான காப்பீட்டுத் திட்டங்கள் குறித்து கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இவ்வாய்வுக்கூட்டத்தில் பால்வளத்துறை இயக்குநர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் சு. வினீத் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### வேலூரில் கழக முப்பெரும் விழா!

# கடலூர் கிழக்கு மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொள்வீர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கை!

கடலூர், செப். 15-

வேலூரில் 17.9.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை நடைபெறவுள்ள கழக முப்பெரும் விழாவில் கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.வினர் பெருந்திரளாக கலந்துகொள்ள வேண்டுமென வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா - திமுக பவளவிழா ஆண்டு, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் பிறந்த நாள் விழா, கழகம் தொடங்கிய நாள் ஆகிய முப்பெரும் விழா 17.9.2023



ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை வேலூரில் பள்ளிக் கொண்டான், டோல் கேட் அருகில் நடைபெறும். இந்த முப்பெரும் விழாவில், தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அண்ணன் தளபதி அவர்கள் கலந்துக் கொண்டு விருதுகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

அதுசமயம் முப்பெரும் விழாவில் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மாநகர மேயர், ஒன்றிய குழுத்தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிமன்ற தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள், மாவட்டக்குழு, ஒன்றியக்குழு உறுப்பினர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, இலக்கிய அணி, கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, தகவல் தொழில்நுட்ப பிரிவு அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, சுற்றுச்சூழல் அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, தொழிலாளர் அணி, அயலக அணி, தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும்தவறாமல் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கேட்டுக் கொண்டுள்ளார்.

### புதிய குடும்ப அட்டை பெற ஆன்லைனில் விண்ணப்பித்தால்

# 15 நாளில் வீடு தேடி ரேஷன் கார்டு வரும்!

## அமைச்சர் அர.சக்கரபாணி பேச்சு

திண்டுக்கல், செப். 15-

ஒட்டன்சத்திரம் தொகுதியில் ரூ.2.49 கோடியில் திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டிபல்வேறு திட்ட பணிகளை உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி தொடங்கி வைத்தார்.அப்போது அவர் பேசியதாவது

முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து அதை தொடர்ந்து செயல்படுத்தி, இந்தியாவிலேயே தலைசிறந்த முதல்வராக திகழ்கிறார். தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாநிலமாக மாற்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு, தமிழகத்தில் பொற்கால ஆட்சி நடத்தி வருகிறார்.

தமிழகத்தில் குடும்ப அட்டை கேட்டு விண்ணப்பித்தவர்களில் தகுதியானவர்களுக்கு 15 நாட்களில் குடும்ப அட்டை வழங்கப் பட்டு வருகிறது. தற்போது புதிய குடும்ப அட்டை பெற ஆன்லைனில் விண்ணப்பித்தால் வீட்டிற்கு தபாலில் குடும்ப அட்டை வந்து சேரும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆட்சிப்பொறுப்பேற்ற 2 ஆண்டுகளில் தமிழகத்தில் இதுவரை சுமார் 15 லட்சம் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. குடும்ப அட்டை எதிர்பாரா தவிதமாக தொலைந்து போனால், புதிய குடும்ப அட்டை பெற ஆன்லைனில் விண்ணப்பித்தால் வீட்டிற்கு தபாலில் குடும்ப அட்டை வந்து சேரும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.



நியாயவிலைக்கடைகளில் தரமான அரிசி, பருப்பு, எண்ணெய், சர்க்கரை போன்ற பொருட்கள் பொதுமக்களுக்கு வழங்கப் படுகின்றன. பொதுமக்களுக்கு தரமான அரிசி வழங்க வேண்டும் என்பதற்காக கலர்டாப்ளர் இயந்திரம் பொருத்தப்பட்ட அரிசி ஆலைகளில் மட்டுமே நெல் அரவை செய்யப்பட்டு, அரிசி கொள்முதல் செய்யப் பட்டு, பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது.

தமிழகத்தை குடிசை இல்லா மாநிலமாக மாற்ற ஏழை, எளிய வீடு இல்லாத மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு பல்வேறு திட்டங்களின் கீழ் வீடு வழங்கப்பட்டு வருகிறது. தொடக்க வேளாண்மை கூட்டுறவு மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கான கடன் ரூ.12.00 இலட்சத்திலிருந்து ரூ.20.00 இலட்சம் வரை வழங்கப் பட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்கள் தற்போது கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கும் திட்டத்தை கொண்டு வந்துள்ளார். தகுதியான இல்லத்தரசிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் திட்டம் செப்டம்பர் 15ஆம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காஞ்சிபுரம் மாவட்டத்தில் தொடங்கி வைக்கப்படவுள்ளது. இத் திட்டத்தில் 1.06 கோடி மகளிர் பயனடையவுள்ளனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்காலத்தில்தான் விவசாயத்திற்கு இலவச மின் இணைப்பு வழங்கும் திட்டம் கொண்டுவரப்பட்டது. நடப்பு ஆண்டில் 2 லட்சம் விவசாய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

ஒட்டன்சத்திரம், பழனி சட்டமன்ற தொகுதிக்கு காவிரி நீர் ஆதாரத்தைக் கொண்டு கூட்டுக்குடிநீர் திட்டம் செயல்படுத்த ரூ.1000 கோடி மதிப்பீட்டிலான குடிநீர் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் தொடங்கப் பட்டுவிட்டன.

### கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா!

## மாவட்ட செயலாளர்-அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை!

கடலூர், செப்.15-

பேரறிஞர் அண்ணா அவர்களின் 115வது பிறந்த நாள் இன்று (15.09.2023) அனுசரிக்கப்படுகிறது. அதனை முன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

பேரறிஞர் அண்ணா அவர்களின் 115 வது பிறந்த



நாள் முன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி நகரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவ சிலைக்கு இன்று (15.9.2023 வெள்ளிக்கிழமை) காலை 8 மணி அளவில் எனது (சி.வெ.கணேசன்) தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்படுகிறது.

அது போல விருத்தாசலம் தொகுதி நெய்வேலி தொகுதி பண்ருட்டி தொகுதி ஆகிய தொகுதிகளில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்கு அந்தந்த பகுதிக்கு உட்பட்ட நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் சி.வெ.கணேசன் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.



நாமக்கல் கிழக்கு மாவட்டம் நாமக்கல் சட்டமன்றத் தொகுதி (BLA 2) வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நாமக்கல் நளா ஹோட்டலில் நடைபெற்றது. நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமை தாங்கினார். நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ. இராமலிங்கம் முன்னிலை வகித்தார். இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், (BLA 2) வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### இராணிப்பேட்டை மாவட்டத்தில்

# பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா - முப்பெரும் விழா!

## மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி அறிக்கை!

இராணிப்பேட்டை, செப். 15-

இராணிப்பேட்டை மாவட்டக் கழகசெயலாளர் -அமைச்சர் ஆர்.காந்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முப்பெரும் விழா, பேரறிஞர் அண்ணாஅவர்களின் பிறந்த நாள் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் பிறந்தநாள், தமிழர்க்கான இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிய நாள் செப்டம்பர் 17.

சமுதாயநலன் காக்க, சமதர்மம் நிலைக்க, உயர்ந்தோர், தாழ்ந்தோர் எனும் நிலைமாற, அறிஞர் அண்ணா, தந்தை பெரியார் வழியில் கழகம் காத்த பெருந்தகை முத்தமிழ் அறிஞர் கலைஞர் கழகம் எனும் ஆலமரம் போல் பகுதறிவுச் சோலையாக பூத்து குலுங்கும் சூழலை உருவாக்கிட கடந்து வந்த பாதைகளில் சந்தித்த சோதனைகள், வேதனைகள் கழக வரலாற்றை தொகுத்து, இன்றைய தலைமுறை அறிய திராவிட பாசறை கூட்டங்கள் தமிழகமெங்கும் இன்றைய இளைஞர்கள் மத்தியில் விழிப்புணர்வை உண்டாக்க திராவிட கருத்துகள் பதிய கழக தலைவர் தளபதி அவர்களும் இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் ஆற்றும் அரும்பணி என்றும் திராவிடம் மறையாது, மறைக்கப்படாது, விதைத்தது வீறு கொண்டு எழும். எனவே திராவிட மாடல் ஆட்சி காணும் கழக தலைவர் எண்ணமும் செயலும் எதிர்கால தி.மு.க.விற்கான கலங்கரை விளக்கமாக முதல்வர் தளபதி அவர்கள் போற்றும் தலைவர் தி.மு.கழகத்தின் முதுபெருந்தலைவர் பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாள் செப்டம்பர் 15 கழக அரசின் மிக முக்கியமான மக்கள் நலத்திட்டமான கலைஞர் உரிமைத் தொகை திட்டமானது பேரறிஞர் அண்ணா பிறந்தநாளான அன்று முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு முழுவதும் தொடங்கி வைக்கப்படுகிறது.

1000 ரூபாய் திட்டத்தை முன்னிறுத்தி வீடுகளில் கலைஞர் உரிமைத் தொகைக்கு நன்றி,

உரிமைத் தொகை 1000 போன்ற வாசகங்களை எழுதி கோலமிடலாம்.

அனைத்து ஒன்றியநகரம் பேரூர் கிளைக்கழகங்களில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து, இனிப்பு வழங்கி, பட்டாசு வெடிக்க வேண்டும். அனைத்து பேருந்து நிலையங்களிலும் இனிப்பு வழங்கிட வேண்டும்.

கழகத்தின் சுவர் விளம்பரங்களில் மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து, புதுமைப்பெண் திட்டம், நான் முதல்வன், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், கலைஞர் உரிமைத் தொகை ஆகிய திட்டங்களை முன்னிலைப்படுத்தும் வகையில் சுவர் விளம்பரங்கள் எழுதப்பட வேண்டும்.

தந்தை பெரியார் பிறந்த நாள் 17 அன்றும் கொண்டாடி பட்டி தொட்டியெங்கும் திராவிடமாடல் ஆட்சியின் மகத்துவத்தை மக்கள் அறிய உறுதி ஏற்று கொண்டாடுவோம். நலதிட்ட உதவிகள் பல செய்து மக்கள் நல முதல்வர் என திகழ்ந்து புதுமை பெண் திட்டம், மகளீர் உரிமை திட்டம் மூலம்



பெண்கள் சமுதாயத்தின் எதிர்காலத்தை பொற்காலமாய் மாற்றும் உயரிய தலைவர் வழி நின்று முப்பெரும் விழா பவளவிழா இரு வண்ண கழக கொடி உயர்த்தி பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் திருவுருவ சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செய்து இனிப்புகள் வழங்கி சிறப்பாக கொண்டாடிட வேண்டுகிறேன்.

செப்டம்பர் 17 மாலை 4 மணிக்கு வேலூர் பள்ளி கொண்டா (கந்தனேரி) கழக முப்பெரும் விழா பவள விழா நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகிய மூவரின் ஒட்டு மொத்த உருவமாக திகழ கூடிய திராவிட மாடல் நாயகன் இந்தியாவின் முதல் முதலமைச்சர் முதல்வர் அவர்கள் கலந்து கொண்டு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அறக்கட்டளை சார்பில் பரிசு வழங்கி கழகத்திற்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்ட கழக மூத்த முன்னோடிகளுக்கு கி.சத்திய சீலன் அவர்களுக்கு பெரியார் விருது, திரு.க.சுந்தரம் அவர்களுக்கு அண்ணா விருது, ஐ.பெரியசாமி, கலைஞர் விருது, திருமதி மலிகா கதிரவன் அவர்களுக்கு பாவேந்தர் விருது, ந.இராமசாமி அவர்களுக்கு பேராசிரியர் விருது வழங்கி சிறப்புரை நிகழ்த்த இருக்கிறார்.

கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொள்கிறார்.

எனவே மாவட்ட கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, செயலாளர்கள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, இலக்கியஅணி, தொண்டரணி, வழக்கறிஞரணி, வர்த்தகரணி, நெசவாளரணி, ஆதிதிராவிட நலக்குழு, சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு, மருத்துவரணி, பொறியாளரணி, விவசாயத் தொழிலாளரணி, மகளிர் தொண்டரணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மற்றும் தகவல் தொழில் நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணியினர், தொ.மு.ச விளையாட்டு மேம்பாட்டு அணி, ஓட்டுநர் அணி, அயலக அணி உள்ளாட்சி பிரதிநிதி கள் அனைவரும் அவரவர் பகுதிகளில் நிகழ்ச்சிகள் சிறப்பாக ஏற்பாடு செய்தும் மற்றும் செப்டம்பர் 17 மாலை 5மணிக்கு பள்ளிகொண்டா (கந்தனேரி)யில் நடை பெறும் முப்பெரும் விழா பவள விழாவில் ஆயிரக்கணக்கானோர் கழக தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர்அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### கழக பொதுச்செயலாளர் துரைமுருகன் பங்கேற்கிறார்

# வேலூர் மாவட்டத்தில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள்!

## மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ அறிக்கை!

வேலூர், செப்.15-

வேலூர் மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிக்கை வருமாறு:-

தென்னாட்டு காந்தி, தமிழகத்தின் இங்கர்சால், பேரறிஞர் பெருந்தகை, அண்ணா என்று தமிழக மக்களால் அன்போடு அழைக்கப்பட்ட அண்ணா அவர்கள் தமிழகத்தில் நிலவி வந்த அதிகார வர்கத்தின் அநீதிகளையும், சாதிமதம் என்ற பெயரால் நிலவி வந்த ஏற்றத்தாழ்வுகளையும், தமிழ் மொழிக்கும் தமிழர்களின் கலாச்சாரத்திற்கும், தமிழ்நாடு வளர்சிக்கும் தனது தன்னலமல்லாத உழைப்பின் மூலமாகவும் முற்போக்கு சிந்தனையாலும் மேடைதோறும் முழக்கமிட்டு தூங்கிக் கொண்டிருந்த தமிழினத்தை தட்டி எழுப்பி மக்கள் மனங்களில் மாற்றத்தையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்தி புதிய தமிழகத்தை கட்டியமைத்திட திராவிட முன்னேற்ற கழகத்தை நிர்மாணித்து மாபெரும் சமூக புரட்சியை ஏற்படுத்தி அதன்மூலம் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றி எண்ணற்ற மக்கள் நல பணிகளை நிறைவேற்றி வெற்றி கண்டு இன்றுவரை அதன் தாக்கத்தை நிலைப்பெற செய்த மாபெரும் தலைவராக திகழ்ந்து, தலைவர் கலைஞர் அவர்களை, தம்பி வா, தலைமை ஏற்க வா என்று அழைத்து அரியாசனம் அமரவைத்ததோடல்லாமல் அவர்தம் புதல்வரான கழக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று தமிழ்நாடு முதல்வராக பதவியில் அமர்ந்து திராவிட மாடல் ஆட்சியை நாடெங்கிலும் கொண்டு செல்ல அன்றே அடித்தளம் அமைத்துக்கொடுத்து எதிரிகளின் சிம்ம சொப்பனமாக விளங்கியவர் அறிஞர் அண்ணா அவர்கள் ஆவார்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் 115 வது பிறந்த நன்னாளை உவகை பொங்க கொண்டாடி அவர்தம் புகழை போற்றிடும் வகையில் வேலூர் மாவட்டத்திற்கு உட்பட்ட 5 தொகுதிகளில் அமைந்துள்ள அண்ணா சிலைகளுக்கு இன்று (15.9.2023 வெள்ளிக்கிழமை) கழக பொதுச்செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரை முருகன் மற்றும் மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ, மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முக மதுசகி, வேலூர் மாநகர செயலாளர் ப.கார்த்தி கேயன் எம்.எல்.ஏ, வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி, குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலு எம்.எல்.ஏ ஆகியோர்கள் காலை



09.00 மணியளவில் காட்பாடியிலும், 9.30 மணி அளவில் வேலூரிலும், 10.00 மணி அளவில் கீ.வ.குப்பத்திலும், 10.30 மணி அளவில் குடியாத்தம் நகரிலும், 11மணி அளவில் அணைக்கட்டிலும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட உள்ளனர். எனவே மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் உரிய ஏற்பாடுகளை செய்திடுமாறு கேட்டுக்கொள்ளபடுகிறார்கள்.

மேலும் மாவட்ட நிர்வாகிகள், நாடாளுமன்ற,சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு பொதுக் குழு உறுப்பினர்கள், தலைமைக்கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், நிர்வாகி கள், மாநில அணிகளின் துணை அமைப்பாளர்கள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் அணிகளின் நிர்வாகிகள், வட்ட, வார்டு, ஊராட்சி கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் அனைவரும் பங்கேற்று சிறப்பித்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ தனது அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.



2 ஆண்டுகளுக்கு மேலாக இயங்காமல் இருந்த பேருந்தை இயக்கக் கோரி, கோவை கவுண்டம்பாளையம் 35வது வட்டக் கழகம் சார்பில், அவைத் தலைவர் சோ.துரைபாண்டியன் ஏற்பாட்டில், திருமதி கண்ணகி முன்னிலையில் வரதராஜ், முருகானந்தம், மோகன்ராஜ், ராதாகிருஷ்ணன் சலூன் பாலன் ஆகியோர் மேட்டுப்பாளையம் அரசு போக்குவரத்துக் கழக தலைமை அலுவலகத்தில் பொதுமேலாளர் ஸ்ரீதரனை நேரில் சந்தித்து மனு அளித்தனர்.



விழுப்புரம் மாவட்டம் வல்லம் ஒன்றியம் மேல்சித்தாமூர் ஊராட்சி கல்லேரிகிராமத்தில் நகரும் நியாய விலைக் கடையை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு ரேஷன் பொருட்களை வழங்கினார். அருகில் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார், ஒன்றிய செயலாளர்கள் இளம்வழுதி, அண்ணாதுரை, துரை ஆகியோர் உள்ளனர்.

# 7 மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு!

வானிலை மையம் தகவல்!

சென்னை, செப். 15-

சென்னை, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் கடந்த சில நாட்களாக பரவலான மழை பெய்து வருகிறது. சென்னையில் அடுத்த 2 நாட்களுக்கு வானம் மேக மூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒரு சில பகுதிகளில் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை மையம் தெரிவித்தது.

இந்த நிலையில் 7 மாவட்டங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர் ஆகிய மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## குன்னூர் அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில்

# ரூ. 34.65 கோடியில் தொழில்நுட்ப மையம் திறப்பு!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் - அமைச்சர் சி.வெ.கணேசன் பங்கேற்பு!

நீலகிரி, செப்.15-

நீலகிரி மாவட்டம் குன்னூர் அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில், டாடா டெக்னாலிஜிஸ் நிறுவனத்துடன் இணைந்து ரூ.34.65 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள தொழில் 4.0 தொழில்நுட்ப மையத்தினை, சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் முன்னிலையில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் குத்துவிளக்கேற்றி, திறந்து வைத்து பார்வையிட்டார்.

நீலகிரி மாவட்டம், குன்னூர் அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில், டாடா டெக்னாலிஜிஸ் நிறுவனத்துடன் இணைந்து ரூ.34.65 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள தொழில் 4.0 தொழில்நுட்ப மையத்தை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் முன்னிலையில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் குத்துவிளக்கேற்றி, திறந்து வைத்து பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த், மாவட்ட ஆட்சியர் (பொ) / மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.கீர்த்தி பிரியதர்ஷினி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க, இன்றைய தினம் குன்னூர் அரசினர் தொழிற் பயிற்சி மையத்தில், டாடா டெக்னாலிஜிஸ் நிறுவனத்துடன் இணைந்து ரூ.34.65 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள தொழில் 4.0 தொழில்நுட்ப மையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள இளைஞர்களுக்கு அதிக வேலைவாய்ப்பினை உருவாக்கி தந்திட வேண்டும் என்ற நோக்கத்திலும், உலக அளவில் மாறி வரும் தொழில் நுட்பங்களுக் கேற்ப புதிதாக உருவாகும் வேலைவாய்ப்புகளை தமிழ்நாட்டு இளைஞர்கள் பெற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில், டாடா நிறுவனத்தின் சமூக பங்களிப்புடன் ரூ.2,877.43 கோடி செலவில் இத்திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

இதில் 12.05 சதவீதம் ரூ.359.62 கோடி மாநில அரசின் பங்களிப்புடன், ஒவ்வொரு தொழிற்பயிற்சி நிலையத்தின் கட்டுமான பணிக்கு ரூ.3.73 தமிழக அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள 102 தொழிற் பயிற்சி நிலையங்களில் நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய உலக தரம் வாய்ந்த 4.0 தரத்திற்கு உயா;ந்த 71 தொழிற் பயிற்சி நிலையங்களில் ஒன்று தான் இந்த குன்னூர் தொழிற்பயிற்சி நிலையம் ஆகும். இந்த கல்வி ஆண்டில் குன்னூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் 88 மாணவர்கள் அதாவது 90 சதவீதம் சேர்ந்துள்ளனர். தமிழ்நாடு முழுவதும் 7,572 மாணவர்களில் 84.05 சதவீதம் 6,364 மாணவர்கள் இது வரை சேர்ந்துள்ளனர்.

மேலும், கடந்த 2022ம் கல்வியாண்டில் 92.68மூ மாணவர்கள் சேர்ந்துள்ளனா;. நடப்பாண்டில் 84 சதவீதம் மாணவர்கள் சேர்க்கை எட்டியுள்ளது. 100 சதவீதமாக உயா;த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முதலமைச்சர் அவர்கள் இது போன்ற ஒரு சிறந்த திட்டத்தினை செயல்படுத்தியதன் மூலம், வெளிநாட்டில் உள்ள மாணவர்கள் கற்கின்ற சிஎன்சி தொழில் நுட்பவியலார்கள், தொழில்துறை ரொபோடிக்ஸ் போன்ற நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய கல்வியை தமிழ்நாட்டில் உள்ள மாணவர்களும் கற்றுக் கொள்ளும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது வரை குன்னூர் தொழிற் பயிற்சி பயின்ற 83 சதவீதம் மாணவர்கள் பல்வேறு இடங்களில் பணியில் சேர்ந்துள்ளனர். உயர்கல்வி முடித்தவர்கள் கூட வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தொழிற் பயிற்சி நிலையங்களில் சோ;ந்து கல்வி பயின்று வருகின்றனர்.

கடந்த ஆண்டு மட்டும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் இல்லாத பகுதிகளில் 11 புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் ரூ.95.06 கோடி மதிப்பில் துவங்கப்பட்டுள்ளது, வரலாற்றிலேயே முதன் முறையாக நடந்த சாதனை ஆகும். அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் மற்றுமொரு வரலாற்று சாதனை யாகும், இந்த சீரிய முயற்சி தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே முதன்மையானது எனவும், இப்பயிற்சியினை பெறும் மாணவர்கள் பயிற்சிக்கு பின்னர் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் உள்ள முன்னணி நிறுவனங்களில் பணியமர்த்தப்படுவார்கள். மாணவர்கள் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற நோக்கத்தில் விடா முயற்சியுடன், என்னால் முடியும் என்ற தன்நம்பிக்கோடு படிக்க வேண்டும்.

முயன்றால் முடியாதது ஏதுமில்லை. மேலும், மாணவர்கள் தங்கள் சக நண்பர்களும், தொழிற்பயிற்சி நிலையத்தில் சேர்ந்து பயன் பெறும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

இவ்வாறு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழக அரசு தமிழ்நாட்டில் உள்ள இளைஞர்களுக்கு அதிக அளவில் வேலை வாய்ப்பை உருவாக்கி தர வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் பல முன்னோடி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வேலை தேடும் இளைஞர்களுக்கு உதவும் வண்ணம் அனைத்து மாவட்டங்களிலும் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. தொழிற்சாலைகளில் உற்பத்தியை பெருக்குவதற்கு பல்வேறு யுக்திகளையும், நவீன இயந்திரங்களையும் பயன்படுத்தினாலும் திறன் பெற்ற தொழிலாளர்களின் தேவை இன்றைய காலத்தில் மிக அவசியமாகிறது.

மேலும், உலகளாவிய வர்த்தகம் வந்த பிறகு வெளிநாட்டிலிருந்து தொழில் நுட்பங்களும் இயந்திரங்கள், தளவாடங்கள், மென்பொருட்கள் ஆகியவை இங்கு வந்துவிட்டாலும் கூட, இந்திய தொழில் நிறுவனங்கள் சர்வதேச சந்தையில் வெளிநாட்டு நிறுவனங்களுடன் போட்டியிட வேண்டியுள்ளது. இதற்கு நவீன தொழில்நுட்பத்தில் பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் அவசியம் தேவைப்படுகிறார்கள். தொழில் நிறுவனங்கள் குறைந்த செலவில் தரமான பொருட்களை பெருமளவில் உற்பத்தி செய்வதற்கு இத்தகைய திறன் பெற்ற தொழிலாளர்கள் தேவைப்படுகிறார்கள். இதனை கருத்தில் கொண்டு, அரசு கடந்த ஆண்டில் மட்டும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் இல்லாத பகுதிகளில் 11 புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையங்களை ரூ.95.06 கோடி செலவில் துவங்கியுள்ளது என்பது இத்துறையின் வரலாற்றிலேயே முதன்முறையாக நடந்த சாதனையாகும்.

மேலும், தமிழ்நாட்டில் 102 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களும், 330 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் தற்போது இயங்கி வருகின்றன. இதில் நீலகிரி மாவட்டத்தில் குன்னூர் மற்றும் கூடலூர் பகுதியில் இரண்டு தொழிற்பயிற்சி நிலையங்கள் உள்ளன. இந்த குன்னூர் தொழிற்பயிற்சி நிலைய மானது சுமார் 21.01 ஏக்கா; நிலப்பரப்பில் 1962 ஆம் ஆண்டு 7 தொழிற் பிரிவுகளுடனும், 1994 ஆம் ஆண்டு 2 தொழிற்பிரிவுகளுடனும், 2008 ஆம் ஆண்டு பொது மற்றும் தனியார் கூட்டமைப்பு திட்டத்தின் கீழ் 1 தொழிற் பிரிவும் தொடங்கப்பட்டது.

முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தினை முதல் மாநிலமாக கொண்டு வர வேண்டும் என்ற நோக்கத்திலும், அனைவரும் கல்வி கற்க வேண்டும் மற்றும் உயர் கல்வி கற்க வேண்டும் என்ற நோக்கத்திலும், இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்கி தந்திட வேண்டும் என்ற நோக்கத்தில் நான் முதல்வன் என்ற திட்டத்தினை கொண்டு வந்து கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றது.

அதனப்படையில் தமிழ்நாட்டில் 241 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் 4,09,651 நபர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் நமது மாவட்டத்தில் குன்னூர், உதகை, கூடலூரில் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு 2,063 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கிட வேண்டும் என்ற நோக்கத்தில் இதுபோன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இன்று திறந்து வைக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிலைய தொழில் மையத்தில் மாணவ, மாணவிகள் நல்ல முறையில் பயிற்சி பெற்று பயன் பெற வேண்டும்.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர், மாவட்ட ஆட்சியர்(பொ)/ மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோர் முன்னிலையில், தொழிற்பயிற்சி மாணவர்கள் விடுதியினை நேரில் பார்வையிட்டு, சுற்றுப் புறங்களை தூய்மையாக வைத்து கொள்ள நகராட்சி ஆணையாளரிடம் அறிவுறுத்தினார்.

## ‘விஸ்வகர்மா யோஜனா’ திட்டம்!

# நவீன தொழில் நுட்பங்களை - அடுத்த தலைமுறை கற்பதைத் தடுக்கும்!

ஒன்றிய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் பிரதம மந்திரியின் விஸ்வர்மா எனும் இந்தத் திட்டம் மிகவும் பிற்போக்குத்தனமான ஒன்றாகவும், நித்தமும் வளர்ந்து வரும் நவீன தொழில் நுட்பங்களை இளம் தலைமுறைக்கு மறுக்கும் திட்டமாகவும் உள்ளது.

குடும்ப அடிப்படையிலான பாரம்பரிய திறன்களை வளர்ப்பதாக சொல்லும் இந்தத் திட்டம் உண்மையில் வழி வழியாக கைத் தொழில்களைச் செய்து வரும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு உயர்கல்வி வாய்ப்பினை மறுத்து, அவர்களை கிராமங்களில் சமூகப்படிநிலையின் கீழாகவே வைத்திருக்கும் கொடூரமான விளைவையே ஏற்படுத்தும் என்றும் எச்சரிக்கிறோம்.

மேலும், 2030 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவின் உயர்கல்வி படிப்போர் எண்ணிக்கை (G.E.R) சராசரியை 50% ஆன உயர்ந்த வேண்டும் எனும் ஒன்றிய அரசின் நோக்கத்துக்கு தேர் எதிராக இந்தத் திட்டம் அமைந்துள்ளது என்பதையும் திமுக பொறியாளர் அணி சுட்டிக் காட்ட விரும்புகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் 18 தொழில்களைக் குறிப்பிட்டு, அதில் பயில்பவர்களுக்கு மட்டும் மாதாந்திர உதவித் தொகை, நீண்டகால் கடன் அளிப்பது என்பது அந்தத் தொழிங்கள் நவீனமயமாரும் வாய்ப்பினையும், வளர்ச்சியையும் முடக்கும் என தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும், இந்தத் திட்டத்தில் சேரும் இளைஞர்களின் குடும்பம் மூன்று தலைமுறைகளாக இதே தொழிலைத்தான் செய்கின்றனரா என்பதை மூன்று கட்டமாக உறுதி செய்யப்படும் எனும் விதி நேரடியாக குலத் தொழிலுக்குள் அவர்களை மீண்டும் தள்ளுவதை உறுதி செய்யும் கொடூரமான விதி ஆகும்.

இதை சில எளிமையான எடுத்துக்காட்டுகளுடன் விரிவாக சொல்ல விரும்புகிறோம். இந்த விஸ்வகர்மா திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட 18 தொழில்களில் ஒரு சிலவற்றைப் பார்ப்போம்.

முடிதிருத்தும் தொழில் : இந்தத் தொழில் இப்போது சிறு நகரங்களில் கூட கார்ப்பரேட் நிறுவனங்களாலும், அழகுச் சாதனப் பொருள் தயாரிப்பு நிறுவனங்களாலும் நடத்தப்படும் சங்கிலித்தொடர் கடைகளாக மாறி விட்டதை நாம் பார்க்கிறோம். முழுவதும் குளிர்சாதன வசதிகளுடன், நவீன கருவிகள், தேர்ந்த பயிற்சி பெற்றவர்கள் என படிந்த பட்டதாரிகள் செய்யும் தொழிலாக இது மாறி விட்டது. இந்த வகை நவீன சலூன்களில் வெளிநாடுகளில் இருந்து பல ஆயிரம் பேர்கள் இங்கு வந்து பணி புரிகின்றனர். இந்தகைய ஏற்றம் பெறும் ஒரு தொழிலை, தனது 18 வயதிலேயே தங்களது கிராமத்திலேயே தந்தைக்கு உதவியாக ஒரு இனைஞன் பயில வைப்பது என்பது அவனுக்கு உயர்கல்வி வாய்ப்புடன், தொழில் கவுரவத்தையும் சேர்ந்தே மறுக்கிறது.



கு.கருணாநிதி
செயலாளர்
கழக பொறியாளர் அணி

சலவைத் தொழில் : இது பல நூறு கோடி ரூபாய் வருவாய் ஈட்டும் புதிய தொழில் வாய்ப்பாக மாறிவிட்டது. பெருநகரங்களில் அதிநவீன இயந்திரங்கள் மூலம் சில மணி நேரத்தில் துணிகளை சனலவை செய்து தரும் இந்தக் காலத்தில், தனது தந்தையுடன் ஆற்றங்கரை, குளக்கரைப் படிகட்டுகளுக்கு நமது இளைஞர்களை ஊரார் அழுக்குத் துணிமூட்டைகளைத் தூக்கிச் செல்ல வைப்பதா வளர்ச்சி? துணி துவைப்பதில் என்ன பாரம்பரிய திறன் தேவைப்படுகிறது? சாதிய அடுக்குமுறையை இதைவிட எப்படி நியாயப் படுத்திட முடியும்?

பொற்கொல்லர் தொழில் : பொன் நகைகளை கைகளால் செய்யும் காலம் முடிந்து பல காலம் ஆகிறது. ஆபரணப் பொருட்கள் யாவுமே இப்போதே அதிநவீன லேசர் இயந்திரங்கள் மூலம், சேதாரம் குறைவாகவும், செய்தேர்ந்தி துல்லியமாகவும் செய்யப்பட்டு வருகின்றன.

தச்சுத் தொழில், பொம்மை, சிற்பத் தொழில்கள்: இவை யாவுமே ஒரு தேர்ந்த தொழிலாளி ஒரு நாளைக்கு ஒரு பொம்மை செய்தால், அதே பொம்மையை அதே துல்லியத்துடன் பல நூறு செய்யக்கூடிய சி.என்.சி மிஷின் களின் காலம் இது. இனிமேல் நமது இளைஞர்களுக்கு தேவையெல்லாம் அந்த மெஷின்களுக்கு உள்ளீடும் மென்பொருள் அறிவுதானே தவிர, பரம்பரை தொழில் பயிற்சி அல்ல.

இதே போலவேதான் படகு செய்தல், கட்டிட வேலை, பூட்டு செய்தல் என இந்தத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அத்தனை தொழில்களுமே தனது ஆயிரமாண்டு மரபு வழி கலையாக இருந்ததில் இருந்து நவீன தொழில்நுட்பத்தின் அங்கமாக மாறிவிட்டன.

இது செயற்கை நுண்ணறிவுக் காலம். முப்பரிமாண பிரிண்டர் மூலம் ஒரு முழு வீட்டையே ஒரே நாளில் கட்டி முடிக்க தொடங்கி விட்டனர். நிலவுக்கு தனது அறிவியல் கருவியை அனுப்பும் இந்த புதுயுக தொழில்நுட்டம் கொண்ட நமது நாட்டில் பல கோடி இளைஞர்களை நிரந்தரமாக எந்தவித அறிவியல் தொழில்நுட்பப் பயன்பாடுகளும் இல்லாத சூழலில் தந்தமது நலத் தொழிலைப் பயின்று அதைக் கொண்டே வாழச் சொல்லும் திட்டம் உலகில் எங்கேலும் உண்டா?

குடும்ப அடிப்படையில் பாரம்பரிய திறன்களை வலுப்படுத்தி வளர்க்கும் திட்டம்” என பெருமையாக அறிவித்துக் கொள்ளும் இந்தத் திட்டத்தில் பாரம்பரியமாக வேதமந்திரங்களைக் கற்பித்து கோவில்களில் பூஜைகளை செய்ய வைக்கும் அந்த வேலை மட்டும் கவனமாகத் தவிர்க்கப்பட்ருக்கிறது.

நமது நாட்டின் சாபக்கேடான சாதிய அடுக்குமுறையின் மிக உயர்ந்த இடத்தில் இருப்பவர்கள் மட்டுமே காலம்காலமாக அதே அடுக்கின் அடிமட்டத்தில் இருப்பவர்களுக்கும் சேர்ந்து திட்டங்களை வகுப்பதால் தங்களுக்கு என் ஏற்படுத்திக் கொள்ளும் சலுகைகள் இவை.

எனவே இந்த விஸ்வகர்மா யோஜனா திட்டம் என்பது பிற்படுத்தப்பட்ட பட்டியலின, பழங்குடியின இளைஞர்கள் பொறியியல் கல்வி கற்பதைத் திட்டமிட்டே தடுக்கும் வகையில் அமைக்கப்பட்டிருப்பது தெளிவாக தெரிகிறது.

தமிழ்நாட்டில், தங்களது பிள்ளைகள் கட்டாயமாக பட்டம் பெற வேண்டும் எனும் உந்துதலை ஒவ்வொரு குடும்பத்திற்கும் நமது திராவிட மாடல் அரசு உருவாக்கி வைத்துள்ளது. நாட்டிலேயே உயர்கல்வி கற்போர் சதவீதம் (Gross Enrolment Ratio) மிக அதிகமாகவும், ஐரோப்பிய நாடுகளுக்கு இணையாகவும் நமது தமிழ்நாடு உள்ளதால், இந்தத் திட்டம் இங்கே நிச்சயம் தோல்வியுறும்.

மேலும், புதுமைப் பெண் திட்டம், நான் முதல்வர், முதல் தலைமுறைப் பட்டதாரிக்கான கல்விக் கட்டண திட்டம் என பல்வேறு திட்டங்களை நமது தமிழ்நாட்டு முதலமைச்சர் முனைப்பாகச் செயல்படுத்துவதின் மூலம் 2030 ஆண்டில் ஒன்றிய அரசு நிர்ணயித்துள்ள 50% எனும் இலக்கைத் தாண்டி 80% எனும் சாதனையை தமிழ்நாடு எட்டிவிடும்.

ஆனால், பீகார், மத்தியப்பிரதேசம், ஜார்க்கண்ட், உத்திரப்பிரதேச மாநிலங்களில் கல்வியின்மையும், சாதிய அடக்குமுறைகளும் மிக அதிகமாக உள்ளன என அரசின் பல்வேறு புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. அங்கிருந்துதான் பல லட்சம் இளைஞர்கள் வேலை வாய்ப்பைத் தேடி தென்மாநிலங்களுக்கும், பெரு நகரங்களுக்கும் இடம் பெயர்வதை நித்தமும் நாம் காண்கிறோம்.

அந்தகைய எளிய மக்கள்தான் இந்த சூழ்ச்சித் திட்டத்தின் குறி ஆவார்கள். தினமும் 500 ரூபாய், குறைந்த வட்டியில் 1 லட்சம் ரூபாய் கடன் தருகிறோம்! வீட்டிலேயே இருந்து உனது குலத் தொழிலைப் பார். என்பது வறுமை நிலையில் உள்ள யாரையும் ஈர்க்கும் ஒரு மாயவலை.

ஓர் அரசே தனது சொந்தக் குடிமக்களை இப்படியொரு மாயவலையில் சிக்க வைப்பது வெறும் அரசியல் லாபத்துக்காக மட்டும் இல்லை. அதையெல்லாம் தாண்டி நாம் சுதந்திரம் பெற்றதில் இருந்து இந்த 75 ஆண்டு காலம் நமது முன்னோடித் தலைவர்கள் அரும்பாடுபட்டு தகர்ந்த கொடூரமான அந்தச் சாதிய விலங்குகளை நம்மையே எடுத்து மீண்டும் பூட்டிக் கொள்ள வைக்கும் அதிநுட்பச் சதிச் செயல் இது.

எனவே, நமது நாடு பொதுத் தேர்தலை எதிர்நோக்கி இருக்கும் இந்த நேரத்தில் அவசரகதியில் கொண்டு வரப்படும் இந்த “பிரதான் மந்திரி விஸ்வகர்மா யோஜனா” எனும் குலக்கல்வித் திட்டத்திற்கு கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்வது நம் கடமை.


# 22 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



**மாஸ்டர் தமிழ்ப்பித்தன் (எ) ம.வேலுச்சாமி**

(மாநில தொண்டரணிச் செயலாளர், தி.மு.க.)

15.9.2001 அன்று கழகத் தலைவரிடம் பதக்கம் பெற்ற மகிழ்ச்சியில் திளைத்த எங்கள் இதய தெய்வத்திற்கு நினைவஞ்சலி!

மகன்

**வேல்.உமாகாந்த்** துணைச் செயலாளர், மாநில பொறியாளர் அணி



தமிழ்நாடு அரசு

**நெடுஞ்சாலைத்துறை**

**திருச்சிராப்பள்ளி கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம்,**

**ஒப்பந்தப்புள்ளி அழைப்பு**

ஒ.அ.எண்: 42/2023-24/தவஅ/ நாள்:08.09.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, திருச்சிராப்பள்ளி வட்டம், அவர்களால் 2023-24ம் ஆண்டிற்கான திட்டம் சாரா பணிகளில், **தஞ்சாவூர்** (நெ) க(ம)ப கோட்டம் சார்ந்த **4 பணிகளுக்கு** இணையவழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **04.10.2023, 14.00** மணி வரை (இணைய நேரப்படி) வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விபரம், தோராய மதிப்பு, முன்வைப்பு தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விவரங்கள் **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **18.09.2023** முதல் தெரிந்துக்கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையத்தளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ),**
**க(ம)ப வட்டம், திருச்சிராப்பள்ளி -20.**

செ.ம.தொ.இ./5022/ஒப்பந்தப்புள்ளி/2023


## பேரறிஞர் அண்ணா 115 வது பிறந்தநாள் விழா!

# திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகத்தினர் சிறப்பாக கொண்டாடுவீர்!

## மாவட்டக் கழக செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., அறிக்கை!

திருப்பூர், செப். 15 -

திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகத்தினர் பேரறிஞர் அண்ணா அவர்களின் 115 வது பிறந்தநாள் விழாவை சிறப்பாக கொண்டாடுமாறு மாவட்டக் கழக செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ. கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து மாவட்டக் கழக செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., அறிக்கை வருமாறு :- காஞ்சி தந்த காவிய தலைவர், உலக தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டு கொலுவீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர், தமிழ் மொழி உயர்வுக்காவும், தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ்நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுப்பட்ட உத்தமர், “கடமை கண்ணியம் கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர், “இப்படை தோற்கின் எப்படை வெல்லும்” என்று தம்பிமார் பெரும்படையைக் கண்டு, நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன், “மெட்ராஸ் ஸ்டேட்” என்ற பெயரை “தமிழ்நாடு” என்று பெயர் மாற்றம் செய்து தாய்க்குப் பெயர் தந்த தனிப்பெரும் தனயன், சுயமரியாதை சுடரொளி, சொக்க வைக்கும் சொற்பொழிவாளர், எழுத்து வேந்தர், தென்னகத்தின் மிகப்பெரும் அரசியல் தலைவர், பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 115 வது ஆண்டு பிறந்த நாளான இன்று (15.09.2023) காலை 8.00 மணியளவில் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் முதல் முதலில் சந்தித்த இடமான திருப்பூர் ரயில்வே அருகில் அமைந்துள்ள அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு மாவட்டக் கழக செயலளார், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் ஆகிய எனது தலைமையில் மாநகரக் கழக செயலாளர்கள் டி.கே.டி.மு.நாகராசன் திருப்பூர் தெற்கு, மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் திருப்பூர் வடக்கு ஆகியோர் முன்னிலையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்படுகிறது. அது சமயம் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், ஊராட்சி, வார்டு கிளை கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து நிகழ்ச்சியை சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திருப்பூர் வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட நான்கு சட்டமன்றத் தொகுதிகளிலும் பேரறிஞர் அண்ணா அவர்களின் 115 வது பிறந்த தினத்தை சிறப்பாக கொண்டாடும் வகையில் திருவுருவச் சிலை அமைந்திருக்கும் இடங்களில் அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தியும் திருஉருவச் சிலை இல்லாத இடங்களில் அவரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தியும், பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் சிறப்பாக கொண்டாட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழக செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நாமக்கல் மேற்கு மாவட்ட கழக தகவல் தொழில் நுட்ப அணி சார்பில் கலைஞர் அவர்களின் சிறப்பை கொண்டாடும் வகையில் ”என்னை ஈர்த்த கலைஞர் ” என்ற தலைப்பில் சமூக வலைதள இலட்சினை நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் வெளியிட்டு, தகவல் தொழில் நுட்ப அணியினரை பாராட்டினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் கௌதம்/ துணை அமைப்பாளர்கள் தினேஷ்குமார், வடிவேல், பரசுராமன், தமிழ்தாரணி, சேக் மீரான் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்!

# ‘திராவிட மாடல்’ அரசின் மற்றொரு மைல் கல்!

பேரறிஞர் அண்ணா தொடங்கி முத்தமிழ் அறிஞர் கலைஞர் காலம் தொட்டு, இன்று நம் கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சி வரை மகளிருக்கான மேம்பாட்டுத் திட்டங்கள் திராவிட மாடலின் ஓர் அங்கம் என்றே சொல்லலாம். பல ஆண்டுகளாய் அடிமைப்பட்டு கிடந்த பெண்ணினத்தை எழுச்சியுடன் சமூகத்தின் தலைமை பீடத்தை அலங்கரிக்கும் அளவிற்கு மேம்படுத்த தீயாய் வேலை செய்ததில் தி.மு.க.வின் பங்கு அளப்பரியது. பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் கனவு கண்ட பாலின சமத்துவமின்றி சமூக நீதியை அடைய வழி ஏதுமில்லை என்பதை கழக ஆட்சி அமையும் போதெல்லாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது, வலியுறுத்துவதோடு அன்றி அதை நோக்கி செயலாற்றியும் வந்துள்ளது என்பது நம் கண் முன் காணும் வரலாறு.

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மகளிர் மறுமண நிதியுதவித் திட்டம், அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம், அன்னை தெரசா அம்மையார் நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதியுதவித் திட்டம், ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண நிதியுதவித் திட்டம், ஈ.வெ.ரா.நாகம்மையார் நினைவு ஏழை மகளிர் இலவசப் பட்டப்படிப்புத் திட்டம் என மகளிர் முன்னேற்றத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகம் பல்வேறு திட்டங்களை தனது ஆட்சி காலங்களில் தந்துள்ளது.



**முனைவர். பி.பழனியப்பன்**
தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர்
மேனாள் உயர்கல்வித்துறை அமைச்சர்

இவை மட்டும் இன்றி 1973இல் இந்தியாவிலேயே முதன்முறையாகக் காவல் துறையில் மகளிரை பணிநியமனம் செய்தது கழக ஆட்சி. உள்ளாட்சித் தேர்தல்களில் பெண்களுக்கு 33% இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டது கழக ஆட்சியில் தான். திருக்கோவில்களின் அறங்காவலர் குழுவில் மகளிர் ஒருவர் கட்டாயம் இடம் பெற வேண்டும் என சட்டம் கண்டது கழக ஆட்சி! அரசின் தொழில்மனைகள் ஒதுக்கீட்டில் பெண்களுக்கு 10% மனைகளை ஒதுக்கிட வகை செய்து, பெண்கள் தொழில்முனைவோராக்கிட ஊக்கம் தந்தது கழக ஆட்சி! இந்தியாவிலேயே முதன்முறையாக 1990இல் பெண்களுக்குப் பரம்பரைச் சொத்தில் சம உரிமை அளித்திடும் தனிச்சட்டம் கண்டது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தான்.

பள்ளி ஆசிரியர்களில் இரண்டாம் வகுப்பு வரை முற்றிலும் பெண்களை ஆசிரியைகளாக நியமிக்க வேண்டும் என 1997இல் ஆணையிட்டது கழக ஆட்சி! 1990ஆம் ஆண்டில் அரசுத் துறைகளில் பெண்களுக்கு 30% இடஒதுக்கீட்டினை வழங்கிட சட்டம் இயற்றியது கழக ஆட்சி. உழைக்கும் பெண்களை ஊக்கப்படுத்திட 1998இல் மகளிர் சிறு வணிகக் கடன் திட்டத்தை அறிமுகப்படுத்தியது கழக ஆட்சி!. ஏழை விதவைப் பெண்களுக்கு இலவசத் தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தை 1975ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்திச் செயல்படுத்தியது கழக ஆட்சி!

விதவைப் பெண்களுக்கும், கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கும், 18 வயதிற்கு மேற்பட்ட மகன் இருந்தாலும், முதியோர் உதவித் திட்டத்தின் கீழ் உதவித் தொகை வழங்கிட 1998இல் அரசாணை வெளியிட்டது கழக ஆட்சி! ஏழைத் தாய்மார்களின் உடல்நலம் காத்திட எரிவாயு இணைப்புடன் இலவச எரிவாயு அடுப்புகளை வழங்கியது கழக ஆட்சி! இப்படி பெண்கள் முன்னேற்றத்திற்காக ஏராளமான திட்டங்கள் தீட்டி சமூக மாற்றத்திற்கு வித்திட்டது திராவிட முன்னேற்றக் கழகதின் ஆட்சியே!

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை பொருத்தவரை அவர் சென்னை மாநகராட்சி மேயராக, உள்ளாட்சி துறை அமைச்சராக, துணை முதல்வராக இருந்த காலம் தொட்டே இந்தியாவிற்கே முன்னுதாரணமான பல்வேறு மகளிர் நலத்திட்டங்களை முன்னெடுத்து வந்துள்ளார். தளபதியாரின் இந்த ஈடில்லா ஈராண்டு ஆட்சிக் காலத்திலேயே மகளிர் பயன் பெறும் கட்டணமில்லா பேருந்து வசதி, பெண் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் கல்லூரி செல்லும் பெண்கள் மாதந்தோறும் 1000 ஊக்கத்தொகை பெறும் புதுமை பெண் திட்டம், மகளிர் சுய உதவிக் குழுக்களின் கடனை தள்ளுபடி செய்ததோடு மட்டுமில்லாமல் புதிதாக கடனுதவி என மகளிர் மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களை வாரி வழங்கியுள்ளார்.

அதன் தொடர்ச்சியாக கழக அரசின் மிக முக்கிய வாக்குறுதியான இந்தியாவே ஆவலுடன் எதிர்பார்க்கும் வரலாற்று சிறப்பு மிக்க மகளிர் உரிமைத் தொகை திட்டத்தினை தேர்வு செய்யப்பட்ட 1 கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் பேருக்கு வழங்கும் துவக்கமாக வரும் செப்.15 ம் தேதி பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளில் காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரி மைதானத்தில், காலை 10 மணிக்கு திராவிட பேரரசர் கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைக்க உள்ளார்.

1989 ஆம் ஆண்டு தர்மபுரியில், முத்தமிழ் அறிஞர் கலைஞரால் இந்தியாவிலேயே முதன்முறையாக மகளிர் சுய உதவிக் குழுக்கள் தொடங்கப்பட்டது. கலைஞரை தொடர்ந்து தற்போது நமது கழகத்தலைவர், முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை தனது பொற்கரங்களால் தொடங்கி வைத்து திராவிட மாடல் அரசின் வரலாற்று பக்கத்தில் மற்றுமொரு மைல் கல்லை வைக்க உள்ளார் என்பதை நினைக்கையில், கழகத்தினர் மட்டுமன்றி தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவருக்கும் நெஞ்சு புடைத்திடும் பெருமை ஏற்படும் என்பதில் ஐயமில்லை. இந்த திட்டத்தால், அரசுக்கு கூடுதல் நிதிச் சுமை, இலவசங்கள் கூடாது என வழக்கம் போல மகளிர் மேம்பாட்டை சிந்திக்காத எதிர்க்கட்சிகள் திசைக்கொன்றாய், மூலையில் நின்று கொக்கரித்துக் கொண்டிருக்கும் வேளையில், ஒவ்வொரு மகளிரையும் தனது தாயாய் சகோதரியாய் மகளாய் காணும் நமது கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்த சமூகத்தை தாங்கி நிற்கும், உழைக்கும் மகளிர் உரிமை காத்திட, அவர்களின் உழைப்பை அங்கீகரித்திட, கழக அரசு என்றும் துணை நிற்கும் என்பதை மீண்டும் ஒரு முறை அழுத்தந்திருத்தமாய் பதிவு செய்யவிருக்கும் கழகத்தலைவரும், முதலமைச்சருமான ஆருயிர் அண்ணன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு தமிழ்நாட்டு மக்களின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றி! நன்றி! நன்றி!

திராவிட முன்னேற்றக் கழகம் என்றும் சொன்னதை செய்யும்! செய்வதை தான் சொல்லும்! என்றும் அறமே வெல்லும் !!



சென்னை, சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள சென்னை குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகத்தில், நேற்று முன்தினம் (13.09.2023) நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக கொண்டாடும் வகையில் அமைக்கப்பட்ட நிறுவனங்களின் நாயகர் – கலைஞர் குழுவின் இரண்டாம் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், இணைத் தலைவர் சட்டத் துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, உறுப்பினர் செயலர் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பா.பொன்னையா, குழு உறுப்பினர்கள் ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் உ.மதிவாணன், டி.வி.எஸ். குழுமத் தலைவர் வேணு சீனிவாசன், வி.ஐ.டி.கல்வி குழுமத் தலைவர் ஜி.விஸ்வநாதன், மருத்துவர் சந்திரகுமார், தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவன முதன்மைச் செயலாளர்/மேலாண்மை இயக்குநர் மரு.எஸ்.விஜயகுமார், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் வ.தட்சிணாமூர்த்தி, தமிழ்நாடு தொழில் முன்னேற்ற கழக மேலாண்மை இயக்குநர் திருமதி ஏ.சுந்தரவள்ளி, தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி சோ.மதுமதி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில்

# மேல்முறையீடு செய்தல் வழிகாட்டு நெறிமுறைகள் வெளியீடு!

சென்னை, செப்.15-

குடும்பத்திற்காக அயராது உழைத்துக் கொண்டிருக்கும் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, சமூகத்தில் சுயமரியாதையோடு வாழ்வதற்கு வழிவகுக்க வேண்டும் என்ற சீரிய நோக்கத்திற்காக குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1000/ உரிமைத் தொகையாக வழங்கிட தமிழ்நாடு அரசால் ‘கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம்’ செயல்படுத்தப்படுகிறது.

இந்தத் திட்டத்தில் மாநிலம் முழுவதும் விண்ணப்பங்கள் பெற 24.07.2023 முதல் 04.08.2023 வரை முதல் கட்டமாகவும், 05.08.2023 முதல் 14.08.2023 வரை இரண்டாவது கட்டமாகவும், மேற்சொன்ன இரண்டு கட்டங்களிலும், விடுபட்டவர்களுக்கு 18.08.2023 முதல் 20.08.2023 வரை சிறப்பு முகாம் வழியாகவும் விண்ணப்பங்கள் பெறப்பட்டு பதிவு செய்யப்பட்டன.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் அரசிடம் உள்ள பல்வேறு தகவல் தரவு தளங்களில் உள்ள தகவல்களுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டும் மற்றும் அரசு அலுவலர்களால் நேரடி கள ஆய்வுகளின் மூலம் சரிபார்க்கப்பட்டும், திட்ட விதிமுறைகளைப் பூர்த்தி செய்த 1.065 கோடி மகளிர் பயனாளிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

**மேல்முறையீடு**

கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட விண்ணப்பதாரர்களின் தகுதிகள் சரிபார்க்கப்பட்டு, அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும், தகுதியின்மைக்கு உள்ளான விண்ணப்பங்கள் ஏற்கப்படவில்லை.

விண்ணப்பதாரர்களின் விண்ணப்ப முடிவு நிலை குறித்த குறுஞ்செய்தி விண்ணப்பதாரர்களின் பதிவு செய்யப்பட்ட கைபேசி எண்ணிற்கு 18.09.2023 முதல் அனுப்பி வைக்கப்படும். இவ்வாறு ஏற்கப்படாத விண்ணப்பதாரர்கள் மேல்முறையீடு செய்ய விரும்பினால், குறுஞ்செய்தி பெறப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் இசேவை மையம் வழியாக வருவாய் கோட்டாட்சியருக்கு மேல்முறையீடு செய்யலாம். மேல்முறையீட்டு விண்ணப்பங்கள் 30 நாட்களுக்குள் தீர்வு செய்யப்படும்.

வருவாய் கோட்டாட்சியர் மேல்முறையீட்டு அலுவலராகச் செயல்படுவார். இணையதளம் மூலம் செய்யப்படும் மேல்முறையீடுகள், அரசு தகவல் தரவு தளங்களில் உள்ள தகவல்களுடன் ஒப்பிட்டுச் சரிபார்க்கப்பட்டு, வருவாய் கோட்டாட்சியருக்கு அனுப்பி வைக்கப்படும். வருவாய் கோட்டாட்சியர் மேல்முறையீட்டு விண்ணப்பங்களைத் தீர்வு செய்ய கள ஆய்வு தேவைப்படும் நேர்வுகளில், சம்பந்தப்பட்ட சமூகப் பாதுகாப்புத் திட்ட வட்டாட்சியர்கள் வழி கள ஆய்வு அறிக்கையினைப் பெற்று விசாரணை செய்வார். இந்த மேல்முறையீடு நடைமுறைகள் அனைத்தும் இணையதளம் வழியாக மட்டுமே செய்யப்படும்.

**புகார்கள்**

வருவாய் கோட்டாட்சியர் பயனாளிகளின் தகுதி மற்றும் தகுதியின்மைகள் தொடர்பாக தனி நபர்களின் மூலம் வரப்பெறும் புகார்கள் குறித்த விசாரணை அலுவலராகச் செயல்படுவார். இணையதளம் வழியாகப் பெறப்படும் புகார்கள் மேல்முறையீட்டு மனுக்களுக்கு பின்பற்றப்படும் நடைமுறைகளைப் பின்பற்றி விசாரிக்கப்படும் என்று தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

### கழக முப்பெரும் விழாவில்

# புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்ட செயலாளர் - அமைச்சர் எஸ்.ரகுபதி வேண்டுகோள்!

புதுக்கோட்டை, செப்.15 -

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:



தலைமை கழகத்தின் சார்பில் வேலூர் பள்ளிகொண்டாவில் வரும் 17.9.2023 ஞாயிறு மாலை 5 மணிக்கு அண்ணா பிறந்த நாள், தந்தை பெரியார் பிறந்த நாள், கழகம் தோற்றுவிக்கப்பட்ட நாள் என முப்பெரும் விழா நடைபெறுகிறது.

முப்பெரும் விழாவில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் கலந்து கொண்டு விருதுகள் வழங்கி சிறப்புரையாற்ற உள்ளார்கள். இந்த முப்பெரும் விழாவில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு. பொதுக் குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், வட்ட,, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு தமது அறிக்கையில் கூறி உள்ளார்.

### ஈரோடு தெற்கு மாவட்டம் – வீரப்பன் சத்திரத்தில்

# பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலை! முதல்வர் திறந்து வைக்கிறார்!

## அமைச்சர் சு.முத்துசாமி வேண்டுகோள்!

ஈரோடு, செப். 15 -

ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளர் சு.முத்துசாமி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

அறிவுலக மேதை பேரறிஞர் அண்ணா அவர்களின் 115வது பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு மாநகரம் வீரப்பன் சத்திரம் பகுதியில் புதுப்பிக்கப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலையை இன்று ( 15.9. 2023 - வெள்ளிக்கிழமை) மாலை 6 மணியளவில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைக்க உள்ளார். எனவே மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, ஊர்க்கிளை கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், துணை அமைப்புகளின் நிர்வாகி கள், உள்ளாட்சி, கூட்டுறவு சங்க பிரதிநிதிகள், கழக உடன்பிறப்புகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளர் சு.முத்துசாமி தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

### தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் நிகழ்ச்சி

# தொ.மு.ச.வினர் பெருந்திரளாகப் பங்கேற்பீர்!

## தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் எம்.பி. அறிக்கை!

சென்னை, செப்.15-

தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் நிகழ்ச்சிகளில் தொ.மு.ச. வினர் பெரும் திரளாகப் பங்கேற்க வேண்டும் என்று தொ.மு.ச. பொதுச் செயலாளர் மு.சண்முகம் எம்.பி. தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு :

அறிவுலக மேதை பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்தநாளான செப்டம்பர் 15 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட வள்ளுவர் கோட்டத்தில் அமைந்துள்ள அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கும் நிகழ்ச்சியிலும், செப்டம்பர் 17 அறிவு ஆசான் தந்தை பெரியார் பிறந்தநாளை முன்னிட்டு அண்ணா சாலை சிம்சன் எதிரில் அமைந்துள்ள அய்யாவின் திருவுருவச் சிலைக்கு நமது கழகத்தினுடைய தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்த உள்ளார்கள். அந்த நிகழ்ச்சி யிலும் சென்னை, செங்கற்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தொ.மு.க. வினர் கருப்பு சிவப்பு சிருடை அணிந்து கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மு.சண்முகம் தமது அறிக்கையில் கூறியுள்ளர்.

### விழுப்புரம் தெற்கு மாவட்டத்தில்

# பேரறிஞர் அண்ணா சிலைக்கு அமைச்சர் க.பொன்முடி மாலை அணிவிக்கிறார்!

## மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ. அறிக்கை!

விழுப்புரம், செப். 15-

விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ. விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:



இன்று (15.09.2023 - வெள்ளிக்கிழமை) விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு காலை 8.00 மணியளவில் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முகப்பில் இருந்து கழக துணைப் பொதுச்செயலாளர், உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி தலைமையில் ஊர்வலமாக சென்று விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலை க்கும், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலைக்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்த படுகிறது.

அவ்வமயம் மாநில, மாவட்டக் கழக நிர்வா கிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மற்றும் ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள், ஒன்றிய குழு தலைவர்கள், துணை தலைவர்கள், நகர மன்றத் தலைவர்கள், துணைத் தலைவர்கள், பேரூராட்சி மன்றத் தலைவர்கள், துணைத் தலைவர்கள், ஒன்றியக் குழு உறுப்பினர்கள், நகர மன்ற உறுப்பினர்கள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகச் செயல் வீரர்கள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் கழக முப்பெரும் விழா!

# நாகை மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் வேண்டுகோள்!

நாகை. செப்.15 -

நாகை மாவட்டக் கழக செயலாளர் என்.கௌதமன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது. மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்ற பேரறிஞர் அண்ணா அவர்கள் அவர்கள் 1949ம் ஆண்டு செப்டம்பர் 17ம் தேதி கழகத்தை தோற்றுவித்து இன்றும் அண்ணா வழியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர், தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் ஆகியோர் கட்டி காத்து



இரும்பு கோட்டையாக உள்ளது தி.மு.க. பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 15ம் தேதியான இன்று அண்ணா அவர்களின் பிறந்த நாளை நாகை மாவட்டம் முழுவதும் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் கிளை, வார்டுகள் தோறும் பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்தும், திருஉருவப் படத்தை வைத்து மாலை அணிவித்தும் மரியாதை செலுத்திட வேண்டும் மேலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் 2023க்கான முப்பெரும் விழா 17.9.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை வேலூரில் பள்ளிக்கொண்டான் டோல் கேட் அருகே நடைபெறுகிறது. இந்த முப்பெரும் விழாவிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் விருதுகளை வழங்கி சிறப்பிரையாற்றுகிறார். முப்பெரும் விழாவில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், கழகத்தினர், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் அனைவரும் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு நாகை மாவட்ட கழகச் செயலாளர் என்.கௌதமன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

### பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா - வேலூரில் நடைபெறும் கழக முப்பெரும் விழா

# மயிலாடுதுறை மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., வேண்டுகோள்!

நாகை. செப். 15 -

மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளர்- பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்ப தாவது.

மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்ற பேரறிஞர் அண்ணா அவர்கள் அவர்கள் 1949ம் ஆண்டு செப்டம்பர் 17ம் தேதி கழகத்தை தோற்றுவித்து இன்றும் அண்ணா வழியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர், தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் ஆகியோர் கட்டி காத்து இரும்பு கோட்டையாக உள்ளது தி.மு.க. பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 15ம் தேதியான இன்று அண்ணா அவர்களின் பிறந்த நாளை எழுச்சியுடன் மயிலாடுதுறை மாவட்டம் முழுவதும் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் கிளை, வார்டுகள் தோறும் பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்தும், திரு உருவப் படத்தை வைத்து மாலை அணிவித்தும் மரியாதை செலுத்திட வேண்டும் மேலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் 2023க்கான முப்பெரும் விழா 17.9.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை வேலூரில் பள்ளிக்கொண்டான் டோல் கேட் அருகே நடைபெறுகிறது. இந்த முப்பொரும் விழாவிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமை தாங்கி விருதுகளை வழங்கி சிறப்பிரையாற்றுகிறார். பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா மற்றும் முப்பெரும் விழாவில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற உறுப்பினர், சட்ட மன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழகமூத்த முன்னோடிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், கழகத்தினர், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் அனைவரும் முப்பெரும் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்திட அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மயிலாடுதுறை மாவட்ட கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் கூறியுள்ளார்.



## நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வை வீழ்த்த தமிழ்நாட்டில்

# ‘இந்தியா’ கூட்டணிக்கு 40 இடங்களிலும் வெற்றியைத் தேடித்தர வேண்டும்!

## இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.தங்கபாண்டியன் இல்ல மணவிழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, செப். 14 -**

**“நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வை வீழ்த்த; தமிழ்நாட்டில் ‘இந்தியா’ கூட்டணிக்கு 40 இடங்களிலும் வெற்றியைத் தேடித்தர வேண்டும்” என்று இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.தங்கபாண்டியன் இல்ல மணவிழாவில் மணவிழாவை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.09.2023) சென்னையில் நடைபெற்ற சட்டமன்ற உறுப்பினர் எஸ்.தங்கப்பாண்டியன் இல்ல திருமண விழாவில் கலந்து கொண்டு ஆற்றிய உரை வருமாறு:-

எஸ்.தங்கப்பாண்டியன் - திருமதி கலாவதி அவர்களுடைய அருமை மகன் ராமன் அவர்களுக்கும், அருண் - திருமதி அருள்மொழி ஆகியோருடைய அன்பு மகள் அக்ஷய செல்வி அவர்களுக்கும் நம்முடைய அன்பான வாழ்த்துக்களோடு இந்த மணவிழா நிகழ்ச்சி நிறைவேறியிருக்கிறது.

இந்த மணவிழாவை பொறுத்தவரையில், நான் கலந்து கொள்ளக்கூடிய ஒவ்வொரு திருமண நிகழ்ச்சிகளும், மறக்காமல் வரலாற்றில் பதிவாகியிருக்கக்கூடிய ஒரு செய்தியை சொல்லாமல் இருந்ததில்லை. இன்றைக்கு நடைபெற்றிருக்கக் கூடிய திருமணம் சீர்திருத்த முறையில், சுயமரியாதை உணர்வோடு நடைபெற்றிருக்கக்கூடிய திருமணமாக நடந்தேறியிருக்கிறது. இதுபோன்ற சீர்திருத்த திருமணங்கள் 1967க்கு முன்பு நடைபெறும் என்று சொன்னால் அந்த திருமணங்கள் சட்டப்படி செல்லுபடியாகும் என்ற அங்கிகாரத்தை பெற முடியாத நிலையில் நடந்திருக்கிறது.

### சீர்திருத்த திருமணங்களை சட்டமாக்கியது கழக அரசு!

ஆனால், 1967ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் அமோக வெற்றி பெற்று ஆட்சிப் பொறுப்பேற்று, ஆட்சியின் தலைவனாக, தமிழக முதல்வராக நம்மை ஆளாக்கிய இதயதெய்வம் அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று முதலமைச்சராக பொறுப்பேற்று, முதலமைச்சர் என்ற முறையில் முதன்முதலாக சட்டமன்றத்திற்குள்ளே நுழைந்து சீர்திருத்த திருமணங்கள் அனைத்தும் சட்டப்படி செல்லுபடியாகும் என்கிற தீர்மானத்தை சட்டமாக்கி நிறைவேற்றித் தந்தார்கள். ஆகவே, இன்றைக்கு நடைபெற்றிருக்கக்கூடிய இந்தத் திருமணம் சட்டப்படி முறைப்படி செல்லுபடியாகும் என்கிற அங்கிகாரத்தோடு நடந்தேறியிருக்கிறது. அப்படிப்பட்ட இந்த திருமணத்தில் உங்களோடு சேர்ந்து நம்முடைய மணமக்களை நானும் வாழ்த்துவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினராக நம்முடைய தங்கபாண்டியன் அவர்கள் எந்த அளவிற்கு சிறப்பாக பணியாற்றி கொண்டிருக்கிறார் என்பதைப் பற்றி ஏதோ நான் சொல்லித்தான் நீங்கள் எல்லாம் தெரிந்துகொள்ள வேண்டிய நிலையில் இல்லை. ஏனென்றால் அவரை அறிந்தவர்கள் நீங்கள், புரிந்தவர்கள் நீங்கள்.

### தொய்வின்றி உழைத்ததால் இருமுறை வென்ற தங்கபாண்டியன்!

தொடக்ககாலத்தில், ஒரு சாதாரண உறுப்பினராக, திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு அதற்குப் பிறகு பேரூர் கழகச் செயலாளராக பொறுப்பேற்று பணியாற்றி, அதைத் தொடர்ந்து உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிட்டு வார்டு கவுன்சிலராக பணியாற்றக்கூடிய அந்த வாய்ப்பையும் பெற்று, அதற்குப் பின்னால் 2014ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற பொதுத் தேர்தலில் அந்தத் தொகுதியில் போட்டியிடக்கூடிய வாய்ப்பைப் பெற்று, ஆனால் வெற்றிபெறக்கூடிய வாய்ப்பை அவரால் பெறமுடியவில்லை. வெற்றி பெறவில்லையே, தோற்றுவிட்டோமே என்று துவண்டுவிடாமல் தொடர்ந்து இயக்கப் பணியாற்றி வெற்றியை, தோல்வியை இரண்டையும் ஒன்றாக கருதி தொடர்ந்து உழைத்த காரணத்தினால்தான்



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.9.2023) சென்னையில் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.தங்கபாண்டியனின் மகன் த.ராமன் – அ.அக்ஷயசெல்வி ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மணமக்களின் குடும்பத்தினர் ஆகியோர் உள்ளனர்.

அதற்குப் பிறகு நடந்த 2016ஆம் ஆண்டு தேர்தலாக இருந்தாலும் சரி,

2021ஆம் ஆண்டு நடந்த தேர்தலாக இருந்தாலும் சரி, தொடர்ந்து இரண்டு தேர்தலில் வெற்றி பெற்று இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடியவர்தான் நம்முடைய அருமை சகோதரர் தங்கபாண்டியன் அவர்கள்.

அவரைப்பற்றி இன்னொரு செய்தியை நான் இங்கு பெருமையோடு சொல்லியாக வேண்டும். அவர் எப்பொழுது சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டாரோ, அன்றிலிருந்து இன்றுவரை ஏற்கனவே, 5 ஆண்டாக இருந்தாலும் சரி, அதற்குப்பிறகு இப்போது இரண்டரை ஆண்டு காலத்திற்கு மேலாக பணியாற்றிக் கொண்டிருக்கக் கூடிய இந்த சூழ்நிலையாக இருந்தாலும் சரி, இதுவரையில் சட்டமன்ற உறுப்பினருடைய சம்பளப் பணத்தை தனக்கு செலவழிக்காமல் தன்னுடைய தொகுதி மக்களுக்காக, அந்த தொகுதியில் இருக்கக் கூடிய இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்கு, கல்வி உதவிக்கு அதை அவர் செலவு செய்து கொண்டிருக்கிறார் என்பதை அறிந்து நான் உள்ளபடியே பெருமைப்படுகிறேன்.

இதுவரை 234 தொகுதிகளில் இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களில் தங்கபாண்டியனை போல சம்பளத்தைப் பெறாமல் மக்களுக்காக பணியாற்றக் கூடிய MLA உண்டா? என்றால் நான் உள்பட சொல்லுகிறேன் இல்லையென்றுதான் சொல்லியாக வேண்டும். அந்த அளவிற்கு அவர் மக்களிடத்தில் நல்ல மதிப்பைப் பெற்றிருக்கிறார். மக்களுடைய உள்ளத்தில் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறார். அப்படிப்பட்ட சிறப்பைப் பெற்றிருக்கக்கூடிய இல்லத்தில் நடைபெறக்கூடிய இந்த மணவிழா நிகழ்ச்சிக்கு தலைமையேற்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றமைக்காக நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன்.

### கொரோனா காலத்தில் கழகம் ஆற்றிய மக்கள் பணி!

அதுமட்டுமல்ல, கொரோனா என்ற ஒரு கொடிய நோய் தொற்றிய நேரத்தில் இந்தியா மட்டுமல்ல, தமிழ்நாடு மட்டுமல்ல, உலகமே அதில் சிக்கித் தவித்த நேரத்தில் நம்முடைய தமிழ்நாடும் சிக்கித் தவித்தது என்பதை மறந்திருக்க மாட்டீர்கள். அதில் பல கொடுமைகள் எல்லாம் அனுபவித்தவர்கள் இங்கே இருப்பீர்கள்.

கொரோனா காலத்தில் நடந்த ஆட்சி தமிழ்நாட்டில் அப்போது அ.தி.மு.க. ஆட்சி. ஆனால் ஆட்சியில் இருந்தார்களே தவிர, அந்த கொரோனாவை கட்டுப்படுத்துகின்ற முயற்சியில் ஈடுபட்டார்களா என்று கேட்டீர்கள் என்றால் ஈடுபடவில்லை. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியில் இருக்கிறது. எதிர்க்கட்சியாக இருந்தாலும், திராவிட முன்னேற்றக் கழகம் மக்கள் பணியை எந்த அளவிற்று ஆற்றியிருக்கிறது என்பதற்கு ஒரே ஒரு உதாரணம் அந்த கொரோனா காலத்தில் பாதிக்கப்பட்டிருக்கக் கூடிய மக்களுக்கு துணை நிற்கக்கூடிய வகையில் ‘ஒன்றிணைவோம் வா’ என்ற ஒரு திட்டத்தை உருவாக்கி அதன்மூலமாக மக்களுக்கு என்னென்ன தேவைகள் ஏற்படுகிறதோ அத்தனையும் செய்து கொடுத்த ஒரு கட்சிதான் இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பில் இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை நான் பெருமையோடு சொல்ல விரும்புகிறேன்.

அதில் ஓரளவிற்கு வெற்றி பெற்றோம் என்று சொன்னால், தங்கபாண்டியன் போன்றவர்கள், அவருடைய இராஜபாளையம் தொகுதியில் இருக்கக்கூடிய மக்களுக்கு அவர் ஆற்றியிருக்கக்கூடிய பணிகள் எல்லாம் தலைமைக் கழகத்தின் மூலமாக நானும் அறிந்தவன், உள்ளபடியே அதற்கான நான் மனம் திறந்த பாராட்டுக்களை இந்த நேரத்தில் தங்கபாண்டியன் அவர்களுக்கு உங்கள் சார்பில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

### மக்கள் நமக்கு தொடர் வெற்றிகளை தந்துகொண்டிருக்கிறார்கள்!

தி.மு.க.வை பொறுத்தவரைக்கும், ஆட்சியில் இருந்தாலும் சரி, ஆட்சியில் இல்லையென்று சொன்னாலும் சரி, மக்களைப் பற்றி சிந்திக்கின்ற, மக்களைப் பற்றி கவலைப்படுகிற ஒரு கட்சிதான் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதாகும். அதனால்தான் தொடர்ந்து வெற்றியை நாம் இன்றைக்கு பெற்று வருகிறோம்.

நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு மிகப் பெரிய வெற்றி தமிழ்நாட்டு மக்கள் நமக்கு தேடித் தந்தார்கள். அதற்குப் பின்னால் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் ஆறாவது முறையாக நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி உருவாக்கித் தருவதற்கு மக்கள் சிறப்பான ஆதரவை தந்தார்கள். ஆட்சிக்கு வந்த பிறகு, உள்ளாட்சி தேர்தல் நடந்தது. அந்த உள்ளாட்சி தேர்தலில் மிகப் பெரிய வெற்றியை நாம் பெற்றிருக்கிறோம். அதற்குப்பிறகு நடைபெற்றிருக்கக்கூடிய இடைத்தேர்தல்கள், அந்த இடைத்தேர்தலிலும் மிகப் பெரிய வெற்றியை நாம் பெற்றிருக்கிறோம்.

தொடர்ந்து வெற்றியை பெறுவதற்கு காரணம் என்னவென்று கேட்டீர்கள் என்றால், நாம் ஆட்சி வருவதற்கு முன்பு, நாம் ஆட்சிக்கு வந்தால் என்னென்ன திட்டங்களை, என்னென்ன பணிகளை மக்களுக்கு செய்யப் போகிறோம் என்று வாக்குறுதிகளை, உறுதிமொழிகளை தந்தோம். அந்த அடிப்படையில் அதை நம்பி தமிழ்நாட்டு மக்கள் நமக்கு ஆதரவு தந்தார்கள். வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்த பிறகு அப்படிப்பட்ட உறுதிமொழிகளை, வாக்குறுதிகளை இன்றைக்கு படிப்படியாக நிறைவேற்றிக் காட்டியிருக்கிறோம். இன்னும் சொல்கிறேன்.

100க்கு 99 சதவீதம் இதுவரையில் நாம் தந்த வாக்குறுதியை நிறைவேற்றியிருக்கிறோம். மீதம் இருக்கிற 1 சதவீதம் வருகிற செப்டம்பர் 15ஆம் தேதி நூற்றுக்கு நூறு சதவிகிதம் நிறைவேற்றக்கூடிய திட்டமாகத்தான் “கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்” நிறைவேற்றப்பட இருக்கிறது என்பதையும் நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இப்படி எத்தனையோ திட்டங்கள் “கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்” மட்டுமல்ல, மகளிர் இலவசமாக பேருந்தில் பயணம் செய்வதற்கு “விடியல் திட்டம்” என்ற பெயரில் அதை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். அதற்குப் பின்னால், “புதுமைப் பெண் திட்டம்” பள்ளிப் படிப்பை முடித்து கல்லூரியில் அடியெடுத்து வைக்கும் அந்த மாணவிகளுக்கு மாதம் 1000 ரூபாய் வழங்கும் புதுமைப் பெண் திட்டம் அதையும் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். அதேபோல், “நான் முதல்வன்” திட்டம். இன்றைக்கு இருக்கக்கூடிய இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தரக்கூடிய, அவர்களுக்கு பயிற்சியை தரக்கூடிய, அந்தத் திட்டம் இன்றைக்கு செயல்பட்டு கொண்டிருக்கிறது.

வருகிற செப்டம்பர் மாதம் 15ஆம் தேதி அதாவது நாளை மறுநாள் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் அன்று கலைஞர் பெயரால் உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய “கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்”. அது காஞ்சிபுரத்தில், அவர் பிறந்த அந்த மண்ணில் அந்தத் திட்டத்தை நான் தான் தொடங்கி வைக்கப் போகிறேன். அப்படி தொடங்கி வைக்கப்படுகின்ற நேரத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒவ்வொரு நகரத்திலும், நம்முடைய அமைச்சர் பெருமக்கள் எல்லாம் கலந்து கொண்டு அந்தத் திட்டத்தை தொடங்கி வைக்க இருக்கிறார்கள். எவ்வளவு பேர் அந்தத் தொகையை பெற இருக்கிறார்கள் என்று சொன்னால், 1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் பேர் அந்தத் தொகையை வழங்குவதற்காக திட்டமிட்டி ருக்கிறோம். மாதம் 1000 ரூபாய் வழங்கப்படயிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

எப்படி தமிழ்நாட்டில் ஒரு சிறப்பான ஆட்சியை நீங்கள் எல்லாம் உருவாக்கி தந்தீர்களோ, அதேபோல வர இருக்கக் கூடிய நாடாளுமன்றத் தேர்தல், விரைவில் குறித்த நேரத்தில் வரப் போகிறதா அல்லது அதற்கு முன்பே வந்துவிடுமா என்ற ஒரு எண்ணம், சந்தேகம் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. முன்கூட்டியே தேர்தல் வந்தாலும், அதில் நாம் தான் 40க்கு 40, புதுவையும் சேர்த்து வெற்றி பெறப்போகிறோம். அதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

சமீபத்தில் கூட இடைத்தேர்தல்கள் நடந்திருக்கிறது. நாட்டில் இருக்கக்கூடிய பல்வேறு மாநிலங்களில் இடைத்தேர்தல்கள் நடந்திருக்கிறது. கேரளா – உத்தரபிரதேசம் – மேற்கு வங்கம் – ஜார்கண்ட் என்று இப்படி பல மாநிலங்களில் இடைத்தேர்தல்கள் நடந்திருக்கிறது. அப்படி நடைபெற்றிருக்கக்கூடிய இடைத்தேர்தல்களில் “இந்தியா” கூட்டணியில் இருக்கின்ற கட்சிகள் தான் வெற்றி பெற்றிருக்கிறது. பாரதிய ஜனதா கட்சி அங்கெல்லாம் தோல்வியை சந்தித்திருக்கிறது. அது மட்டுமல்ல, ஒரு சில மாதங்களுக்கு முன்பு, அருகில் இருக்கக்கூடிய கர்நாடக மாநில சட்டமன்ற பொதுத் தேர்தல் நடந்தது. அதிலும், பாரதிய ஜனதா கட்சி வீழ்த்தப்பட்டு அங்கே நம்முடைய கூட்டணியில் இருக்கக் கூடிய காங்கிரஸ் கட்சியே மிகப் பெரிய வெற்றியைப் பெற்று ஆட்சியை பிடித்திருக்கிறது.

### ‘இந்தியா’ கூட்டணி வென்றால்தான் இந்தியா காப்பாற்றப்படும்!

இன்னும் சொல்லவேண்டும் என்று சொன்னால் பி.ஜே.பி. ஆட்சிக்கு வந்த பிறகு, இந்த ஏழு ஆண்டுகளில் எங்கெங்கெல்லாம் தேர்தல் நடந்திருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். தமிழ்நாடு கேரளா – பீகார் மேற்கு வங்கம் – ஜார்கண்ட் – ஒடிசா – சத்தீஸ்கர் தெலங்கானா – ஆந்திரா – பஞ்சாப் – டெல்லி – ராஜஸ்தான் என்று இங்கெல்லாம் தேர்தல்கள் நடந்திருக்கின்றன. அங்கெல்லாம் நடைபெற்ற தேர்தல்களில் ஒன்றியத்தில் இருக்கக்கூடிய பாரதிய ஜனதா கட்சி தோற்கடிக்கப்பட்டு அங்கெல்லாம் நம்முடைய எதிர்க்கட்சிகளாக இருக்கக்கூடியவர்கள் தான் வெற்றி பெற்றிருக்கிறார்கள். மக்கள் தயாராக இருக்கிறார்கள். ஏற்கனவே “இந்தியா” கூட்டணி அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. பீகாரில் முதல் கூட்டத்தை நடத்தி, இரண்டாவதாக கர்நாடகாவில் நடத்தி, மூன்றாவதாக மும்பையில் நடத்தி, அந்தக் கூட்டத்தின் மூலமாக பல்வேறு முடிவுகள் எல்லாம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படி அமைக்கப்பட்டிருக்கக் கூடிய “இந்தியா” கூட்டணி வெற்றி பெற்றால் தான் இந்தியாவை நாம் காப்பாற்ற முடியும்.

இந்தியாவை காப்பாற்றியாக வேண்டும் என்று சொன்னால், இந்தியா கூட்டணி வெற்றி பெற்றாக வேண்டும். எப்படி சட்டமன்றத் தேர்தலில் மிகப் பெரிய வெற்றியை தேடித் தந்தீர்களோ, அதேபோல கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மிகப் பெரிய வெற்றியை தேடித் தந்தீர்களோ, அதேபோல், இந்தியா முழுவதும் அந்த வெற்றியை தேடித் தரவேண்டும். வர இருக்கக் கூடிய நாடாளுமன்றத் தேர்தலில் புதுவையை சேர்த்து 40 இடங்களிலும், மிகப் பெரிய வெற்றியைத் தேடித் தாருங்கள், தேடித் தாருங்கள் என்று இந்த நேரத்தில் இந்த மணவிழா நிகழ்ச்சியில் உங்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

மணக்கோலம் பூண்டிருக்கக்கூடிய நம்முடைய மணமக்கள் வாழ்க்கையில் எல்லா நன்மைகளும் பெற்று புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் எடுத்துச் சொல்லியிருக்கக்கூடிய “வீட்டிற்கு விளக்காய், நாட்டிற்கு தொண்டர்களாய்” இருந்து வாழ்ந்திட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இங்கே மணக்கோலம் பூண்டிருக்கக் கூடிய மணமக்களை நான் அன்போடு கேட்டுக் கொள்ள விரும்புவது, ஒரே ஒரு வேண்டுகோள் தான். உங்களுக்கு பிறக்கின்ற குழந்தைகள் எந்த குழந்தையாக இருந்தாலும், அது ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும், அழகான தமிழ்ப் பெயர்களை சூட்டுங்கள் என்று ஒரு அன்பான வேண்டுகோளை மாத்திரம், உரிமை கலந்த அந்த வேண்டுகோளை எடுத்து வைத்து மணக்கோலம் பூண்டிருக்கக்கூடிய மணமக்கள் வாழ்க! வாழ்க! வாழ்க! என்று வாழ்த்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### அண்ணா பிறந்த நாளில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் தொடக்கம்!

**“கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்” மட்டுமல்ல, மகளிர் இலவசமாக பேருந்தில் பயணம் செய்வதற்கு “விடியல் திட்டம்” என்ற பெயரில் அதை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். அதற்குப் பின்னால், “புதுமைப் பெண் திட்டம்” பள்ளிப் படிப்பை முடித்து கல்லூரியில் அடியெடுத்து வைக்கும் அந்த மாணவிகளுக்கு மாதம் 1000 ரூபாய் வழங்கும் புதுமைப் பெண் திட்டம் அதையும் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். அதேபோல், “நான் முதல்வன்” திட்டம். இன்றைக்கு இருக்கக்கூடிய இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கித் தரக்கூடிய, அவர்களுக்கு பயிற்சியை தரக்கூடிய, அந்தத் திட்டம் இன்றைக்கு செயல்பட்டு கொண்டிருக்கிறது.**

ஒன்றிய அரசின் ஊழல், முறைகேடுகள், திட்டமிட்டுப் பரப்பும் அவதூறுகளை மக்களிடம் கொண்டு சென்று

# பா.ஜ.க.வின் திசை திருப்பும் தந்திரத்தை முறியடிப்பீர்!

## தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, செப். 15 -**

**“ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஊழல் முறைகேடுகள், ஜனநாயக விரோத செயல்பாடுகள், மாநில உரிமை பறிப்பு நடவடிக்கைகள், வெறுப்பரசியலின் தீமைகளைப் பற்றித் தீவிர பரப்புரையில் ஈடுபட்டு இந்தியா கூட்டணிக்குப் பலம் சேர்ப்பீர்!” எனவும் “பொய், புரட்டு, திட்டமிட்ட அவதூறு என பா.ஜ.க.வினர் செய்யும் திசைதிருப்பும் தந்திரத்தை உணர்ந்து முறியடிப்பீர் - கவனச் சிதறலுக்கு இடம் தராதீர்கள்!” என்றும் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**



கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

திராவிடர் கழகத் தலைவர் மானமிகு ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் ஒரு முக்கியமான கருத்தை நேற்றைய தினம் நடைபெற்ற கூட்டத்தில் வெளிப்படுத்தி இருக்கிறார்கள். ‘பா.ஜ.க.வின் ஊழல்களைப் பற்றித்தான் நாம் அதிகம் பேச வேண்டும். அதைப் பேசி விடக் கூடாது என்பதற்காகத்தான் சனாதனத்தைப் பற்றி அந்தக் கட்சி பேசித் திசைதிருப்பிக் கொண்டு இருக்கிறது” என்று மானமிகு ஆசிரியர் அவர்கள் குறிப்பிட்டுள்ள கருத்து மிக மிகச் சரியானது. அதனையே திராவிட முன்னேற்றக் கழக முன்னணியினரும் கூட்டணிக் கட்சித் தலைவர்களும் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மக்கள் கவனத்தை திசைதிருப்பும் பா.ஜ.க.!**

எந்த ஒரு பிரச்சினையையும் உள் நோக்கத்தோடு திரித்து, ஊடகங்களின் துணையோடு பூதாகரமாக ஆக்கி, நாட்டின் அசலான பிரச்சினைகளை மறக்கடிக்கச் செய்து, மக்கள் கவனத்தைத் திசை திருப்புவதில் பா.ஜ.க.வினர் வல்லவர்கள் என்பதை நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள்.

**நாட்டில் நடைபெறும் - பற்றி எரியும் எந்தப் பிரச்சினைக்கும் வாய்திறக்காத மாண்புமிகு பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், ஒன்றிய அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டி ‘சனாதனம் குறித்து தக்க பதில் சொல்லுங்கள்’ என்று ஒன்றிய அமைச்சர்கள் அனைவருக்கும் உத்தரவு போடுகிறார் என்றால், அதன் மூலமாக குளிர்காய நினைக்கிறார் என்றே பொருள். சனாதனம் பற்றி ஒன்றிய அமைச்சர்களில் யாராவது ஒருவர் தினந்தோறும் எதையாவது வம்படியாகப் பேசி, அதையே விவாதப் பொருளாக ஆக்கி மக்கள் கவனத்தைத் திசைதிருப்பப் பார்க்கிறார்கள்; பா.ஜ.க. ஆட்சியின் தோல்விகளை மறைக்கும் தந்திரத்துக்கு நம்மவர்கள் இடமளித்துவிடக் கூடாது.**

**பிரதமர் மோடி சொன்ன எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை!**

2014ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தேர்தலுக்கு முன்னால் கொடுத்த எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை. இந்திய நாட்டின் ஏழை - எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவில்லை; வேலை வாய்ப்புகளை உருவாக்கி இளைஞர்களின் வாழ்க்கையில் ஒளி ஏற்றவில்லை; ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைத்து, சர்வாதிகார ஒற்றை ஆட்சி என்ற ஆபத்தான பாதைக்கு நாட்டை அழைத்துச் செல்கிறார்கள். நாளும் வெறுப்பரசியலை ஊக்குவித்து, இந்தியத் திருநாட்டின் அமைதிக்கு ஊறு விளைவிக்கிறார்கள். மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்ட பா.ஜ.க. அரசு, அதை மறைக்க விளம்பர ஜாலத்தை அரங்கேற்றிக் கொண்டிருக்கிறது. அதைத்தான் நாம் அனைவரும் முனைப்பாக பரப்புரை செய்தாக வேண்டும்.

> **“இந்தியா கூட்டணி உருவான பிறகு பா.ஜ.க.வுக்கு நடுக்கம் வந்துவிட்டது. பா.ஜ.க. ஆட்சியின் நாட்கள் எண்ணப்படுகின்றன; அவர்களுக்கு முடிவுரை எழுதி இந்தியா கூட்டணியை அரியணையில் அமர்த்த மக்கள் தயாராகி விட்டார்கள் என்பதை உணர்ந்த பா.ஜ.க. ஆட்சியாளர்கள், இப்போது நாட்டின் பெயரையே மாற்றத் துணிந்து விட்டார்கள்.”**

வெளிநாட்டில் பதுக்கி வைக்கப்பட்ட கருப்புப் பணத்தை முழுமையாக மீட்பேன் என்றார். மீட்டாரா? இல்லை! மீட்கப்பட்ட கருப்புப் பணத்தை இந்திய மக்கள் அனைவருக்கும் 15 லட்சம் ரூபாயாகத் தருவேன் என்றார். தந்தாரா? இல்லை!

ஆனால், ‘தேர்தலுக்காகச் சும்மா சொன்னோம்’ என்று உள்துறை அமைச்சரே ஒப்புக் கொண்டார். தற்போது வெளி நாடுகளில் பதுக்கப்படும் இந்தியர்களின் பணம் பன்மடங்கு அதிகரித்துவிட்டது.

**உழவர்களை ஓராண்டுக்கு மேல் போராட வைத்த பா.ஜ.க. அரசு!**

உழவர்களின் வருமானத்தை இரண்டு மடங்கு ஆக்குவோம் என்றார்கள். இரண்டு மடங்கு ஆனதா? இல்லை! இருந்த வருமானத்தையும் பறிக்க மூன்று வேளாண் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதனை எதிர்த்து ஒன்றரை ஆண்டுகாலம் டெல்லிக்கு வந்து உழவர்கள் போராடினார்கள்.

ஆண்டுக்கு இரண்டு கோடி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தருவேன் என்று வாக்குறுதி அளித்தார் பிரதமர். ஆனால் எந்த வேலைவாய்ப்பும் ஏற்படுத்தித் தரவில்லை. இளைஞர்களுக்கான எந்த முன்னெடுப்பும் இல்லை. அதிகப்படியான இளைஞர்கள் வேலைவாய்ப்பை இழந்ததும் இவரது ஆட்சிக் காலத்தில்தான்.

2022-ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில் அனைத்துக் குடும்பத்துக்கும் சொந்த வீடு கட்டித் தருவேன் என்று சொன்னார். சொந்த வீடு இல்லாதவர் இல்லையா? இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

**ஏழு திட்ட முறைகேடுகள் - ஊழல்கள்! பா.ஜ.க. கஜானா நிரம்பியது!**

**ஆனால் பா.ஜ.க. என்ற கட்சியின் கஜானா மட்டும் அதிகமாக நிரம்பியது. ஊழல்களும், முறைகேடுகளும் மட்டுமே நடந்தன. ரஃபேல் ஊழலும், அதானி முறைகேடுகளும் உலக சமுதாயத்தின் முன்னால் இந்தியாவைத் தலைகவிழ வைத்துவிட்டன.**

- **பாரத்மாலா திட்டம்**
- **துவாரகா விரைவுப் பாதைக் கட்டுமானத் திட்டம்**
- **சுங்கச் சாவடி கட்டணங்கள்**
- **ஆயுஷ்மான் பாரத் திட்டம்**
- **அயோத்தியா மேம்பாட்டுத் திட்டம்**
- **கிராமப்புர அமைச்சகத்தின் ஓய்வூதியத் திட்டம்**
- **எச்.ஏ.எல். விமான வடிவமைப்புத் திட்டம்**

**ஆகிய ஏழு திட்டங்கள் குறித்து சி.ஏ.ஜி. அறிக்கை வெளியாகி இருக்கிறது.**

**இந்த ஏழு திட்டங்களிலும் முறைகேடு நடந்துள்ளன, விதிமீறல்கள் நடந்துள்ளன, நிதியைக் கையாள்வதில் மோசடிகள் அரங்கேறியுள்ளன என்பதை இந்த அறிக்கை அம்பலப்படுத்தி இருக்கிறது. இதன் மொத்த மதிப்பு 7.50 லட்சம் கோடி ரூபாய் என்று சொல்லப்படுகிறது. இந்த இமாலய ஊழல் முகத்தை மறைப்பதற்காக சனாதனப் போர்வையைப் போர்த்திப் பதுங்கிக் கொள்ளப் பார்க்கிறது பா.ஜ.க.**

**பற்றி எரியும் மணிப்பூர்! கண்டுகொள்ளாத ஒன்றிய அரசு!**

நான்கு மாதகாலமாக மணிப்பூர் பற்றி எரிகிறது. அதனை அணைக்க முதுகெலும்பு இல்லாத அரசாக ஒன்றிய பா.ஜ.க. அரசு இருக்கிறது. இரண்டு நாட்களுக்கு முன்பு கூட துப்பாக்கிச் சூடு நடந்துள்ளது. இதனை எல்லாம் பேசவிடாமல் திசை திருப்ப பா.ஜ.க. முயற்சிக்கிறது.

**நடந்து முடிந்த இடைத் தேர்தல்களில் இந்தியா கூட்டணி மாபெரும் வெற்றி!**

மாநிலங்களின் அதிகாரத்தை பறித்து மாநில மக்களின் உணர்வுகளை அவமதிக்கிற மக்கள் விரோத ஆட்சி ஒன்றியத்தில் நடந்து வருகிறது. எதிர்க்கட்சிகளை அச்சுறுத்துவது, ஆட்சிகளைக் கவிழ்ப்பது, ஒற்றை ஆட்சி என சர்வாதிகாரப் பாதைக்கு நாட்டை அழைத்துச் செல்வது என்பது உள்ளிட்ட ஆபத்தான முயற்சிகளைப் பட்டியலிட்டு மக்களிடம் சொல்ல வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது.

### இமாலய ஊழல் முகத்தை மறைப்பதற்கு சனாதனப் போர்வை போர்த்தி பதுங்குகிறது பா.ஜ.க.

இந்தியா கூட்டணி உருவான பிறகு பா.ஜ.க.வுக்கு நடுக்கம் வந்து விட்டது. பா.ஜ.க. ஆட்சியின் நாட்கள் எண்ணப்படுகின்றன; அவர்களுக்கு முடிவுரை எழுதி இந்தியா கூட்டணியை அரியணையில் அமர்த்த மக்கள் தயாராகி விட்டார்கள் என்பதை உணர்ந்த பா.ஜ.க. ஆட்சியாளர்கள், இப்போது நாட்டின் பெயரையே மாற்றத் துணிந்து விட்டார்கள்.

நடந்து முடிந்த இடைத்தேர்தல்களில் ‘இந்தியா’ கூட்டணிக் கட்சிகள் மகத்தான வெற்றியைப் பெற்றுள்ளார்கள். இந்தியா முழுமைக்குமான வெற்றிக்கான அடை யாளமாக இது அமைந்துள்ளது.

பா.ஜ.க.வின் ஊழல் - மதவாத - எதேச்சாதிகார முகத்தை அம்பலப்படுத்தி, நடக்க இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் அக்கட்சியைத் தோற்கடிப்பதன் மூலம், நாட்டையும் ஜனநாயகத்தையும் பாதுகாப்பது என்ற உன்னதமான இலக்கில் வெல்ல அர்ப்பணிப்போடு செயல்படுவோம் - எந்த கவனச் சிதறலுக்கும் இடமளித்துவிடக் கூடாது என்று அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

## பேரறிஞர் அண்ணா 115-வது பிறந்த நாள்!

## கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் - கழக முன்னணியினர் சென்னை, வள்ளுவர் கோட்டத்திற்கு அருகே உள்ள பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிக்கின்றனர்.

பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 115வது ஆண்டு பிறந்த நாளான இன்று (15.9.2023 - வெள்ளிக்கிழமை) காலை 8.00 மணி அளவில் சென்னை, வள்ளுவர் கோட்டம் அருகே உள்ள பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்கு கழக இளைஞர் அணிச் செயலாளர் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி மற்றும் அமைச்சர்கள் மா. சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு உள்ளிட்ட கழக முன்னணியினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்கள்.

கழக மாநில அமைச்சர் பெருமக்கள், முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மகளிர் தொண்டர் அணி, கலை,இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவ அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல்தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய அனைத்து அணி நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நாள் : 12 - 09 - 2023.

**நே.சிற்றரசு,**
செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

---

# அண்ணா, ஓர் அதிசய ஆளுமை !



**இ**ன்று செப்டம்பர் 15 - அறிஞர் அண்ணா பிறந்த நாள் !

அவர் பிறந்து வளர்ந்து இந்தத் தமிழ் அவனியெங்கும் உலவியதால்தான், எழுதியும் பேசியும் உணர்த்தியதால்தான், தமிழர் தாம் யார் என்ற தமது பின்புலத்தை அறிந்திடலாயினர்.

அண்ணா - ஈராயிரம் ஆண்டு தமிழினச் சரித்திரத்தின் தனிப் பெரும் தரவுகளையும், பரிமாணங்களையும், தாம் வாழ்ந்த அறுபதே ஆண்டுகளுக்குள், உலகத்தின் பல்வேறு இனங்களின் தோற்றம் முதல் துலங்கியது வரை ஒப்பிட்டு, இடைவிடாமல் எடுத்துரைத்தார், ஏடெடுத்து எழுதினார், தமிழர்களைத் தட்டி எழுப்பினார்.

அதுவரை அறிதுயில் நிலையில் அடங்கி ஒடுங்கிக் கிடந்தவர்கள், துயில் துடைத்தெழுந்து, சுயமரியாதை வெளிப்பட வும், பகுத்தறிவு பளிச்சிடவும், புதிய பாதை - பொருள் புரிந்து பயணம் மேற்கொள்ளத் தொடங்கினர். அண்ணா வடிவமைத்த முன்னேற்றப் பாதையில் இன்று நடை போடுகிறது நான்காம் தலைமுறை!

**இன்னும் ஆண்டுகள் ஓராயிரம் ஆயினும், அண்ணாவின் காந்தக்குரல், தமிழ்நாட்டின் செவிகளில் ஒலித்துக்கொண்டே இருக்கும்; அவருடைய எழுத்துகள், காலம் செதுக்கிவைத்த கல்வெட்டுகளாக, கன்னித் தமிழினத்திற்குத் திசைகாட்டும் கலங்கரை விளக்கமாக நிலைத்து ஓங்கி நிற்கும்! கடைசித் தமிழனின் உருவத்திலும், உள்ளத்திலும் அண்ணா, காட்சியாக ஒளிர்வார்!**

தமிழ்நாட்டுக்கான திசையைத் தீர்மானித்து, பாதையையும் பயணத்தையும் வரைவதற்குமுன் அண்ணா, பிறநாட்டு அறிஞர்களின் சமூகப் பணிகளைப் பற்றியும், அவர்கள் உருவாக்கிப் பறைசாற்றிப் பின்பற்றிய இலட்சியங்கள் - தத்துவங்கள் குறித்தும், கசடறக் கற்றுக் கரை கண்டார் !

“விசித்திர வைதீகர்களை வீதி சிரிக்கச் செய்த சாக்ரடீஸ், வைதீகத்தின் மடமையை விரட்டிய வால்டேர், மக்கள் மன்றத்திற்கு மதிப்பளிக்க வேண்டும் என்று வாதாடிய ரூசோ, வேதப் புத்தகத்தை விற்று விபச்சார விடுதிக்குப் பணம்தரும் விபரீதத்தைக் கண்டித்த ஜான் விக்லிஃப், ஆண்டவன் பெயரால் நடக்கும் அட்டூழியங்களை அம்பலப் படுத்திய மார்ட்டின் லூதர், சீனரின் சிறுமதியைப் போக்கப் பாடுபட்ட சன்யாட் சன், துருக்கியின் மதி தேய்வதைத் தடுத்த கமால் பாட்சா, மதத்தின் பெயரால் மக்களை வதைப்பதை எதிர்த்த இங்கர்சால், பேதமையைப் போக்கும் பணியை மேற்கொண்ட பெர்னாட்ஷா, பொருளாதார ஏற்றத் தாழ்வைப் புதைகுழிக்கனுப்பிப் பொதுவுடைமையைக் கண்ட காரல் மார்க்ஸ்”

இவர்களை மட்டுமின்றி, பிளேட்டோ, அரிஸ்டாட்டில், சிசரோ - மாக்கிய வெல்லி, ஜான் லாக், ஜான் ஸ்டுவர்ட் மில், கவுடில்யர் போன்ற அரசியல் சிற்பிகளுடன், திருவள்ளுவரையும், அண்ணல் காந்தி அடிகளையும் - உலகச் சரித்திரத்தையும், நாகரிக வளர்ச்சியையும், பூகோள அடிப்படைகளையும் - பண்டைத் தமிழ் இலக்கியங்களையும், ஆங்கில இலக்கிய நீரோட்டத்தையும் கற்றார் அண்ணா. கற்றதனைத்தையும், தமது தம்பிமார்கள் பெற வேண்டும் என்றெண்ணிச் சொன்னார்; எழுதினார்.

அண்ணா சொன்னதெல்லாம் - அவருடைய சொல்லும், பொருளும், புதிது புதிதாக இருந்தன.அந்தப் புதியனவற்றைப் புரிந்து, தெளிந்து பின்பற்றிய தம்பிமார்கள், அறிவியக்கத்தின் ஆரம்பக் கதிர்களாய் ஒளி உமிழ்ந்தனர்.

**“நைல் நதிக் கரையோரத்தில் ஆண்டனி போன்ற வீரர்கள் பலர் இருந்தனர். அவர்கள் வெற்றிகள் பல கண்டனர்.ஆனால் அந்த வெற்றிகளை யெல்லாம் கிளியோபாட்ரா போன்ற கட்டழகிகளின் காலடிகளிலேயே கொட்டினர்.அடுத்து கங்கைக் கரை; அங்கேயும் சந்திரகுப்தன், அசோகன் போன்ற மன்னர்கள் களம் பல கண்டு வெற்றி பல குவித்தனர். அந்த வெற்றிகளை எல்லாம் சாணக்கியன் போன்றவர்களின் காலடிகளில் கொட்டி ஏமாந்தனர். காவிரிக் கரையில் இராஜ ராஜனும், இராஜேந்திரனும் தாம் பெற்ற வெற்றிகளைத் தஞ்சைப் பெரியகோயிலாக்கினர். கங்கைகொண்ட சோழபுரமாக உருவாக்கினர்.”**

என்று பல்கலைக் கழக மாணவர்களிடையே வரலாற்றில் ஆற்றங்கரைகளைப் பற்றிப் பேசி, மேலும் மேலும் படித்தறிய வேண்டும் என்ற ஆவலைத் தூண்டினார்.

**“திராவிடக் கவிஞர்கள், அதல சுதல பாதாளமெனப் பொய்யுரைகளை எழுதியதில்லை.கண்ட கண்ட உருவெடுத்தார் கடவுளெனக் கதை தீட்டியதில்லை.காலடியில் புரண்டு தொழுதல் கடாட்சம் என்று கூறவில்லை.ஒன்றே குலமும், ஒருவனே தேவனும் என்றனர்.திராவிடர் உயிர்வாழ, மானத்தை இழந்ததில்லை; சூது சூழ்ச்சியை ஆயுதமாகக் கொண்டதில்லை; சுதந்திர வாழ்வுக்காக உயிரையும் தந்தனர்” என்று திராவிடத்தின் பெருமையை எழுதினார் அண்ணா.**

“நமது நாடு, முல்லைக் காடு; இன்று முட்புதராகிக் கிடக்கிறது! அது மீண்டும் பூங்கா ஆக வேண்டும் ; ஆரிய மாயையிலிருந்து விடுபட்ட அன்றே அறியாமையிலிருந்து நம் மக்கள் விடுபடுவர்!” என்று எச்சரிக்கை செய்தார் அண்ணா. அதற்காக அறிஞர்கள் தந்த அடுக்கடுக்கானஅரிய உண்மைகளைத் தொகுத்துக் கொடுத்தார். **“ஏ, சோர்வுற்ற தமிழ்நாடே! வீறு கொண்டெழு!”** என்று அழைப்பு விடுத்தார்!

அண்ணா, பலதுறைப் பேரறிஞராக விளங்கியவர்.சொக்க வைக்கும் சொற்பொழிவாளர், அதே நேரத்தில் அறிவூட்டும் ஆசான் ; பல பதிப்புகளைப் பெற்ற, முப்பதுக்கும் மேற்பட்ட, நூல்களை எழுதியவர்; 50களில் அதிகமாக விரும்பிப் படிக்கப்பெற்ற நூலாசிரியர்; நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளையும், பல நாவல்களையும் படைத்தவர்; தமிழ் உரைநடை வரலாற்றில், திருப்புமுனை அண்ணா; **‘எதையும் தாங்கும் இதயம்’, ‘எங்கிருந்தாலும் வாழ்க’, ‘மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு’, ‘ கடமை கண்ணியம் கட்டுப்பாடு**’ என்பன போன்ற பல நூறு தொடராக்கங்களை உருவாக்கியவர்; தமிழ் நாவல் உலகில், மறுமலர்ச்சி நாவலாசிரியராக ஏற்றுக் கொள்ளப்பட்டவர்; உரைநடை இலக்கியத்தில் மிக உயரத்தை எட்டியவர்; கருத்துப் பரப்புரைகளுக்குத் தமது நாடகங்களைத் துணையாகக் கொண்டிருந்தவர்; கல்கி அவர்களால் ‘தென்னாட்டு பெர்னாட் ஷா - இப்சன்’ என்று போற்றிப் புகழப்பட்டவர்;

அரிய ஆளுமையாலும், சீரிய சிந்தனைத் திறனாலும், விடுதலை, திராவிட நாடு, நம்நாடு,காஞ்சி முதலான இதழ்களுக்குச் செழுமை சேர்த்த இணையற்ற இதழாசிரியராக அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்; கடித இலக்கியத்தில், புதுமையை உருவாக்கியவர்; எழுத்தின் அனைத்து வகைகளையும் கையாண்டு, எழுத்தின் எல்லாப் பக்கங்களையும் எழில் மயமாக்கி, தமிழெழுத்தின் நவீன மூலவராகத் திகழ்ந்தவர் அறிஞர் அண்ணா!

தமது ஈடு இணையற்ற எழுத்தாலும், எவரையும் ஈர்த்திடும் பேச்சுத் திறத்தாலும், தகைமை மிக்க தம்பிமார்களின் தனிப் பெரும் துணையினாலும், தமிழ்நாட்டு மக்களின் ஏகோபித்த ஆதரவினைப் பெற்று, கட்சி தொடங்கிய பதினெட்டே ஆண்டுகளில் ஆட்சி அரியணைக்கு இட்டுச் சென்று, இந்தியத் துணைக் கண்டத்தில் முதல் முறையாக, ஒரு மாநிலக் கட்சியின் ஆட்சி என்ற மகத்துவத்தை நிலைநாட்டினார் அண்ணா; பாமர மக்கள் பாராளும் காலம் நெருங்கிவந்ததை நிரூபித்தார்.

**அரியணை ஏறிய குறுகிய காலத்திற்குள், சென்னை மாநிலத்துக்குத் “தமிழ்நாடு” என்ற பெயர் மாற்றம்; சுய மரியாதைத் திருமணத்திற்குச் சட்ட அங்கீகாரம்; மும்மொழித் திட்டத்தை அகற்றிவிட்டு, தமிழ் - ஆங்கிலம் மட்டும் என்ற இருமொழித் திட்டம் ; ஆகிய மூன்று முத்தான சாதனைகளை நிகழ்த்திக் காட்டினார் அண்ணா. அந்த மூன்று திட்டங்களும், அப்படியே நடைமுறையில் இன்றும் இருந்து வருகின்றன; இனி அவை என்றும் இருக்கும். அவை இருக்கும்வரை, அறிஞர் அண்ணா அவர்கள், நம்முடனே நற்றமிழ் நாட்டிலேயே இருப்பார்; இருந்து எந்நாளும் நமக்கு வழிகாட்டுவார் !**

**அண்ணா வாழ்க !**

★ ★ ★

**: கி.இராஜமாணிக்கம் :**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.9.2023) அவரது இல்லத்தில், கலைஞர் டி.வி.யில் பணியாற்றுகின்ற பா.முரசொலி – சா.தனலட்சுமி ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார். உடன் கலைஞர் தொலைக்காட்சி செய்திப் பிரிவுத் தலைவர் ப. திருமாவேலன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.9.2023) முகாம் அலுவலகத்தில், விகடன் குழுமத்தின் நிர்வாக இயக்குநர் பா. சீனிவாசன் சந்தித்து, சென்னை, கலைவாணர் அரங்கத்தில் 20.9.2023 அன்று விகடன் குழுமத்தின் சார்பில் நடைபெறவுள்ள "கலைஞர் 100 – விகடனும் கலைஞரும்" நூல் வெளியீட்டு விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார். இந்நிகழ்வின்போது ஆனந்த விகடன் ஆசிரியர் தி.முருகன், பொது மேலாளர் அப்பாஸ் அலி ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.9.2023) சென்னையில் நடைபெற்ற இயேசு அழைக்கிறார் அமைப்பின் தலைவர் டாக்டர் பால் தினகரன் அவர்களின் மகள் ஸ்டெல்லா ரமோலா – டேனியல் டேவிட்சன் ஆகியோரது திருமணத்தில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, சமூக நலன் மகளிர் உரிமைத் துறைஅமைச்சர் திருமதி. பி. கீதாஜீவன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.9.2023) முகாம் அலுவலகத்தில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன் சந்தித்து, தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களுக்கு பரமக்குடியில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கப்படும் என்று அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டார்.

### மக்களவை தேர்தலில் இந்துக்கள் வாக்கைப்பெற

# அமைச்சர் உதயநிதியின் சனாதன பேச்சை எதிர்க்கும் பா.ஜ. செயல் எடுபடாது!

### புதுவை முன்னாள் முதல்வர் நாராயணசாமி பேட்டி!

புதுச்சேரி, செப். 15-

காரைக்காலில் புதுச்சேரி முன்னாள் முதல்வர் நாராயணசாமி அளித்த பேட்டி: 'ஒரே நாடு ஒரே தேர்தல்' என்பது சாத்தியமானது அல்ல. இது ஜனநாயக நாட்டிற்கு ஒத்துவராது. 5 மாநில தேர்தல் தோல்வி பயத்தால், அந்த தேர்தல்களை ஒத்தி வைக்கும் வகையில் மோடி ஒரே நாடு, ஒரே தேர்தல் கருத்தை முன் வைத்து பேசுகிறார்.

இந்தியா கூட்டணி அமைந்த பிறகு, இந்தியா என்று சொல்வதற்கு பிரதமர் மோடிக்கு அச்சம் வந்து விட்டது. அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சனாதனம் குறித்து தமது கட்சியின் நிலைப்பாட்டை பேசியுள்ளார். அம்பேத்கர், பெரியார், அண்ணா, கலைஞர் ஆகியோர் சனா தனத்தை எதிர்த்து பேசியபோது எதிர்ப்பு தெரிவிக்காமல் அமைதியாக இருந்தவர்கள், தற்போது உதயநிதி பேசியதற்கு மட்டும் எதிர்ப்பு தெரிவிப்பதற்கு காரணம் வரும் மக்களவை தேர்தலில் இந்துக்களின் வாக்குகளை பெற வேண்டும் என்ற திட்டத்தில் பா.ஜ. செயல்படுகிறது. பா.ஜ.வின் இந்த செயல்பாடு எடுபடாது.

'புதுவை மாநிலத்தில் சட்டம், ஒழுங்கு சீர்கெட்டுள்ளது. ஊழல் மலிந்து விட்டது. பொதுப் பணித்துறையில் வெளிப்படையாக 25 சதவீதம் கமிஷன் கேட்கப்படுகிறது. முதல்வர் ரங்கசாமி அலுவலகத்தில் 5 புரோக்கர்கள் செயல்படுகின்றனர். ரெஸ்ட்ரோ பாருக்கு ரூ.20 லட்சம் வாங்குகிறார் முதல்வர். உண்மை இல்லை என்றால் என் மீது நடவடிக்கை எடுக்கட்டும். கலைஞர் பெயர் என்ற காரணத்தால் காலை உணவு திட்டத்தை முன்னாள் துணைநிலை ஆளுநர் கிரண்பேடி எதிர்த்தார். இப்போது தமிழ் நாட்டை போல புதுச்சேரி அரசு பள்ளிகளில் காலை உணவு திட்டத்தை கொண்டு வர வேண்டும்.'

இவ்வாறு அவர் கூறினார்.



# திராவிட சினிமா

**23**

# சிலப்பதிகாரக் காவியம்!

■ வீ.மா.ச.சுபகுணராஜன்

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில் திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**

திரையில் அலைவந்து கரையில் கரையும் காட்சி புலனாகிறது. அந்தக் காட்சி நீண்டபடி இருக்க, 'இதுதான் இன்றைய பூம்புகார் காவிரிப்பூம் பட்டினம்' எனும் கலைஞரின் குரல் பின்னணியில் ஒலிக்கிறது.

"எத்தனை முறை கேட்டிருக்கிறது வற்றாத இன்பம் கொழிக்கும் வரலாற்று உலகம், தேன்மாரி பொழியும் தீந்தமிழ் இலக்கிய உலகம். காவிரி ஆறும் கடலும் முத்தமிட்டுக் கொள்ளும் இந்த இடத்திலேதான் அழகுத் திருநகராம் பூம்புகார் பட்டினம் அமைந்திருந்தது. இன்று கடலுக்கடியில் மூழ்கிக் கிடக்கிறது" எனத் தொடர்கிறது அவரது வெண்கலக் குரல்.

"ஆனால், பூம்புகார் நகரத்தின் புகழும் பெருமையும் யாராலும் ஊகிக்கப்படவில்லை''. இப்போது திரையில் கலைஞரின் உரு நேர்முகமாகக் காட்சிப்படுகிறது. "அண்ணன் செங்குட்டுவன் இருக்க தம்பிக்குத்தான் பட்டமென்று நிமித்தகன் கூறிய ஆரூடத்தைப் பொய்யாக்குவதற்காகத் துறவறம் பூண்ட சேர இளவல் செந்தமிழ் வித்தகர் இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரம் இருக்கும்வரை பூம்புகாரின் புகழும் , மதுரையின் மாண்பும், வஞ்சியின் வீரமும் பொதுவாக தமிழகத்தின் செழிப்பும் சிறப்பும் தாழாது தாழாது தாழாது" எனப் பெருமிதத்தில் நெகிழ்கிறார் கலைஞர்.

தஞ்சை தரணியின் மைந்தன் கலைஞருக்கு, மதத்தால் முன்னிலைப் படுத்தப்பட்ட , கோயிலை அதிகார மையங்களாக ஆக்கிய தஞ்சை பெரிய கோயிலோ, மன்னன் ராஜராஜனோ மனங்கவரவில்லை. மாறாகப் பூம்புகாரும், மன்னரல்லாத வணிகர் குல கோவலனும் கண்ணகியுமே கவர்ந்தனர். அவர்களது காதை எழுதிய இளங்கோவடிகளும், கண்ணகிக்கு சிலை வடிக்க இமயம் வென்ற சேரன் செங்குட்டுவனுமே கவனத்தை ஈர்த்தனர்.

## திராவிடத் தமிழ் அடையாளங்கள்

கலைஞர் திரைப்படங்கள் குறித்த நினைவுத் தடத்தில் இந்த விதமாக, கலைஞர் அவர்கள் தாம் பணியாற்றிய படங்களை அறிமுகம் செய்யும் காட்சி ஆழமாகப் பதிந்துள்ளது. அநேகமாக தமிழ்த் திரைப்படங்களில் இந்த பாணியைக் கையாண்டது கலைஞர் அவர்களே என்றே தோன்றுகிறது. அதன் தொடக்கமாக 'பூம்புகார்' இருந்திருக்கலாம்.

திராவிட இயக்கத்தின், குறிப்பாக தி.மு.க.வின் பெண்ணியம் போற்றும் தொன்மங்களாக கண்ணகியும் மாதவியும் இருந்தனர். தமிழ்க் காப்பியங்கள் சிலப்பதிகாரமும் மணிமேகலையும், மகாபாரதத்துக்கும், ராமாயணத்துக்கும் மாற்றாக முன் வைக்கப்பட்டன. பாரதப் பாஞ்சாலிக்கும், ராமாயணச் சீதைக்கும் மாற்றாக தமிழின் பெருமைக்குரியவர்களாக கண்ணகியும், மாதவியும் முன்மொழியப்பட்டனர். இருவரையும் ஒரே தளத்தில் கற்பின் சின்னங்களாகப் போற்றிய அரசியல் முக்கியமானது.

பாரதத் தாய்க்கு மாற்றாக, தமிழ்த்தாய், சீதைக்கு மாற்றாகக் கண்ணகி எனும் முன்மொழிவுகள் திராவிடத் தமிழ் அடையாளம் உருவாக்க அரசியலின் அடிப்படைகள். அதிலும் ' சிலப்பதிகாரக் காப்பியம் 'தமிழ் கூறும் நல்லுலகின் மிக முக்கியமான பண்டைப் பேரரசுகளான சேர, சோழ, பாண்டிய மண்டலங்களை இணைத்த காவியம்.

## பரந்து விரிந்த காவியம்

கண்ணகி காவிரிப் பூம்பட்டினம் தொடங்கி, மதுரை வழியாக வஞ்சி சென்ற தடம் குறித்து பற்பல ஆய்வுகள், அவற்றை இன்றும் சிலப்பதிகாரம் விவரிக்கும் நிலப்பண்புகளைக் கொண்டே கண்டடையும் வண்ணம் உள்ளன என்கின்றன. அது மட்டுமில்லை, சமஸ்கிருதக் காப்பியங்கள் போன்று ஒரு குறுகிய நிலப்பரப்பில் நிகழ்ந்ததாக இல்லாமல், பண்டைத் தமிழ் நிலப்பரப்பின் பரந்து விரிந்த வெளிமுற்றத்தையும் தனது இயக்க வெளியாகக் கொண்டது என்பது சிறப்பு.

எனவேதான் கலைஞர், 'தமிழ் மீதுள்ள அன்பால், பற்றால், பாசத்தால், தமிழ் காத்து தமிழரின் நலன் காக்கும் தொண்டர்க்குத் தொண்டனாகிய நான், மணங் கமழும் தமிழே... மனங்கவரும் தாயே... இன்ப மொழியே... தித்திக்கும் தீந்தமிழ்ச் சாறெடுத்துக் கற்பனைத் தேன் கலந்து கன்னித் தமிழ்க் காவியமாம் 'பூம்புகார்' எனும் திரை ஓவியத்தை உங்கள் முன் வைக்கின்றேன்' எனத் தொடர்கிறார்.

ஓரிரு வரிகளில் சேரன் செங்குட்டுவனும் இளங்கோவடிகளும் சந்திப்பது வரை அவர் குரலில் கதை தொடர, புலவர் ஒருவர் கூற இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை எழுதத் தொடங்கியதும் கதை மாந்தர் பேச்சுத் தொடங்குகிறது. அதாவது ஒரு கதைசொல்லியின் பாத்திர மேற்று 'பூம்புகார்' திரைக்கதையைப் பேசுகிறார் கலைஞர்.

> **'கண்ணகி' மற்றும் 'பூம்புகார்' ஆகிய திரைப்படங்களின் ஒப்பீடு திராவிட சினிமா முறையான புரிதலை, அதன் செழுமையை அறிந்துகொள்ள உதவும்.**

## இரண்டு கண்ணகிகள்

தமிழ்த் திரைப்பட வரலாற்றில் ஒரே கதை இரண்டு அல்லது அதற்கும் மேலான முறைகள் திரைப்படங்களாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. கண்ணகி கதையும் இதே போல இரண்டு முறை தயாரிக்கப்பட்டது. 1940-களில் பி.யு.சின்னப்பா, கண்ணாம்பா நடிப்பில் உருவானது 'கண்ணகி' திரைப்படம். பூம்புகார் அந்த வகையில் இருபது ஆண்டுகள் கழித்து வந்த கண்ணகி கதைதான்.

படங்கள் - உதவி -: - ஞானம்





இங்கே நான் 'பூம்புகார்' கதைச்சுருக்கம் சொல்ல முயலவில்லை. காரணம் சிலப்பதிகாரமும், கோவலன் கண்ணகி கதையும் அறியாதவர் இருக்க மாட்டார்கள் என்ற எண்ணம். ஆனால் முதல் 'கண்ணகி'யின் கதைக் களம் என் நம்பிக்கையைச் சிதறடித்து விட்டது. இத்தனைக்கும் எஸ்.வி.வெங்கட்ராம் இயக்கிய அந்த 'கண்ணகி'க்கு திரைக்கதை, வசனம் எழுதியது நம் மரியாதைக்குரிய இளங்கோவன் அவர்கள். அதுவரை பேசப்பட்டு வந்த 'அவா இவா' மொழிக்கு விடைகொடுத்தவர்.

## சமணக் காவியத்தை இந்துமயமாக்கல்

ஆனால் ' கண்ணகி' கதைக்களம் விபரீதமானது. மாசாத்துவனுக்கு வழங்கப்பட்ட மந்திரக்கனியின் சக்தியால் பராசக்தியே மனிதப்பிறவியாகக் கண்ணகியாகப் பிறக்கிறாள். கோவலன், கண்ணகியின் மணம் முடிந்து நடக்கும் சாந்திமுகூர்த்த விழாவில், நடனமாடி, கோவலனை வசியம் செய்கிறாள் நீலியின் மறுபிறப்பான மாதவி.

நாணமற்ற தாசியாகச் சித்தரிக்கப்படும் மாதவி மன்னனின் சூழ்ச்சிக்கு இணங்கி, மன்னன் அளவுக்குப் பொருள் கொண்ட கோவலனை ஏமாற்றிப் பொருளைப் பறித்து அவனை வறியவனாக்குகிறாள். கோவலன் சிவனடியார் கவுந்தி வழிகாட்டுதலில், மதுரை சென்று கொலையாகிறான். 'சக்தி' கண்ணகி தனது மாயத்தால் கோவலனை ஒருநொடி உயிரூட்டி உரையாடி விட்டு சாக விடுகிறாள். இறுதியில் தன் கணவன் சிவனிடம் ஐக்கியமாகிறாள். அதாவது, அப்பட்டமாகச் சமணக் காவியம் சிலப்பதிகாரத்தை இந்து அவதாரக் கதையாக்கும் அடாவடி நடந்திருக்கிறது.

## அனல் கக்கிய கண்ணகி

'கண்ணகி' மற்றும் 'பூம்புகார்' ஆகிய திரைப் படங்களின் ஒப்பீடு திராவிட சினிமா முறையான புரிதலை, அதன் செழுமையை அறிந்துகொள்ள உதவும்.

கலைஞரின் திரைக்கதையில் கவுந்தி அடிகளார் சமணத் துறவி. அவர் பாத்திரம் அறிமுகம் தொடங்கி, மதுரையில் மாதவி பொறுப்பில் விட்டுச் செல்வது வரையான காட்சிகள் ஒரு திரைக்கதை அமைப்பின் சிறப்புகள். மாதவியைப் பிரிந்து கோவலன் வரும்போது அந்தக் கணீர் குரல் 'காலம் கற்பித்த பாடத்தின் அடிதாங்க முடியாமல் தப்பித்து வந்தானம்மா' என ஒலிக்கிறது. மதுரைப் பயணத்தின் போது, **'திருக்குறளை மறவாதே, திசை தவறிப் போகாதே. வாழ்க்கை எனும் ஓடம் வழங்குகின்ற பாடம் மறக்கவொண்ணா வேதம்'** (பாடல், கலைஞர்) என ஒலிக்கிறது.

'பூம்புகார்' திரைப்படத்தின் அற்புதமான வசனங்களைப் பட்டியலிட பத்தி போதாது, புத்தகம் வேண்டும். அதிலும் பாண்டியன் அவையில், குற்றம் சுமத்தப்பட்ட குற்றவாளியான பாண்டியன் நெடுஞ்செழியனின் தீர்ப்பு வழங்கும் தகுதியை மறுத்து, அவைக்கு அந்தப் பொறுப்பை வழங்கி, அனல் கக்குகிறாள் கண்ணகி. சுதர்சனம் இசையில் ப.நீலகண்டன் இயக்கத்தில் வெளிவந்தது பூம்புகார். எஸ்.எஸ்.ராஜேந்திரன், விஜயகுமாரி, நாகேஷ், மனோரமா ஆகியோர் நடித்திருந்தனர்.

...படம் விரியும்

## ஊடகத்தைச் சந்திக்க அச்சம்!

G-20 நாடுகளின் உச்சிமாநாடு சமீபத்தில் டெல்லியில் நடைபெற்றதை அறிவோம். உலகத் தலைவர்கள் பங்கேற்ற அந்த மாநாட்டில் 'பாரத்' என விளம்பரம் தேடியது தனிக்கதை. ஆனால், மாநாட்டின் மூலம் 'இந்தியா, ஊடக சுதந்திரமற்ற நாடு' என்கிற அவமானத்தை வாங்கிக் கொடுத்துள்ளார் பிரதமர் மோடி.




G-20 மாநாட்டை முடித்துவிட்டு, வியட்நாமுக்குச் சென்ற அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அங்குப் பத்திரிகையாளர்களிடம் பேசுகையில், 'இந்திய பிரதமர் மோடியிடம், பத்திரிகையாளர்களுக்குச் சுதந்திரம் வழங்குவதுதான் வலுவான தேசத்தை உருவாக்க உதவும்' எனக் குறிப்பிட்டதாகச் சொல்லியிருக்கிறார். இதன் மூலம் இந்தியாவில் ஊடகங்களுக்கு உள்ள அச்சுறுத்தல், ஊடகத்தைச் சந்திக்க விரும்பாத ஆட்சியாளர்களின் அச்சம் ஆகியவை உலக அரங்கில் பேசுபொருளாகியுள்ளன.

G-20 மாநாட்டுக்கு வந்த அமெரிக்க ஊடகர்களுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் குறித்து, அமெரிக்காவில் கேலியான வீடியோக்கள் பரவி வருகின்றன. அமெரிக்காவில் ஊடகச் சந்திப்பில் கிடுக்கிப் பிடி கேள்விகளால் திணறிய பிரதமர் மோடிக்கு, G-20 மாநாடு மூலமும் ஊடக அச்சம் நீடித்து வருவதை உலகம் அறிந்துவிட்டது.

## :.ப்ளாஷ்பேக்





சுந்தரராஜன்

### வாளேந்திய தளபதி!

2003-ஆம் ஆண்டு திருப்பரங்குன்றத்தில் நடைபெற்ற கழகப் பொதுக் கூட்டத்துக்கு அன்றைய இளைஞர் அணி செயலாளரும் இன்றைய முதலமைச்சருமான கழகத் தலைவர் தளபதி அவர்கள் வருகை தந்து எழுச்சி உரையாற்றினார். அப்போது இன்றைய மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் அண்ணன் கோ.தளபதி அவர்களும், மேனாள் மாவட்டச் செயலாளர் அண்ணன் பொன்.முத்துராமலிங்கம் அவர்களும் உடனிருந்தனர். அந்த நிகழ்ச்சியில், வணக்கத்துக்குரிய கழகத் தலைவர் தளபதி அவர்களுக்கு திருநகர் பேரூர் இளைஞர் அணி சார்பாக, வீரவாள் ஒன்றை பரிசாக வழங்கினோம்.

**-சுந்தரராஜன்,**
**வட்டக் கழகச் செயலாளர்,**
**மதுரை தெற்கு மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண்: 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### மனமாற்றம்—வெளியேற்றம்

**1972-ஆம் ஆண்டு, கழகத்துக்குள் எம்.ஜி.ஆரால் குழப்பம் ஏற்பட்டது. ஒரு மாபெரும் இயக்கத்தில் பிளவு ஏற்பட்டு விடக்கூடாதென எண்ணிய முக்கியத் தலைவர்கள் சிலர் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். நிலைமையைச் சீராக்குவதைக் கலைஞரும் ஏற்றுக் கொண்டார். நாஞ்சில் மனோகரன், முரசொலி மாறன் ஆகியோர் எம்.ஜி.ஆரிடம் சென்று பேசினர். அண்ணாவால் உருவாக்கப்பட்ட இயக்கம் பிளவுபடக் கூடாதென முதலில் ஏற்றுக்கொண்ட எம்.ஜி.ஆர், பின்னர் மனமாற்றம் அடைந்து கழகத்தில் இருந்து வெளியேறினார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 241




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131